காவேரி

169

JANUARY-1945

தாரண-தை

22 JAN 1945
MADRAS

Widest Circulated Monthly

உயர்தரமான

கோட்டிங்ஸ்
ஷர்ட்டிங்ஸ்
பனியன்கள்
புடவைகள்
வாயில்கள்
பிரிண்டட் துணிகள்

மற்றும் சகலவிதமான துணிகள்
நவீன மோஸ்தரில் தேவைக்கு

பன்ஸால் டிரேடிங் கம்பெனி

No. 2, சின்னகடைத்தெரு
தெப்பக்குளம் போஸ்ட்
திருச்சினுப்பள்ளி.

மஹாமகம்

அகில இந்திய ஸ்வதேசி பொருட்காட்சி

கும்பகோணம்

12-2-45 முதல் 8-3-45 வரை

உங்கள் வியாபாரத்தை பெருகச்செய்ய
நீங்கள் தயாரிக்கும் பொருள்களை விளம்பரப்படுத்த } அரிய சந்தர்ப்பம்
லக்ஷக்கணக்காகக் கூடும் மக்களுக்கு அறிமுகப்படுத்த

ஸ்டால்களுக்கு முந்துங்கள்.

சுமார் 10 லக்ஷம் ஜனங்கள் கூடும் தருணம்

அகில இந்திய சங்கீத மஹாநாடும்

நடைபெறுகிறது.

பிரபல வித்வான்களின் இன்னிசை
கானத்தையும் அனுபவிக்கலாம்

**வியாபாரிகள், சங்கீத வித்வான்கள், பொதுஜனங்கள்
எல்லாருடைய ஒத்துழைப்பும் கோரப்படுகிறது.**

விபரங்களுக்கு

Dr. M. V. தியாகராஜ அய்யர்,
தலைவர்.

C. ராமசாமி முதலியார்,
C. L. ஆராவமுத அய்யங்கார்,
காரியதரிசிகள்.

MADRAS

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

ஸிடி ஆபீஸ்கள்:

சைனு பஜார், மாம்பலம், மைலாப்பூர்,
— திருவல்லிக்கேணி, பெரியமேட் —

பிராஞ்சுகள்:

அமதலவால்ஸா	மதுரை	தாட்பள்ளிக்கூடம்	திலாறு (சிகாகோல்)
அனகாபள்ளி	சாலூர்	தஞ்சாவூர்	வேலூர்
சிதம்பரம்	மருடேரு	பார்வதிபுரம்	விஜயபுரம் (திருவாரூர்)
காஞ்சீவரம்	மாயவரம்	திருநெல்வேலி ஜங்ஷன்	விருதுநகர்
ஈரோடு	பாலக்காடு	திருநெல்வேலி டவுன்	விஜயநகரம்
காரைக்குடி	புதுக்கோட்டை	திருச்சினுப்பள்ளி	சித்தூர் (கோச்சி)
கும்பகோணம்	சீயாழி		

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்கள் நடத்தப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

ஜவுளி தினுசுகள்

:: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.
(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.



பஞ்சநதி பாயும் பஞ்சாபில்—
தேநீர் அருந்தும் நேரம்

கோடைக்காலம் பகலில் உஷ்ணம் அதிகம். தாங்கமுடிகிறதில்லை. உஷ்ணத்தை மாலை நேரங்களில் பஞ்சாபிகள் உணராமலிருக்க வீட்டுக்கு வெளியே அநேகமாய் அம்பலத் தோப்புக்களில் பொழுதுபோக்குவது வழக்கம். சூரியாஸ்தமனம் ஆனபின்பு, குளிர் தாக்கிவிடாதபடி அவர்களைப் பாதுகாப்பது தேநீர்.

பால், சீனியுடன் கலந்துவைத்த தேநீர் சிங்காரமான லோட்டாக் களில் இருந்து வினியோகிக்கப்படுகிறது. திடகாத்திரமுள்ள தேகமும், தாராளமான மனதும் உள்ளவர்கள் நிறைந்த நாடல்லவா? இங்கே கோப்பைகளில் தேநீர் அருந்துவது திருப்திகொடுப்பது இல்லை. பித்தளைச் செம்புகளிலோ அல்லது பெரிய கண்ணாடி டம்ளர்களிலோ தேநீர் அருந்துவதுதான் இங்கு உள்ள நாகரீகம்.

பஞ்சாப் ஆடவர்கள் பெண்டிர்களுடைய உடை வனப்பும், தோப்புக் களின் இனிய காட்சியும் கண்டவர் கண்முன் என்றுந் தாண்டவம் ஆடிக் கொண்டே இருக்கும்.

இந்தியாவின் மற்றப் பிரதேசங்களைப்போலவே, இங்கும் புத்தப்புதிய ப்ரூக் பாண்ட் தேயிலைக்கு நல்ல கிராக்கி இருக்கிறது.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

ஒரு புராதன வைத்யம்

இவ்விதமாகவே நல்ல
செய்திகள் பரவுகின்றன.
வுட்வர்ட்ஸ்கிரைப் வாட்டர்
குழந்தைகளை நன்கு
பாதுகாக்கிறது.

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

J-WW111-111 W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI,**

12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

பொருளடக்கம்

தாரண மலர் 4 | தை இதழ் 6

பொருள் வினியோகம் ...	7
வன்னக் களஞ்சியம்	9
கதம்பம் ...	12
நோயற்ற வாழ்வு ...	16
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் — ராமையா.	20
அவளும் அவனும் ...	25
இருண்ட உலகம் ... — பி. எஸ் கிருஷ்ணசாமி	29
சில்பி—ரா. வீழிநாதன். ...	41
தெய்வ நம்பிக்கை ... — வேங்கடலட்சுமி	45
காடம்பாடி—1854—சாரி ...	52
இதென்ன உலகம்—கிருத்திவாஸ்	58
மிஸ் வித்யா குமாரி ... — எம். எஸ். கமலா.	65

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2/9017



வின்ஸென்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.

வின்ஸென்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய் பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்ருய் அடைந்திருக்கும் **வின்ஸென்ட் கம்பெனியாரால்** தயார் செய்யப்பட்டவை. மேலும் ஷை சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழா காலங்களிலும் விருந்தினர்களுக்கு சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

வான்கார்ட் பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

308-309, லிங்கசெட்டி தெரு, மதராஸ்

நெருப்பு—மோட்டார்—கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு & எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸ்ஊம் செய்யப்படும்.

எமது ஏஜண்டுகளாகவும், ஆர்கனைஸர் அல்லது பிரதம ஏஜண்டுகளாக வேலை செய்ய அனுபவமுள்ள நல்லவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உண்மையில் திறமையுள்ளவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம்.

H. D. ராஜா,
ஜெனரல் மானேஜர்.

காவேரி

தாரண மலர் 4	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்	தை இதழ் 6

பொருள் வினியோகம்

தேச வருமானத்தைப் பெருக்கி, மக்களின் சுக வாழ்வை ஏற்படுத்தப் பம்பாய் பிரமுகர்களால் பதினைந்து வருடத் திட்டம் ஒன்று வெளியிடப்பட்டதல்லவா ?

வருமானத்தைப் பெருக்கினால் மட்டும் மக்கள் சுக வாழ்வு வாழ முடியாது. தேச வருமானம் சரியான முறையில் நியாயமாக மக்களுக்கு வினியோகிக்கப் படவேண்டும். அப்பொழுதுதான் தேச நலம் கைகூடும். பணத்தின் பெருத்த குணம் பணம் படைத்தவர்களிடத்தில் குவிவது; ஏழைகளைத் திரஸ்கரிப்பது. 'இது தெய்வச் செயல். பணக்காரர்கள் செய்த பூர்வ ஜன்ம புண்ணியம்' என்பதை நவீன உலகம் ஒத்துக்கொள்வதில்லை. இப்போதுள்ள சட்ட திட்டங்களினால் தான் இப்படிப் பணம் சிலநபர்களிடமே சரண் புகுகிறது, அரசாங்கம் அதில் தலையிட்டு ஒழுங்கு படுத்தினால் வறுமையில் பெருவாரியான மக்கள் உழல நேரிடாது என்பதை ருஷ்யா போன்ற பெரிய தேசங்கள் பிரத்தியக்ஷமாக நிரூபித்துவிட்டன. எனவே ஒவ்வொரு தேசமும், இன்று தேச வருமானத்தை நியாயமாக வினியோகிப்பதில் புகுந்துள்ளது.

நம் தேசத்திலும், பம்பாய் திட்டத்தின் பலனாக நாட்டில் செழிக்கும் செல்வத்தைப் பெருவாரியான மக்கள் அனுபவிக்கச் செய்ய எத்தகைய பொருளாதார அமைப்பு அவசியம் என்பதைக்குறித்து, பம்பாய் திட்டத்தின் இரண்டாம் பகுதியாக ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார்கள். அபேதவாதக் கொள்கையையும் பல அம்சங்களில் அடிப்படையாகக் கொண்டுள்ளது இத் திட்டம்.

முதலாளித்துவம் அடியோடு ஒழிய வேண்டும் என்ற கொள்கையை இத் திட்டத்தைத் தயாரித்த பம்பாய் பிரமுகர்கள் ஒப்பவில்லை. பிரத்தியேக முயற்சிக்கும், முன்னேறும் ஊக்கத்திற்கும், அம்முறை நிகரற்றதாக இருப்பதால், இந்தியப் பொருளாதார அபிவிருத்தியில் அதைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற கொள்கைதான் இத் திட்டத்தைத் தயாரித்தவர்களுக்கு. ஆனால் இச் சலுகையைத் துஷ்பிரயோகம் செய்யாமல் கண்காணிப்பதிலும், பொருளாதாரப் பொதுக் கொள்கைகளை நிர்ணயிப்பதிலும், அதை அமுலுக்குக் கொண்டுவந்து விருத்தி செய்வதிலும், கவர்மெண்டார் தலையிடுவது அவசியமென ஒப்புக்கொண்டு திட்டத்தை விவரித்திருக்கிறார்கள்.

இந்தியாவில் தற்போதுள்ள முதலாளித்துவத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதார அமைப்பில் தேசீய வருமானம் திருப்திகரமாக மக்களுக்கு வினியோகிக்கப்படவில்லை என்பதை அடிப்படையாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதை மாற்றி அமைக்கப் புரட்சிகரமான முறைகளைக் கையாளாமல் சில காலக்கிரம விதிகளை அனுஷ்டிக்கச் சிபார்சு செய்திருக்கிறார்கள். அவையாவன:-

(1) மரண வரி முதலிய வரிகளை விதித்து, பெருத்த பணக் குவியல்களைக் குறைப்பது.

(2) நிலவரித் திட்டத்தை அடியோடு மாற்றி அமைப்பது.

(3) சிறிய தொழிற்சாலைகளையும், கைத்தொழில்களையும் கவர்மெண்டாரின் உதவியின் பேரில் செழிக்க வைப்பது.

(4) கூட்டு நிதிக் கம்பெனிகளில் உள்ள பங்குகளைப் பெருவாரியான நபர்களுக்கு வினியோகிப்பது; தொழிற்சாலைகள் ஒரே மாகாணம் அல்லது குறிப்பிட்ட இடங்களில் இல்லாமல் பல இடங்களில் அமைப்பது.

(5) மூலத் தொழிற்சாலைகள், போக்கு வரத்துச் சாதனங்கள் இவைகளை எடுத்துக் கொண்டு கவர்மெண்டாரே நடத்துவது; அல்லது அவைகளைச் சட்ட திட்டங்களின் மூலம் சரிவர நடக்கச்செய்வது.

இவையெல்லாம் நாட்டின் வருமானம் பெருவாரியான மக்களுக்குக் கிட்டும்படி செய்யும் சாதனங்கள்.

கூலி இவ்வளவுக்குக் குறைவில்லாமல் அளிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனை வேண்டும். விலைவாசிகள் நிர்ணயம், டிவிடண்டு கட்டுப்பாடு, வரி முதலிய உபாயங்களினால் லாபத்தை ஒரு வரம்பிற்குட்படுத்துவது; ஆனால், இதைச் செய்வதில் வியாபார ஊக்கத்தையும், தொழிற் பெருக்கத்தையும், குலைத்துவிடாதவாறு போதிய லாபம் முதலாளிகளுக்குக் கிட்டும்படியாகச் செய்ய வேண்டும். இவை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றுஞ் சில முக்கிய சாதனங்கள்.

நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் வசதியான வாழ்க்கை நடத்த இரண்டுவித உபாயங்கள் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றன. 1, ஒவ்வொரு நபருடைய வருமானத்தையும் அதிகரிக்கச் செய்வது. 2. வாழ்க்கை நடத்துவதற்காகும் செலவுத் தொகையைக் குறைக்க முயலுவது; அதாவது அவ்வசதிகள் மலிவாகக் கிடைக்கும்படி செய்வது.

வருமானத்தை அதிகரிப்பதற்காகக் கையாளவேண்டிய திட்டங்கள்: வருஷம் பூராவும் வேலை கிடைக்கும்படி செய்வது; வேலைத் திறனை அதிகரிப்பது; நகரம் குக்கிராமம் இங்குள்ள கூலி விகிதத்தை உயர்த்துவது; விவசாயப் பொருள்களை நிர்த்தாரணம் செய்வது; நிலத்தைச் சாகுபடி செய்பவனை நிலச் சொந்தக்காரனாகச் செய்வது; நில வரியை மாற்றி, அதன் பளுவைக் குறைத்து, வருமான வரியின் அடிப்படையான கொள்கைகளை இதில் புகுத்துவது.

வாழ்க்கை நடத்தும் செலவைக் குறைக்கும் திட்டங்கள்: ஆரம்ப நடுத்தரக் கல்வி இனாமாக அளிப்பது; ஆஸ்பத்திரிகளில், வைத்தியம் எல்லோருக்கும் இனாம் என்று விதிப்பது; எலெக்ட்ரிஸிடி, போக்கு வரத்து இந்த ஸ்தாபனங்களுக்குக் கவர்மெண்டார் பண உதவி செய்து, அவைகளை மலிவாக மக்களுக்குக் கிட்டும்படி செய்வது.

மேலே கண்ட சீர்திருத்தங்களையெல்லாம் கவர்மெண்டு உண்டு பண்ணக் கூடும். இதற்கெல்லாம் பணம் ஏது? இது பிரமாதமான காரியமல்ல. யுத்தத்திற்கு என்று கோடிக் கணக்காகப் பணம் திரட்ட முடியுமானால், இத் திட்டங்களுக்கென்று, மக்களிடத்திலிருந்து அவர்கள் முழுச் சம்மதத்தின் பேரில் போதிய பணம் திரட்ட முடியும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள், பம்பாய் திட்டம் தயாரித்த பிரமுகர்கள்.

இம் முழுத் திட்டம் அமுலுக்கு வரும்வரை இன்று இருந்து வரும் கவர்மெண்டு கட்டுப்பாடுகள் சரிவரத் திருத்தி அமைக்கப்பட்டு, அமுலிலிருந்துவர நேரிடும்.

திட்டம் எப்படி? எல்லோரும் சிந்தித்து உணரவேண்டிய விஷயம். அநேக நல்ல அம்சங்கள் உள்ளன. நாட்டின் முன்னேற்றத்தைக் கருதியுள்ள ஒவ்வொரு நபரும், இதைத் தீவிரமாகப் பரிசிலனை செய்து பார்க்கவேண்டும்.

தங்கள் குழந்தை

புஷ்டியாக வளருவதற்கு
"கிட்டி டோன்"
கொடுங்கள்.
விவரங்களுக்கு:

INDIAN INSTITUTE OF HOMOEOPATHS KUMBAKONAM

வன்னக் களஞ்சியம்

22 JAN 194
MADRAS

ஆர். கே. விசுவநாதன்

மாலை நேரத்தில் இயற்கை அன்னையின் நிறச்சோலையைக் கண்டு களித்த பாரதியார் 'எங்கு நோக்கிடினும் ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்'' என்று பாடுகிறார். கவிகளைப்போல இயற்கையை அனுபவித்துப் பிறருக்கு எடுத்துக் கூறும் வன்மையைப் பெற்றிராவிடினும், ஒவ்வொருவரும் நிறச்சோலையைக் கண்டு வியப்பும் ஆனந்தமும் அடைவது திண்ணம். இயற்கையில் தோன்றும் நிறங்களின் வகை பல. பக்ஷிகளையும், புஷ்பங்களையும் பார்க்கப் பார்க்க இவ்வகைகளைக் கணக்கிட முடியுமாவென்றுகூட ஐயம் எழலாம். உயிருள்ள எல்லாப் பொருள்களும் நிறத்தின் மூலம் தம் செழிப்பை வெளியிடுகின்றன. பெண்கள் அணியும் பல நிற ஆடைகளையும், ஆபரணங்களையும், விசேஷ தினங்களில் அவர்கள் போடும் கோலங்களையும் பார்க்கும்பொழுது தம்முடைய வாழ்க்கையில் நிறம் பெற்றுள்ள இடத்தை உணரலாம். நிறத்தின் வசிய சக்தியை நன்கு உணர்ந்து நம் முன்னோர்கள் ஓவியக் கலையைப் போற்றி வந்திருக்கின்றார்கள். நிறத்தின் பௌதிக இயல்புகளைப்பற்றி இக் கட்டுரையில் கவனிப்போம்.

நியூட்டன் என்ற பேரறிஞர் ஒரு சோதனை செய்தார். இவர் ஓர் இருட்டறையினுள்ளே ஒரு சிறு துவாரத்தின் வழியாகச் சூரிய வெளிச்சத்தைப் புகச்செய்து, அதன் வழியில் ஒரு கண்ணுடி முப்பட்டையை (Prism) வைத்து, அதன் பின்னல் ஒரு திரையையும் வைத்து, திரையின்மீது பல நிறங்கள் கொண்ட ஒரு வர்ணப் பட்டையை அடைத்தார். இதில் தோன்றும் நிறங்களின் வரிசை வானவில்லில் இருப்பதைப்போல் அமைந்திருப்பதையும் கண்டார். எனவே சூரிய வெளிச்சத்தில் சிவப்பு—ஆரஞ்சு—மஞ்சள் — பச்சை — நீலம் — அவுரி—ஊதா என்ற பலநிற ஒளிகள் இருக்கவேண்டுமென்று உணர்ந்தார். இந்நிறங்களை ஒன்று சேர்த்தால் வெண்ணொளி உண்டாகிறதா என்று பார்த்தார். இதற்கு ஒரு வட்ட வடிவமுள்ள அட்டையை எடுத்து, அதன் பரப்பைப் பலபகுதிகளாகப் பிரித்துக்கொண்டார். ஒவ்வொரு பகுதியிலும் முறையே சிகப்பு முதல் ஊதா வரையில் உள்ள நிறங்களைப் பூசினார். அட்டையை வேகமாகச் சுற்றி அதன் பரப்பு வெண்ணிறமாகத் தோன்றுவதைக் கண்டார். பின்னர் நிறத்துக்கும் ஒளிக்கும் உள்ள சம்பந்த்தை ஆராய தொடங்கினார்கள். இதற்கு முதலில் ஒளி எவ்வாறு பரவுகிறது என்று அறியவேண்டியது அவசியம். நீரில் செல்லும் அலைகளை அனைவரும் கவனித்திருக்கலாம். அவை செல்லுங்கால் நீர்ப் பரப்பில் சில இடங்கள் உயர்ந்திருப்பதையும் சில இடங்கள் தாழ்ந்திருப்பதையும் கவனிக்கலாம். உயர்ந்து தாழ்ந்து இருப்பதையே நாம் அலைவடிவம் என்று கூறுகிறோம். அடுத்தடுத்துள்ள இரண்டு உயர்ந்த பாகங்களினிடைத் தூரத்தை அலை நீளம் (wave length) என்று கூறுவார்கள். இத்தூரம் அதிகமாயிருப்பின் நீண்ட அலைகள் என்றும் குறைவாயிருப்பின் குறுகிய அலைகள் என்றும் கூறுவது வழக்கம். சோதனையின் வாயிலாக ஒளிக்கிரணங்கள் எல்லாம் விசும்பில் ஏற்பட்ட அலைகள் என்று அறிந்தார்கள். நீர் அலைகளுக்கு இருப்பதுபோல ஒளி அலைகளுக்கும் பல்வேறு நீளங்களுண்டு என்று அறியலாம். மேலும் ரேடியோ அலைகள் போல ஒளி அலைகள் மின் காந்த அலைகளே என்று உணர்ந்தார்கள். மின்காந்த அலைகளில் (Electro magnetic waves) பெரும் பகுதி நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஊதா முதல் சிகப்பு வரையில் உள்ள பகுதி மட்டுமே புலனுகின்றது. இவ்வாராய்ச்சிகளிலிருந்து ஒளியின் ஒவ்வொரு நிறத்திற்கும் ஒவ்வொரு அலை நீளம் உண்டு என்று அறியலாம். எனவே பலநிற ஒளிகளுக்கான காரணம் அலை நீளத்தின் வேறுபாடேயாகும். சிகப்பு ஒளி அலையின் நீளம் சுமாராக முப்பதினுயிரத்திலொன்று அங்குலம் என்றும், ஊதா ஒளியின் அலைநீளம் அறுபதினுயிரத்திலொன்று அங்குலம் என்றும் கண்டார்கள்.

இப்பொழுது பொருள்கள் பல்வேறு நிறங்களுடன் தோன்றுவதன் காரணத்தைச் சற்று விளக்குவோம். பொருள்கள் பெரும்பாலும் தம்மீதுவிழும் ஒளியைச் சிதறச்செய்து, அவ்வாறு சிதறிய ஒளி நமது கண்ணிலே படுவதால் நமக்குப் புலனுகின்றன. ஓர் அறையில் இரவிலே விளக்கேற்றி வைத்தால் அவ் விளக்கு வெளியிடும் ஒளியின் தன்மைக்குத் தகுந்தவாறு அறையின் சுவர்

கள், பெட்டிகள், மேஜை, நாற்காலி முதலிய பொருள்கள் நமது கண்களுக்குப் புலனுகும். விளக்கு சிவப்பு ஒளியை வெளியிடுமானுல் எல்லாப் பொருள்களும் சிவப்பாகத்தோன்றும்; நீல நிற ஒளியை வெளியிடுமானுல் எல்லாப் பொருள்களும் நீல நிறமாகத் தோன்றும். எனவே பொருள்களின்மீது விழும் ஒளியின் தன்மைக்குத் தகுந்தவாறு அவற்றின் நிறம் அமைவதைப் பார்க்கிறேம். சில பொருள்களின்மீது வெண்ணிற ஒளி விழுந்தபோதிலும் வெண்ணிறமாகத் தோனருமல் அவை பல்வேறு நிறங்களுடன் தோன்றுவதன் காரணம் யாது என்று கேட்கலாம். வெண்ணிற ஒளியில் பல்வேறு நிற ஒளிகள் அடங்கி இருப்பதை முன்பு பார்த்தோம். சிவப்புக் கண்ணுடியின்மீது வெண்ணிற ஒளி விழுமாயின், அது வெண்ணிற ஒளியில் உள்ள சிவப்பு நிற நிளியைத் தவிர மற்ற நிறங்களை உறிஞ்சி விடுவதால், கண்ணுடி சிவப்பாகத் தோன்றுகிறது. கண்ணுடியின் மீது விழுந்த ஒளியில் சிறிதளவே உட்செல்லாமல் வெளிப் பரப்பில் பிரதி பலனம் அடைந்து வருகின்றது. பெரும் பகுதி கண்ணுடிக்குள் நுழைந்து அங்கு மாறுதல் அடைந்து உறிஞ்சப்பட்ட பின்னரே திரும்பவும் வெளி வருகிறது. எனவே அதிலிருந்து வெளிவரும் ஒளி, கண்ணுடி உறிஞ்சப்படாத ஒளியே ஆகும். சிவப்புக் கண்ணுடியில் சிவப்புநிற ஒளிதான் உறிஞ்சப்படாமல் வெளி வருகின்றது. நீலக் கண்ணுடி, வெண்ணிற ஒளியில் உள்ள சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள் முதலிய நிறங்களை உறிஞ்சிவிட்டு, மிகுதியாயுள்ள நீல ஒளியை மட்டுமே வெளியிடுவதால் நீலமாகத்தோன்றுகிறது. நல்ல நீல நிறமுடைய கண்ணுடியை தூள்களாக உடைத்தால் அது நீல நிறத்தை இழந்து வெண்ணிறமாகத் தோன்றுவதைப் பார்க்கலாம். இதற்குக் காரணம் என்னவெனில் இப்பொழுது துகள்கள்மீது விழும் வெண்ணிற ஒளி முழுவதும் துகள்களுக்குள் செல்லாமல் வெளிப் பரப்பிலிருந்தே பிரதிபலனம் அடைந்து திரும்பி விடுகின்றது. எனவே கண்ணுடி சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள் முதலிய ஒளிகளை உறிஞ்சுவதற்குச் சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை. இதனுல் வெண்ணிறமாகத் தோன்றுகிறது. மேலும் கண்ணுடியின்மீது விழும் ஒளியின் தன்மைக்குத் தகுந்தவாறு அதன் தோற்றம் மாறுபடும். நீலக்கண்ணுடியை இரவில் மின்சார விளக்கிலிருந்து வரும் வெள்ளொளியில் பார்த்தால் அது கறுப்பாகத்தோன்றும். இதன் காரணத்தை அறியலாம். நீலக் கண்ணுடி சூரிய வெளிச்சத்தில் உள்ள எல்லாநிற ஒளிகளையும் உறிஞ்சிவிட்டு, நீலநிற ஒளியை மட்டுமே சிதறி அடிப்பதால் நீலமாக தோன்றுகிறது என்று பார்த்தோம். மின்சார விளக்கின் ஒளியில் சூரிய வெளிச்சத்தில் இருப்பதைபோல் நீல நிற ஒளி அமைந்து இல்லாமலிருப்பதே கண்ணுடி கறுப்பாகத் தோன்றுவதற்குக் காரணம். விலையுயர்ந்த பட்டுப் புடவைகளின் நிறச் சோபையைக் கடையிலுள்ள விளக்கில் கண்டு மயங்கி, வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து, பகலில் அவற்றைப் பார்க்கும்போது தோற்றம் மாறுவதைக் கண்டு ஏமாற்றம் அடைகின்றேம். இதன் காரணத்தையும் இப்பொழுது அறியலாம். இவ்வுறிஞ்சுதலின் விளைவாகவே இலைகளின் தோற்றமும், புஷ்பங்களின் நிறமும் அமைகின்றது என்று கூறுகிறுர்கள். புல், பூண்டு முதலிய தாவரங்கள் எல்லாவற்றிலும் உள்ள பச்சைய மூலகங்கள் (Chlorophyll molecules) இவ்வுறிஞ்சுதலுக்குக் காரணமாய் இருப்பதாகச்சொல்லுகிறுர்கள். இப்பொருளின் தன்மைக்குத் தகுந்தவாறு இலைகளில் பல்வேறு பச்சை நிறங்களைக் காண்கிறேம். இது போலவே புஷ்பங்களின் பலநிறத் தோற்றமும் ஏற்படுகின்றது. இனி, பாரதியார் கண்டு களித்த வன்னக் களஞ்சியத்தின் காரணத்தைச் சற்று விளக்குவோம்.

நம் உலகைச்சுற்றி, காற்று மண்டலமாகிய பவனம் பல மைல்கள்வரை வியாபித்திருக்கிறது. சூரிய கிரணங்கள் பவனத்தைத் தாண்டிவந்தே நம்மை அடைகின்றன. தாண்டி வரும்போது ஏற்படும் சில மாறுதல்களினுல்தான் காலையிலும் மாலையிலும் சூரியன் பொன்மயமாய், தோற்றம் அளிக்கின்றுன். இம்மாறுதல்கள் ஏன் நடுப்பகலில் ஏற்படவில்லை என்று கேட்கலாம். ஒளிக்கிரணங்கள் பவனத்தைத் தாண்டி வரும் தூரம் நடுப்பகலில் இருப்பதைக்காட்டிலும் காலை மாலை நேரங்களில் அதிகமாக இருக்கின்றது. பவனத்தினூடே செல்லும்போது பவனத்திலுள்ள துகள்கள் சூரிய வெளிச்சத்தைச் சிதற அடிக்கின்றன. இச் சிதறல், ஒளியினுடைய அலை நீளத்தையும் ஒளி செல்லும் தூரத்தையும் பொறுத்திருப்பதால் நம்மை அடையும் ஒளியின் தன்மை மாறுபாடு அடைகின்றது. நடுப்பகலில் சிதறல் சிறிதளவானதாயும் எல்லா நிற ஒளிகளுக்கும் ஏறக்குறைய ஒரே அளவினதாயும் இருப்பதால் நாம் பெறும் ஒளி வெண்ணிறமாகவே இருக்கின்றது. காலையிலும் மாலையிலும் சிதறல், சிகப்பு ஒளியில் சிறிதளவும் மற்ற நிற ஒளிகளில் அதிகமாகவும் ஏற்படுவதினுல் சூரியனின் தோற்

றம் பொன்னிறமாய் மாறுகின்றது. அக்காலங்களில் பூமியின் பரப்பின்மீதுள்ள பல நிறப் பொருள்களின்மீது விழும் ஒளியின் தன்மையும் மாறுபடுவதால் பாரதியார் கண்டுகளித்த வன்ன களஞ்சியம் ஏற்படுகின்றது. பவனத்தில் திரண்டுள்ள நீராவியும் சில நிற ஒளிகளைக் கிரகித்து நிறச்சோபையை அதிகரிக்கின்றது. இந் நீர்த்துளிகளினால் தோன்றும் மற்றொரு இயற்கை விநோதத்தைப்பார்ப்போம். சில சமயம் வானத்தில் அழகுற அமையும் வானவில் தோற்றத்தைப் அனைவரும் பார்த்திருக்கலாம். பவனத்திலுள்ள நீர்த்துளிகளில் சூரிய வெளிச்சம் படும்போது அத்துளிகள் ஒவ்வொன்றிலும் பன்முறை பிரதிபலிக்கப்படுவதால் ஒளி பல நிறங்களாய்ச் சிதறி வெளிப்படுகின்றது. துளிகள் ஒழுங்காக அமைந்திருக்கும்போது பலநிற ஒளிகளும் ஒழுங்காக அமைகின்றன. துளிகளின் அமைப்புக்கேற்றவாறும் பிரதி பலனத்தின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறும் இரண்டு, மூன்று வானவில்கள் ஒரே சமயத்தில் காணப்படலாம்.

இப்பொழுது வேறொரு வகையில் நிறத் தோற்றம் ஏற்படுவதைப் பார்ப்போம். வண்ணாத்திப் பூச்சிகளின் சிறகுகளிலும் சில பறவைகளின் சிறகுகளிலும் உள்ள நிறச் சோபையை அனைவரும் கவனித்திருக்கலாம். இதன் காரணத்தை விளக்குவோம். வெள்ளொளியிலுள்ள பல்வேறு ஒளிகளைப் பிரிப்பதற்கு முப்பட்டை ஒரு சாதனம் என்று நியூடன் சோதனையிலிருந்து நாமறிவோம். இதைப்போல மற்றொரு சாதனத்தை கண்டுபிடித்தார்கள். ஒரு சமதள கண்ணாடியில் மிக நெருக்கமாக அநேக கீற்றுக்களை வரைந்து, கண்ணாடியில் ஏற்படும் பிரதி பலனத்தைச் சோதித்துப் பார்த்தார்கள். பார்த்தபொழுது வெள்ளொளியில் உள்ள பல்வேறு நிற ஒளிகள் வெவ்வேறாகப் பிரிக்கப்படுவதைக் கண்டார்கள். இச்சாதனத்திற்குப் பல்கீற்று பளிங்கு (Plane grating) என்று பெயர். சாதாரணமாக இதன் பரப்பில் பதினாயிரக்கணக்கான கீற்றுக்கள் வரையப்பட்டிருக்கும். எனவே கீற்றுக்களின் நெருக்கத்தை உணரலாம். அதாவது அடுத்தடுத்துள்ள இரண்டு கீற்றுகளின் இடைத்தூரம் ஒளி அலையின் நீளத்துக்கு ஒத்ததாக இருந்தாலன்றி இங்கிகழ்ச்சிஏற்படுவதில்லை. இதை ஒளி விளிம்பி விளைவு (Diffraction) என்று கூறுவார்கள். வண்ணாத்திப் பூச்சியின் சிறகிலும், பறவையின் சிறகிலும் இவ்வாறு மெல்லிய கீற்றுகள் அநேகம் இருப்பதினால் அவற்றின்மீது சூரிய வெளிச்சம் விழுந்து பிரதிபலனம் அடையும்போது, பலநிற ஒளிகளாக மாறிவிடுகின்றது என்று அறிந்தார்கள். மயிலின் தோகையின் நிறச் சோபைக்கும் இதே காரணம்தான் கூறுகிறார்கள். நிறத் தோற்றங்களுக்கு இதுவரை நாம் பார்த்த காரணங்களுடன் நம்முடைய கண்களையும் மற்றொரு காரணமாக சேர்த்து கொள்ளவேண்டும். உதாரணமாக ஒருவர் சிவப்பு பொருளை நீண்டநேரம் உற்று பார்த்துவிட்டு பக்கத்திலுள்ள ஒரு வெள்ளை காகிதத்தை பார்ப்பாரானால் அது அவருக்கு நீலமாக தோன்றும். ஏனெனில் சிவப்பு பொருளை உற்று நோக்கியதன் பயனாக அவர் கண்கள் சிவப்பு நிறத்தினால் சோர்வு அடைந்தன. எனவே அவர் வெண்ணிறத்தைப் பார்க்கும்போது அதிலுள்ள சிவப்பு நிறத்தினால் உண்டாகும் உணர்ச்சி குறைவு பட்டு மற்ற நிறங்களினால் உண்டாகும் உணர்ச்சி அதிகமாகின்றது. இதனால் அவருக்கு வெள்ளைக் காகிதம் நீலமாகத் தோன்றுகிறது இச்சோர்வு நீடித்திருக்காது. சிறிது நேரத்தில் சரியாய்விடும். எப்பொழுதும் நிறங்களைத் தாறுமாறாய் உணரும் நிறக் குருடர்களும் அனேகர் உண்டு.

மங்களகரமான

பொங்கல் தினம்

•

மகிழ்ச்சிக்குறிய இச்சந்தர்ப்பத்தில், எங்கள் வாடிக்கைகாரர்களுக்கு மனமார்ந்த

— வாழ்த்துக்கள் —

•

ஸ்ரீ ராம் சாக் &

இன்டஸ்ட்ரியல் பாக்டரி

கும்பகோணம்

கதம்பம்

"பிறவாத குழந்தை"

(நாடகம்)

நடிகர்கள்: மிஸ்டர் சர்ச்சில்—காதலன்
,, ரூஸ்வெல்ட்—காதலி
,, பிளேக் } பத்திரிகை
,, கால்ரா } நிருபர்கள்

காட்சி 1.

ரூஸ்:— நாதா! இவ்வளவு காலம் நான் தங்களுடன் கூடிக் கலந்தும் ஓர் அருமைக் குழந்தை பிறக்காத குறை என் மனதைவாட்டு கின்றது! சமுத்திர ஸ்னானம் செய்தால் பலன் கிடைக்கலாமென்று பெரியோர் மொழிகின் றனர்.

சர்:— கண்ணே? குழந்தை பிறந்தால் வீண் சங்கடம். இப்படியே உல்லாசமாக நாம் காலத்தைக்கடத்தி வருதலே உத்தமம்.

ரூஸ்:— (சற்றே கோபமாக) நான் மாட் டேன். உலகத்தோர் என்னை மலடியென ஏசுகின்றனர்; அவமானம் தாங்கமுடியவில்லை; வாருங்கள்; கடல்மீது ஆனந்தமாகச் செல் வோம்; கடல் நீரில் கைகால்களையாவது நனைத்துப் புனிதமடைவோம்.

சர்.— பேதாய், நான் கூறுவதைச் சற்றுக் கவனி; உலகத்தோர் சொல்லுக்கு நாம் ஏன் கவலைகொள்ளவேண்டும். நம்முடைய இலாப நஷ்டங்களைப் பற்றிய சிந்தனை அவர்களுக் குண்டா? நிற்க, பிறக்கும் குழந்தை என்னைப் போன்ற அறிவுடனும் சாமர்த்தியத்துடனும் விளங்கினால் நல்லது. துர்ப்பாக்கிய வசமாக உனது அறிவையும் ஆற்றலையும் மட்டும் கொண்டுவிட்டால்? விபரீதம் விளையும்! பெற்ற தகப்பனின் மனக்கோட்டை இடிந்து விடும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கே பெருத்த கேடு விளைந்துவிடும். பெற்ற தகப்பனுக்கு அபகீர்த்தியும் அவமானமும் நேர்ந்துவிடும்.

ரூஸ்:— தாங்கள் வீணாக என்னைப் பய முறுத்துகிறீர்கள்; நமக்குப் பிறக்கும் குழந்தை நம்மைக் கைவிட்டு விடுமா?

சர்:— கண்ணே! பெண்புத்தி பின்புத்தி. அறியாமல் பேசுகிறாய்; இந்தக் காலத்தில் பிறக்கும் பிள்ளைகள் அடங்காப் பிடாரிகள். இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங் கும்! சுதந்திரம், சுதந்திரமென ஓலமிட்டுப் பெற்றோர்களாகிய நம்மைப் பரதவிக்கச் செய்துவிடும்; விடு வீண் ஆசையை.

ரூஸ்:— தங்கள் பிரசங்கத்தினால் என் மனம் மாறப்போவதில்லை. கட்டாயம் குழந்தை வேண்டும். நல்ல சுந்தர சுதந்திரக் குழந்தை யொன்றைப் பெற என் மனம் கட்டிலடங்கா மல் தவிக்கின்றது; என் குழந்தை, என் ராஜா மணி! உலகத்தில் சுதந்திரத் தீயை மூட்டிப் பிரகாசிக்கச் செய்யப்போகிறான் என் கண் மணி. இத்தரணியைப் பிரமிக்கச் செய்யப் போகிறான்.

சர்.— ஹூம் சரி, எல்லாம் விதிப்படி நடக்கும்! தேவியின் கட்டளைப்படி நடக்கத் தயார். வீண் மனவருத்தமேன்?

காட்சி 2.

(அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் பட கொன்றில் சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் ஆனந்தமாகப் பாடிச் செல்கின்றனர்)

பாட்டு (தர்க்கம்)

மோரே பாரிஸா என்ற இந்துஸ்தானி மெட்டு.

ரூஸ்.— அருமைக் குழவியை அடைய ஆசை
யாகுதே—நாதா
அவனிபோற்றும் சுதந்திரக் குழந்
தை வேண்டுதே—மனம்

சர்:— அருமைக் கிளியே! ஆசைக்கு அள
வுண்டோ—மாதே!
அந்தச் சுதந்திரக் குழந்தை என்
பது வீணாசை—எண்ணாதே

ரூஸ்:— நாதா, நாதா! நமக்குக் குழந்தை பிறந்தால் என்ன பெயரிடலாம்? இக்கடலில் அந்த ஞாபகம் உதயமானதற்காக "அட்லாண் டிக் சாஸனம்" என்று பெயரிடலாமா?

சர்:— குழந்தை பிறந்த பிறகு பார்த்துக் கொள்ளலாமே?

ரூஸ்:— போம் நாதா? ஏன் பிறக்காது? பிறந்தால்?

சர்:— உன் இஷ்டப்படியே பெயரிடுவோம்.

ரூஸ்:— நாதா. நீங்கள் வேண்டுமானால் பாருங்கள் குழந்தை மகா கீர்த்தியுடன் உலகம் போற்ற விளங்கப் போகிறான். அடிமை என்ற அவச்சொல் அவனால் நீங்கப்போகின்

றது. சுதந்திர ஒலி எங்கும் முழங்கப்போகின்றது.

சர்:— இருக்கட்டும் அடாடா என்ன இது? தண்ணீரில் விரலால் என்னசெய்தாய்? என்ன விஷமம்? உடம்புக்கு ஆகாதே?

ரூஸ்:— எழுதினேன்?

சர்:— என்ன: எழுதினுய்?

ரூஸ்:— "அட்லாண்டிக் சாஸனம்" என்று எழுதினேன்.

சர்:— பைத்தியமே போ,

ரூஸ்:— எங்கே நீங்களும் தண்ணீரில் எழுதுங்கள். பார்க்கலாம்? (சர்ச்சில் ஏதோ தண்ணீரைக் கலக்குகிருர் என்ன எழுதினீர்கள் புரியவில்லையே?

சர்:— தண்ணீரில் எழுதுவதெல்லாம் எழுதுபவர்களுக்குமட்டும்தான் புரியும். நீர்மேல் எழுத்தல்லவா? சரி, நாழிகையாகிறது, கரை செல்வோம்.

காட்சி 3.

(ரூஸ்வெல்ட் அம்மாள் வெறும் தொட்டிலை ஆட்டிக்கொண்டிருக்கிருர்).

பாட்டு

ஐயோ ஐயோ என்ற மெட்டு.

ஆராரோ ஆரிரரோ
அட்லாண்டிக் சாஸனமே! ஆளப் பிறந்தாயோ!

அகிலம் போற்றும் அருமைக்கண்மணியே!
உன்னைச் சீராக வளர்த்து நான் செம்மை அடைவேனே!

(திடீரென்று பத்திரிகை நிருபர் மிஸ்டர் பிளேக் நுழைதல்)

பிளே:— அம்மணி! நமஸ்காரம் உலகம் வியக்கும் அருமைக் குழந்தை யொன்றைத் தாங்கள் பெற்றெடுத்ததைப் பற்றியே எங்கும் பேச்சு; சற்றே குழந்தையைப் பார்க்கலாமா? (ரூஸ்வெல்ட் திடுக்கிடுகிருர்)

என்ன இது? தொட்டில் காலியாக இருக்கின்றது? குழந்தையைக் காணும் தாங்கள் சற்றுமுன் பாடி, தொட்டிலை ஆட்டினதைப் பார்த்தேனே; எல்லாம் கனவா? அம்மணி! எங்கே குழந்தை காட்டுங்கள்.

ரூஸ்:— (கண்களில் நீர் ததும்ப) அப்பா!

சேலத்தில்
கல்யாணப்பட்டுஜவுளிரகங்கள்
வாங்கச் சிறந்த இடம்

ராம விலாஸ்

396, கடைவீதி சேலம்.

★

Proprietors:
S. N. Ramaswamy Chetty & Bros.

நின்றுபோன மாதவிடாய்

எந்த முதிர்ந்த நிலையானுலும் குமாரி மாத்திரைகளை உபயோகியுங்கள். கர்ப்பத் தடை நிச்சயம். யாதொரு அபாயமுமில்லை. திருப்தி நிச்சயம். விலை ரூ. 3/-

முதிர்ந்த பிடிபடாத கேஸுகளுக்கு ரூ. 5/-
(வி. பி. பி. அணு 12 உபரி.)

Mrs. P. DEVEE, F. D. S., (C. M.)
Tollygunge, Calcutta.

கீழ்க்கண்ட ஸ்டாகிஸ்டுகளிடமும் கிடைக்கும்:—

(1) ஹாரி & ஸன்,
93, சைனு பஜார் ரோடு, மதராஸ்.

(2) நாதம் & கோ.,
மட்டஞ்சேரி, கொச்சின்.

(3) ராஜா மெடிகல் ஹால்,
31, தர்மராஜா தெரு,
பங்களுர் கண்டோன்மெண்ட்.

என் மானத்தை வாங்காதே; விளையாட்டு வினையாக முடியுமென்று நினைக்க வில்லை; என் போதாத காலம்.

பிளேக்:— அம்மணி ஏன் வருத்தம் குழந்தைக்கு என்ன நேர்ந்தது?

ரூஸ்:— குழந்தை பிறக்கவில்லை.

பிளேக்:— என்ன கபட நாடகம்? என்ன ஹம்பக், பின்?

ரூஸ்:— தவருக எண்ணுதே; அந்தமாதிரி குழந்தை வேண்டுமென்று கற்பனை செய்தேன். கணவனிடம் வெளியிட்டேன் உள்ளத்தை; உல்லாசமாகக் கடல் மீது சென்ருேம்; தண்ணீரில் அட்லாண்டிக் சாசனமென்று உணர்ச்சி வேகத்தில் எழுதினேன்; என் கணவரும் எழுதினுர், அவ்வளவே. யாரோ குழந்தை பிறந்ததாகக் கயிறு திரித்துவிட்டார்கள்.

பிளேக்:— தாங்கள் ஏன் மறுக்கவில்லை? மறுக்காவிட்டாலும் குழந்தை பிறந்ததுபோலவே, தம்பதிகள் நடித்ததின் நோக்கமென்ன? உலகத்தை ஏமாற்றவா?

ரூஸ்:— ஏதோ தவறு நடந்துவிட்டது; சமயத்தில் மதியிழந்து ஆசை தாங்காமல் உளறிவிட்டேன்; இப்பொழுதும் அத்தகைய குழந்தையைக் குறித்தே தவம் கிடக்கிறேன்.

பிளேக்:— நல்ல தம்பதிகள்! என்ன சூது? அப்பொழுதே உலகத்தோர் சந்தேகித்தனர். அவிகளுக்குக் குழந்தை பிறக்கவாவது என்று வியந்தனர்; உலகத்துக்கே அசட்டுப் பட்டம் கட்டிவிட்டீர்களே, பேஷ்.

காட்சி 4.

(சர்ச்சிலுடன் ப. நிருபர் கால்ரா பேட்டி)

கால்:— குழந்தைக்குத் தாங்களும் காரணகர்த்தா என்ற முறையில் தங்களைக் கேட்கின்றேன். அட்லாண்டிக் சாசனக் குழந்தையின் அருமைத் தந்தையே! குழந்தை என்னவாயிற்று.

சர்:— (புகை விடுகிருர்)

கால்:— சரிதான் பதில் விளங்கிவிட்டது. எல்லாம் புகை (gas), என்றுதானே சொல்லுகிறீர்கள். ரொம்ப சரி.

கல் சிலேட்டுகள் :

ஸ்பெஷல் ஸ்டோன் பாலிஷ் கல் சிலேட்டுகள், கலர் பாலிஷ் சிலேட்டுகள் 3 சைஸ்களில் கிடைக்கும். உயர்ந்த குவாலிடி.

காலேஜ் சிலேட்டுகள் :

காகிதப் பஞ்ச நாட்களில் மிகவும் அவசியமானது, 3 சைஸ்களில் சப்ளை செய்கிருேம்.

பாபு சேமியா :

உயர்ந்த குவாலிடி. நயம், மணம், குணம் சிறந்தது. பிராமணர்களால் தயாரிக்கப்பட்டது,

½ பவுண்டு }
¼ பவுண்டு } பாக்கட்டுகளாகவும் லூஸாகவும் கிடைக்கும்,

கல் குச்சிகள், காலேஜ் சிலேட்டு குச்சிகள் எங்களிடம் விசாரியுங்கள்.

தயாரிப்பவர்கள் :

தி பாபு இண்டஸ்ட்ரீஸ்

திருச்சினுப்பள்ளி.

22 JAN 194
MADRAS

The MOTORIST

and his Watch!

மோட்டார் ஓட்டுபவரும் அவர் கடியாரமும்.

தினசரி உபயோகத்தில் திருப்தியளிக்கும் கடிகாரம், மோட்டார் ஓட்டுதல், குதிரை சவாரி, கோப் விளையாட்டு, முதலிய விசேஷ காலங்களிலும் மிகவும் உபயோகமாயுள்ளது. இந்த வெஸ்ட் எண்டு கடிகாரங்கள் இப்படி உழைப்பதன் காரணம் அவை அழுத்தமாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளதே. எந்த நிலையிலும் அவை நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் ஊட்டும்.

நியூ காலிபர் "A—2"

18 காரட் கட்டித்தங்கம் ரூ. 200

ஒரு மோட்டார் ஓட்டி எழுதுகிறார்:

12 வருஷத்திற்கு முன்பு நான் வாங்கிய உங்கள் கடிகாரம் நான் இங்கிலாந்து சென்றபோதிலும் நம்பத்தகுந்த என் நண்பனாக இருந்தது.

குறித்த காலத்தில் சரக்குகள் வருவதில்லையாகையால் விளம்பரம் செய்யப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளை செய்ய சாத்தியமில்லாமல் இருக்கிறது. ஆயினும் ஸ்டாக் உள்ளவரை சப்ளை செய்வோம். பேப்பர் கண்ட்ரோல் ஆர்டரின்படி கேட்லாக்குகள் அனுப்ப இயலவில்லை என வருந்துகிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ. பம்பாய்-கல்கத்தா

WEST END WATCH CO.

BOMBAY — CALCUTTA

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமைய்யா

சென்றமாதம் நான் எழுதிய வியாசம் 'காவேரி' ஆசிரியருக்குக் கிடைக்கவில்லையாம்' ஆதலால் சென்ற மலரில் அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் பிரசுரிக்கப்படவில்லை. என்னுடைய வியாசம் தபாலில் காணுமல் போயிற்று என்று தெரிகிறது. ஆனுல், அம்மாஞ்சி இதை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிருன். ''தபால்காரர் என்னுடைய வியாசத்தைத் திரிசங்கு மண்டலத்திலிருக்கும் மஹாராஜாதி ராஜா திரிசங்கு மஹாராஜா அவர்களுக்கு அனுப்பியிருப்பார்கள்'' என்று சொல்கிருன். இந்த யோசனை எதற்காக அவனுக்குத் தோன்றிற்று என்று கேட்பீர்களோ, சொல்கிறேன். தற்காலத்தில் பழக்கத்திலிருக்கும் கர்நாடக சங்கீதம் எனப்படும் சங்கீதம் திரிசங்கு மண்டல பத்ததியைத் தழுவி இருக்கிறதென்றும், கர்நாடக சங்கீத வித்வான்களில் பெரும்பாலோர், திரிசங்கு மஹாராஜா விச்வாமித்ரரைக் கைப்பற்றி அவருடைய அனுக்கிரஹத்தால் ஒரு பிரத்தியேக சொர்க்கம் தேடிக்கொண்டதுபோல், இவர்களும் ஒரு நவீன மார்க்கத்தில் கொந்தளித்துக்கொண்டிருக்கிருர்களாம். ஆதலால், தன்னுடைய ஆஸ்தான வித்வான்களைப்பற்றி அம்மாஞ்சி யெனப்படும் ஒருவன் என்ன அபிப்பிராயப்படுகிருன் என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்காக, திரிசங்கு மகாராஜா என்னுடைய வியாசத்தைத் தம்மிடம் கொடுக்கும்படி தபால்காரருக்கு உத்தரவிட்டிருப்பார் என்று அம்மாஞ்சி அபிப்பிராயப்படுகிருன்.

இதற்கு அத்தாக்ஷியாக அம்மாஞ்சி பல விஷயங்கள் சொல்லுகிருன்; கேளுங்கள். கர்ஞடக சங்கீதத்தில் சிகரம்போல் வாய்த்தது ராகம் என்பது.அவைகளுக்கு ஜீவன் சாயையே. அவைகளைப் பாடும்போது, அவைகளிலுள்ள ஸ்வரங்களைக் கையாண்டு, சாயைகளையே முக்கியமாக வர்ணிக்கவேண்டும். மர்மமாகவும் இலேசாகவும் பிடிக்கவேண்டிய ஸ்வரங்களை ராகத்தின் சாயை மாறும்படியாகப் பாடிவிட்டால் ஒரு ராகம் மற்ருெரு ராகமாய் விடும்; அல்லது ராகம் சங்கீதத்திலிருந்து குதித்து அழுகையில்போய் நின்றுவிடும். நம்முடைய வித்வான்களுள் ஒருவர் சமீபகாலமாகப் பல ராகங்களில் இந்த நவீன வழக்கத்தைக் கைப்பற்றி இருக்கிருர். தோடி ராகத்திலும் அதிலுள்ள சில கீர்த்தனங்களிலும் தைவதம் காந்தாரம் ஸ்வரங்களை அசம்பாவிதமாகப் பிரயோகித்து, திவ்வியமான ஆஹிரி மூர்ச்சயைக் காண்பித்துப் பாடியிருக்கிருர். அவருடைய சிக்ஷையை அனுசரித்தவர்களுள் சிலர் ''மியூஸிக் அகாடமியில்'' சென்றமாதம் இரண்டு முறை பாடியதை நானும் அம்மாஞ்சியும் கேட்டோம். இதையும் அங்கீகரித்துச் சபையிலுள்ள திரிசங்கு ஸ்வர்க்கவாசிகளில் சிலர் கரகோஷம் செய்தனர். இதைப்பற்றி நான் ஆராய்ச்சி செய்ததில் விளங்கியது என்னவென்ருல், தோடியில் ஆஹிரி சாயை வரும்படியாகப் பாடுவது ஒரு நவீன சம்பிரதாயம் என்பது. ம. ஷ. சுப்பலக்ஷ்மியம்மாள் தோடியில் மேல் சஞ்சாரம் செய்து காண்பித்தது முதல், இந்த ராகத்திலும், இதுபோன்ற கன ராகங்கள் பலவற்றிலும் மத்தியகால சஞ்சாரமே கைவிடப்பட்டிருக்கிறது. மேல் சஞ்சாரத்தில் என்னென்ன ராகங்களுடைய சாயைகள்தான் கலந்து வருமோ என்பதுகூட புலப்படாமல் போய்விட்டது. தோடி மேல் சஞ்சாரத்தில் சிந்து பைரவியும், காம்போதி மேல் சஞ்சாரத்தில் செஞ்சுருட்டியும் சங்கராபரணம் மேல் சஞ்சாரத்தில் ஹமீர் கல்யாணியும், பைரவி மேல் சஞ்சாரத்தில் கரஹரப்பிரியாவும், இவை போன்ற பலவிதப்பிரயோகங்கள் பழக்கத்தில் வந்துவிட்டன. இவைகளெல்லாம் திரிசங்கு மண்டலாவாசிகளுக்கே அர்ப்பணம் என்று சொல்லவேண்டும். திரிசங்கு ஸ்வர்க்கம் ஆகாசத்திற்கும் பூமிக்கும் மத்தியில் இருப்பதாக ஐதிகம். ஆதலால்தான் அந்த ஸமஸ்தானத்திற்கு உரிய ஆஸ்தான வித்வான்கள் மேல் சஞ்சாரத்திலேயே ஈடுபட்டு ராகங்களை ஆலாபனை செய்வதாகத் தெரிகிறது, தூரதிருஷ்டியில் சாயை மாறுவது சகஜம்தானே. உயரமான ஒரு மரத்தின் உச்சாணியில் ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தால் தரையிலிருந்து பார்ப்பவருக்கு அவன் குரங்குபோலக் காணப்படுவானல்லவா?

மர்ம ஸ்வரங்களை வக்கிரமாகப் பிரயோகிப்பது கர்நாடக சங்கீதத்தில் ஒரு பெரிய அபசாரம் என்பது யாவரும் அறிந்த விஷயமே. ஆரோஹணம் அவரோகணங்களில் ஒருஸ்வரம்

இருப்பதால் மாத்திரம் அதைத் தீர்க்கமாகப் பிரயோகிக்கலாம் என்பது தவறு. இதை எப்படி நிர்ணயிப்பது என்கிறீர்களோ? கேவலம் கேள்வி ஞானத்தினாலும், வாக்கேயகர்கள் இயற்றிய கீர்த்தனங்களிலுள்ள சஞ்சாரங்களினாலும் நிர்ணயமாகச் சொல்லலாம். ஆனால் கீர்த்தனங்களின் உருவங்களையே மாற்றிவிடக் கூடிய வித்வான்களை வைத்துக்கொண்டு நாம் எப்படி க்ஷேமப்படுவது? சமீபத்தில் திருவையாற்றிலே நடந்த ஆராதனைக் கச்சேரிகளில் பிரபல வித்வான் ஒருவர் சாவேரி ராகத்தைப் பாடி, நிஷாதத்தை வக்ரமாகப் பிடித்து, அதற்குப்பின் பாடிய கீர்த்தனையிலும் அந்த வக்ரப் பிரயோகத்தை ஏற்றிவிட்டார். ஆஜானபாகுவாயிருக்கும் ஒரு மனுஷனுக்கும் நெரிஞ்சில் முள் குத்தி, அந்த இடத்தில் அழுக்குச் சேர்ந்து, அதனால் விஷப்பாண்டு வந்து, இரண்டு தினங்களில் அவன் சவமாய்விடலாம். அது போல் ஆயின் அன்றைய தினம் அந்தச் சாவேரி ராகமும் அதன் பின் பாடின திவ்வியமான கீர்த்தனையும். அன்றைய தினம் அதைக் கேட்ட தியாகய்யர்வாள் மூர்ச்சையாகி, படுத்த படுக்கையிலிருந்து இன்னும் எழுந்திருக்கவில்லை என்று இன்று காலை தஞ்சாவூரிலிருந்து வந்த ஒரு நண்பர் சொல்லி வருந்தப்பட்டார். தியாகய்யர்வாள் சமாதி அடைந்தும் இன்னும் பிரத்தியக்ஷ புருஷராகவே இருந்து வருகிறார் என்று வித்வான்கள் எல்லோரும் சமயோசிதமாகச் சொல்லுகிறார்களே தவிர அவர்களுடைய நடவடிக்கைகளில் காண்பிப்பதில்லையே என்று வருந்துகிறான் அம்மாஞ்சி. அவர் தர்பாரில் பாடின கீர்த்தனையைக் காபிராகத்திலும், காபியில் பாடிய கீர்த்தனையைத் தர்பாரிலும், சௌகரியப்படி பாடி, ஏனிப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டால், காபிராகமே அவருக்குத் தெரியாதென்றும், இப்படிச் சொல்லுவது நியாயமா என்றால் உஞ்சவிருத்தி செய்து அரிசிக்கஞ்சி குடித்த பிராமணனுக்குக் காபிவாசனையோ (Taste of Coffee) அல்லது சாயையோ (chaya in Tea) எப்படித் தெரியும் என்றும் வித்வான்கள் அனாயாசமாகச் சொல்லிவிடுகிறார்கள்! இப்படியெல்லாம் சொல்லிவிட்டு, ஜனவரி மாதம் முதல் தேதியன்று ஓட்ட ஓட்டமாய் ஓடி, திருவையாற்றில் சாடிக் குதித்து தம்பூராவைக் கையில் பிடித்து, ஐந்து பேரும் பத்து பேருமாகச் சேர்ந்து "எந்தரோ மஹானுபாவலு" என்றும், "சாதிஞ்சனே" என்றும், சமயத்திற்கு தகுந்தமாதிரி, "சமயானிகிதகு மாடலு" ஆடிவிட்டால், கர்நாடக சங்கீதத்திற்குப் பெரிய தொண்டு செய்ததுபோல் ஆகுமா?

தியாகய்யர்வாளுடைய சங்கீத பக்தியை அபிவிருத்தி செய்வதற்கும் கர்நாடக சங்கீதத்தைச் சுத்தமான நிலைமையில் வைப்பதற்கும் ஆராதனைச் சபைகளும், சங்கீத சபைகளும் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டான் அம்மாஞ்சி. தியாகப்ரும்ம ஆராதனைச் சபையைப்பற்றிப் பேசுவோம். அவர்கள் வெகுசிறப்பாகத்தான் வேலை செய்கிறார்கள் என்று ஒத்துக்கொள்ளுவோம்! ஆயினும் முக்கியமான வேலைகள் இரண்டு உண்டு. அவையாவன; முதலாவது அய்யர்வாளுடைய கீர்த்தனைகள் எல்லாவற்றையும் சரிவரத் திருத்தி, ஸ்வரப்படுத்தி, அவைகளின் ராகச்சாயையையும் லக்ஷணலக்ஷியங்களையும் நிர்ணயித்து, ஒரு புஸ்தகமாகவோ அல்லது பல கண்டங்களாகவோ பிரசுரிக்கவேண்டும்; புஸ்தகத்துக்கு அனுசரணையாகச் சம்பிரதாய வித்வான்களைக்கொண்டு (அதாவது திரிசங்கு ஸமஸ்தான ஆஸ்தான வித்வான்களல்லாதவர்களைக்கொண்டு) பாடச்செய்து, இசைத் தட்டுக்கள் எடுத்துப் பதிப்பிக்கவேண்டும். இரண்டாவது அய்யர்வாளுடைய சமாதியில் ஒரு குருகுலத்தை ஸ்தாபித்து, குரு சிஷ்ய சம்பிரதாயத்தில் கர்னாடக சங்கீதத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். இந்தக் குரு குலம் வயோதிகர்களாகி, சாரீர சம்பத்தும் தேகவலிமையும் குன்றி இருக்கும் வித்வான்களுக்கு ஒரு பிஞ்சராபோல் மாதிரி விளங்கவேண்டும் வரும்படி குறைந்திருக்கும் அத்தகைய வித்வான்களுக்குக் குருகுலத்தால் சிறிது சம்ரக்ஷணை ஏற்படும். அதே சமயத்தில் அவர்களுடைய வித்வத் அனுபவம் குருகுலத்திற்கு உபயோகமாக இருக்கும். இந்தக் கைங்கரியம் தியாகபிரும்ம ஆராதனைச் சபையாருடைய மனோபாவத்தில் இருப்பதாகத் தெரிகிறதே ஒழிய, அவர்களுடைய நடவடிக்கையில் இதுவரையில் காணோம். ரோசமுள்ளவர்களாய் இருந்தால் இனிமேலாவது ஏற்படலாம்; ஆனால் இந்தக் காரியங்கள் ஒருவரால் ஆகாது; பத்துப்பேராலும் ஆகாது; ஊக்கத்துடனும் சிரத்தையுடனும் ஐம்பது பேர்கள் சேர்ந்தால் ஒருவேளையாகலாம். மியூஸிக் அகாடமியினால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள "சங்கீத கலாநிதிகள்" எல்லோரும் சேர்ந்து, வெளியேயுள்ள சங்கீத அபிமானிகளை வைத்துக்கொண்டு இரண்டு வருஷங்கள் சிரமப்பட்டால் காரியம் கைகூடலாம்! ஆனால் படாடோபத்துக்கு முந்திக்கொண்டு, வேலைக்குப் பிந்திக்கொண்டு இருக்கும் உத்தியோகஸ்தர்களை அணுகி, "மயிலே மயிலே இறகு கொடு" என்று கேட்டுக்கொண்டிருந்தால் ஒரு காரியமும் நடவாது. முதலாவது உத்தியோகஸ்தர்களிடமிருந்து பண ஒத்தாசை ஒன்றும் கிடைக்காது. இரண்டாவது அவர்களுடைய சௌகரியத்தை அனுசரித்து நடக்கவேண்டியிருந்தால் சர்ச்சை வேலை ஒன்றும் அபிவிருத்தியாகாது; மூன்றாவது படிப்படியாகவும் பலபேர்களை அனுசரித்தும், பல இடங்களில் யுக்தியாகச் சேகரிக்கவேண்டிய உருப்படிகளைச் சேமித்தும், செய்யவேண்டிய காரியத்துக்கு, உத்தியோகஸ்தருடைய பழக்கவழக்கங்கள் இடம் கொடுக்க மாட்டா! இதே காரியத்தில் ஊக்கமுள்ளவர்கள் இந்தக் கைங்கரியத்தை எடுத்து, தம்மை மறந்து, பொது நலம் கருதிச்செய்யவேண்டுமே அல்லாது, கட்டின வீட்டிற்குப் பணிக்கை சொல்லும் உத்தியோகஸ்தர்கள் இதைச் செய்ய

முடியாது. ஆனால், ஒரு ராஜாங்கத்தின் ஆதரவில் இத்தகைய காரியம் நடக்கும். இதற்கு அத்தாட்சி வேணுமென்றால், திருவாங்கூர் சமஸ்தானத்தைப் பாருங்கள். ஐந்தாறு வருஷங்களுக்குள் மஹாராஜா ஸ்வாதித் திருநாளுடைய கீர்த்தனைகளைப் புஸ்தக ரூபமாய்ப் பிரசுரித்து, தமிழ் நாடெங்கும் பரவச் செய்திருக்கிறார்கள். சென்னை மியூஸிக் அகாடமியில் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் போட்டிக்கு ஏராளமான நபர்கள் வந்திருந்தனர். ஆனால் க்ஷேத்திரஞர் தினத்தன்று ஒரு நபர்கூட காணப்படவில்லை. தற்காலத்தில் க்ஷேத்திரஞ பதங்கள் பாடுவதற்கு வலை போட்டுத் தேடவேண்டியிருக்கிறது. ஆனால் மயிலாப்பூர் முழுவதிலும் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் கீர்த்தனைகளைப் பாடத் தெரியாத சிறுமி ஒருத்திகூட இல்லையென்று நிச்சயமாகச்சொல்லாம். நமது நண்பர் செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் ஒரு முறை பட்டணத்துக்கு வந்து, ஒரு கச்சேரி செய்துவிட்டால் அதற்கப்புறம் பதினைந்து நாட்களுக்குள் அவர் பாடிய உருப்படிகளெல்லாம் மயிலாப்பூரில் ஒவ்வொரு குழந்தைக்கும் பாடாந்தரம் ஆய்விடுகிறது. செம்மங்குடியைப் போன்ற வித்வான் ஒருவர் தியாகய்யர் தொண்டிலும், தீக்ஷிதர் தொண்டிலும், க்ஷேத்திரஞர் தொண்டிலும் ஈடுபட்டு, திருவாங்கூர் சமஸ்தானத்தைப்போன்ற ஒரு சமஸ்தானம் இந்த மூவர்க்கும் ஏற்பட்டால், கர்நாடக சங்கீதத்திற்கு அளவில்லாத அபிவிருத்தி ஏற்பட்டுவிடும். அத்தைக்கு மீசை முளைத்தால் சிற்றப்பா ஆவாள். ஆனால் அத்தையாகிய தியாகப்ரும்ம ஆராதனைக்கு வயதோ 98. இத்தனை வயதிற்குமேல் மீசை முளைக்குமா? இந்தக் கேள்விக்குப் பதில் "கேசவர்த்தினி"தான் சொல்லவேண்டும்.

பட்டணத்திலுள்ள சங்கீத சபைகளைப் பற்றித்தான் அம்மாஞ்சியின் அபிப்பிராயம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமே! கச்சேரி சேமிப்பது, பணம் வசூல் செய்வது, 'ரிஸர்வேஷன்கள் செய்வது' ரிஸர்வேஷன் செய்தவர்களுக்கு முன் வரிசையில் உத்தியோகஸ்தர்களை உட்காரவைப்பது, சங்கீதப்போட்டிகள் ஏற்பாடு செய்வது, அந்தப்போட்டிகளில், "ஊமைக்கு உளறுவாய் உற்பாத பிண்டம்' என்ற கொள்கையில் பரிசுகள் கொடுப்பது, பேசுவது, டீபார்ட்டிகள் செய்வது, புகைப்படம் பிடிப்பது, ஒருவர் தோளை ஒருவர் தட்டிக்கொடுப்பது, இவையெல்லாம்தான் சங்கீதத்தொண்டு என்பது. சபைகள் வருஷம் முழுவதும் இந்தக்காரியத்தைச் செய்தால், மியூஸிக் அகாடமி வருஷத்தில் ஒரு முறை பத்து நாளில் வஸந்த உற்சவம் மாதிரி செய்துவிடுகிறார்கள். சென்ற மாதம் நானும் அம்மாஞ்சியும் அகாடமியின் மத்தியான சர்ச்சைக்கு இரண்டு நாட்கள் போயிருந்தோம்; வெகு விநோத விஷயங்களைக் கேட்டோம். காபி, தர்பார், கர்நாடக காபி, என்ற மூன்று ராகங்களின் லக்ஷணங்களைப் பற்றியும் ஒரு மத்தியானம் சர்ச்சை நடந்தது. தீர்மானம் என்ன தெரியுமா? "அடுத்த வருஷம் நான் பாடம் பண்ணிக்கொண்டு வருகிறேன், தம்பூராவையும் எடுத்துக்கொண்டு வருகிறேன். அதுவரையிலும் சும்மா இருங்கள்" என்று சொல்லிவிட்டார், அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர். சுமார் 50 வித்வான்களும், 200 சங்கீத அபிமானிகளும் சேர்ந்து நடத்தும் சர்ச்சையில், நாலு உருப்படிகளைப் பாடிக் காட்டி, ராகச் சாயையை நிர்ணயிப்பதற்கு அன்றைய தினம் ஸௌகரியம் இல்லை என்றால் கர்நாடக சங்கீதம் முந்நூறு வருஷமாக நம் நாட்டில் வளர்ந்து வருகிறது என்று மாத்திரம் தோளைத் தட்டிக்கொள்வதற்கு நமக்கு யோக்கியதை என்ன என்று கேட்கிறான் அம்மாஞ்சி. முன் யோசனை இல்லாமலும் எந்தெந்த ராகங்களில் சர்ச்சைகள் செய்ய உத்தேசம் என்று பிரசுரப்படுத்தாமலும், திடீர் என்று சர்ச்சையை ஆரம்பிப்பதில் உள்ள அசம்பாவிதம் இதுதான். இத்தகைய சர்ச்சை பரிகாசத்திற்கு இடமாகிறது. மற்றொரு தினம் "ஸ்ருதிபேதம்" என்ற விஷப்பரீக்ஷையைப்பற்றித் தர்க்கம் நடந்தது. ஒரு தினம் அல்ல, இரண்டு தினம், மூன்றாவது தினமும் சிறிது இருந்தது. ஸ்ருதிபேதத்திற்குச் சாஸ்திரத்தில் ஆதாரம் உண்டு என்று சிலர் சொன்னார்கள். எத்தகைய ஆதாரம்? ஓர் ஆதார ஸ்ருதியில் ஒரு ராகத்தைப் பாடும்போது, ஆதாரத்தை மாற்றி வேறொரு சஞ்சாரம் தொடங்கினால் ராகச் சாயை மாறும் என்பதாம்! என்ன சாஸ்திர ஆதாரம்! இதற்கு உதாரணங்கள் என்ன, தர்க்கங்கள் என்ன! கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யர் செய்தார் என்றார் சிலர்; பிடில் கோவிந்தசாமிப் பிள்ளை செய்தார் என்றார் மற்றும் சிலர். கடைசியாக நிர்ணயம் என்ன? ஸ்ருதிபேதம் ஒரு பெரிய காரியம்; அதை ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும்; ஏதோ பத்துப்பேர் மகா ரஸிகர்களாயிருக்கிற காலத்தில் ஒரு சிடிகை நேரத்தில் அற்புதமான வித்தைமாதிரி செய்ய வேண்டுமேயல்லாது, விபரீதமாகச் செய்யக் கூடாது என்றனர்! ஆனால் தற்காலத்தில் கச்சேரிகளில் சதாசர்வகாலம் செய்கிறார்களே அது தவறுதானே, என்று ஒரு பட்டவர்த்தனப்பேர்வழி கேட்டார். அதற்குத் தைரியமாகப் பதில் சொல்லமாட்டோம் என்றார்கள் சங்கீதசபைகளுக்குத் தலைமைபெற்ற அகாடமி சர்ச்சை சபையார்கள்! என்ன தைரியம்! மியூஸிக் அகாடமியின் சங்கீத சர்ச்சையில் போய்க் கலந்து கொள்வதற்குக் கொஞ்சம் பயப்படவேண்டியதுதான். விஷயம் தெரிந்துகொள்ள அங்குப் போகக்கூடாது. முதலாவது கொஞ்சம் நஞ்சம் தெரிந்த விஷயமும் மறந்து போய்விடும். இரண்டாவது, ஒரு வித்வான் பேசிக்கொண்டிருக்கும்போது, வாஸ்தவமாகவே ரஸிகன் ஒருவனுக்குச் சந்தேகம் ஒன்று ஏற்பட்டு குறுக்குக் கேள்வி

ஒன்று கேட்டுவிட்டால் கெட்டது காரியம்! நாலுபேராகச் சேர்ந்து அவன்மேல் பாய்ந்து, தண்டடி தடியடிப் பிரயோகம் செய்து, அவன் தலைமேல் ஒரு தனி ஆவர்த்தம் போட்டு முப்பத்திரண்டு மொஹராவும் ஒரு தீர்மானமும் வைத்துவிடுவார்கள்! அங்குப்போனால் வாயைத்திறக்கக்கூடாது; நல்ல குணத்துடனும் நாக்குடனும் மூக்குடனும், சர்ச்சையில் கலந்துகொள்ளாமல், பொழுது போக்கி விட்டு வரவேண்டும். இது ஒரு எச்சரிக்கையாக வைத்துக்கொள்ளுங்கள்!

ஆனால் இந்தத் தீர்மானங்களையும் இலவசமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. அகாடமி தீர்மானங்களையும் டிஸம்பர் மாதத்தில் நடக்கும் கச்சேரிகளில் வித்வான்கள் இளப்பிவிடும் நூதன சம்பிரதாயங்களையும் உடனே அனுஷ்டானத்துக்குக்கொண்டு வரச் சிறுவர்கள் சிறுமிகள் தயாராயிருக்கின்றனர். எந்தக் காலத்திலோ எந்தச் சந்தர்ப்பத்திலோ கோனேரிராஜபுரம் வைத்தாவும் கோவிந்தஸாமிப்பிள்ளையும் செய்த ஸ்ருதி பேதத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, இப்பொழுது சகலரும் ஸ்ருதி பேதத்தில் இறங்கிவிட்டதுபோல் ஒரு வாரத்தில் பத்துக் கச்சேரிகளைக் கேட்டுவிட்டு, குழந்தைகள் ஜி.என்.பி. பிடி என்றும், ம.ஷ. பிடி என்றும், அரியக்குடி பிரயோகம் என்றும், செம்மங்குடி சம்பிரதாயம் என்றும், மதுரை மணி வழி என்றும், ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் விளையும் விபரீதத்தை அம்மாஞ்சி ஒரு கதையில் சொல்லுவான். ஐம்பது வயதுக்குமேல் கொண்ட ஒரு தெலுங்குப் பிராமணனுக்கு இருபது வயதில் ஒரு இளையாள் மனைவி இருந்தாளாம்; பிராமணனுக்கு விருத்தி புரோஹிதம்; சுபாவம் கொஞ்சம் அசடு. ஒருநாள் சாயந்திரம் அவர் சந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்தபோது, மனைவி பக்கத்தில் நடந்துசெல்ல, அவள் மீது அந்தத் தீர்த்தத்தைப்பரிஹாஸமாகத் தெளித்தாராம். அடுத்த நாள் காலையில் மனைவி வாசலில் சாணி ஜலம் தெளித்துக் கொண்டிருக்கும்போது, புருஷன் பக்கத்தில்போக, அவர் மேல் ஒரு சொம்பு ஜலத்தை வாரி இறைத்தாளாம். என்னடி விபரீதம் இது என்று புருஷன் கேட்க, மனைவி, ''மீரு சந்தியான்ன நீள்ளுதோ இஷண்டிரி, நேனுபேட நீள்ளுதோ அஷண்டினி,'' என்றாளாம். மற்றொரு தினம் பிராமணன் பஞ்சாங்கக் கட்டினால் அவளைத் தட்டவும், மறுதினம் காலையில் துடப்பைக்கட்டையினால் அவள் புருஷனை ஒரு வாங்கு வாங்கிவிட்டாள். பிராமணன் கூப்பாடு போடவே. மனைவி, ''மீரு பஞ்சாக்கக் கட்டுதோ அஷண்டிரி, நேனு சீபிரி கட்டுதோ இஷண்டினி'' என்றாளாம்! இந்த மாதிரியும், புலியைப் பார்த்துப் பூனை சூடிக்கொண்டதுபோலும், வித்வான்களுடைய வக்கிர ஒழுக்கங்களை 'கண்டேன்' என்று ஸகலரும் பிடித்துக்கொண்டு கந்தரகோளம் செய்கிறார்கள்என்று அம்மாஞ்சி எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருப்பான்.

ஆனந்தவிகடன் பத்திரிகையில் யார்பாடினாலும் எப்படிப்பாடினாலும் என்ன பாடினாலும் ''ரொம்ப பேஷாக இருந்தது'' என்று எழுதிவிடுவது ஒரு நல்ல சம்பிரதாயமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் சென்ற மலரில் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளைப்பற்றிக் கொஞ்சம் அதிருப்தியாக எழுதியிருப்பது அம்மாஞ்சிக்கும் கொஞ்சம் வருத்தத்தை உண்டு பண்ணிற்று. அவன் சொன்னதாவது, ''நான் முன்னேயே எச்சரிக்கை செய்தேன், வக்கில்களைப்பற்றி வேதநாயகம் பிள்ளை செய்திருக்கும் சாஹித்தியத்தைக் கச்சேரிகளில் பாடவேண்டாம் என்று! என் பேச்சைக் கேட்கவில்லை. ''பக்கத்தாத்துப்பாட்டி பதிர்ப்பேணி பண்ணலாம்'' என்று நான் செய்த சாஹித்தியத்தையாவது பாடாந்தரம் செய்திருந்தால், இவ்வளவு விபரீதம் வந்திருக்காது. ஸ்ரீமதி பட்டம்மாள் இனிமேலாவது பத்துப்பேர் சிரிப்பதைவிட இரண்டு பேர் அநுபவிப்பதே மேன்மை என்று உணர்ந்து, ஹாஸ்ய சாஹித்தியங்களைத் தள்ளிவிட்டுச் சம்பிரதாயமான சங்கீதத்தை அனுஷ்டித்தால் ரஸிகர்களுக்கு உத்ஸாகம் உண்டாகும்.

மஹாராஜபுரம் விசுவநாதய்யரைப் பற்றி ஆனந்தவிகடனில் எழுதியிருப்பதைப் படித்து அம்மாஞ்சி மிகவும் சந்தோஷப்பட்டான். அவருடைய மனோதர்மம் அளவற்றது; அவருடைய கல்பனாசக்தி நிகரற்றது என்றே சகலருடைய அபிப்பிராயமும். அவரை மேன்மைப்படுத்த வேண்டியது சரியான காரியம் என்கிறான். பட்டணத்தில் சென்ற மாதம் நடந்த கச்சேரிகளில் ராமானுஜ அய்யங்கார், விசுவநாதய்யர், ஸ்ரீநிவாஸய்யர் மூவரும் தத்தம் வழிகளில் ரஸிகர்களைச் சந்தோஷப்படுத்தினார்களாம். திருவையாற்றிலிருந்து ஒலிபரவுவித்த கச்சேரிகளில் இரண்டு மாத்திரம் குறிப்பிடத் தக்கவை; ஒன்று, மஹாராஜபுரம் விசுவநாதய்யருடையது; இரண்டாவது டி.கே. ராதாகிருஷ்ணன் வாசித்த புல்லாங்குழல். இந்தச் சிறுவனுடைய காற்று மிகவும் சுத்தமாயிருந்தது. தோடி கீர்த்தனை அப்பட்டம் கர்நாடக சுத்தம்.

மியூஸிக் அகாடமி கச்சேரிகளில் பாபா வெங்கடராம அய்யரையும், ஸ்ரீமதி பாலஸரஸ்வதியையும் காணவில்லையே என்று மாத்திரம் அனேக ரஸிகர்கள் ஆச்சரியமாகக் கேட்டார்கள். அதற்குப் பதில் நாம் என்ன சொல்லலாம்? அவர்கள் இருவருக்கும் இன்னும் திரிசங்கு சொர்க்க ஆஸ்தான அனுபவம் போதாது என்று விடலாமோ?



வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்றோர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது 'பெரீஸ் பிஸ்கட்ஸ்'

★

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுதும் வாங்குவது

★

பெரீஸ்
பிஸ்கட்ஸ்

PERRY & CO., USILAMPATTI. (Estd. 1917)

அவளும் அவனும்

வே. நாராயணன்

அவளுக்கு லக்ஷ்மீ என்று பெயர். அவனுக்குப் பெயர் நாராயணன். கல்யாணத்தின்போது, இந்தப் பெயர்ப் பொருத்தத்தையே பார்த்து நிச்சயித்தார்களோ என்று தோன்றிற்று. ஏனென்றால், அவர்களுக்குள் மனப் பொருத்தமிருப்பதாகத் தோன்றவில்லை. லக்ஷ்மீ குக்கிராமத்தில் வளர்ந்த பெண். வீட்டுக் காரியங்களை எல்லாம் நிர்வகித்து வீட்டை லக்ஷ்மீகரமாக வைத்துக் கொள்ளத் தெரியும் என்றாலும், இங்கிலீஷ் வாசிக்கத் தெரியாது. தமிழிலும் பாடல்களைப்பாடி அவற்றின் அர்த்தத்தையும் ஒருவாறு புரிந்துகொண்டு இன்புறுவாள் என்றாலும் வல்லின இடையின வித்தியாசம் தெரியாமலும் பேசுவதைப் போலவே கொச்சையாகவுமே எழுதத் தெரியும். 'கிளப்'பிற்குப் போய், பந்தடிக்கவும் தெரியாது. சினிமாவுக்கோ, பாட்டுக் கச்சேரிக்கோ போய்வருவதற்கு வேண்டிய துணிச்சலும் அவளுக்கு ஏற்படவில்லை. வெளியிற் போவதற்கே பயப்படுவாள்; துணை வேண்டும். சுடு வெயிலிலும் செருப்புப் போட்டுக்கொண்டு நடக்கமாட்டாள். இப்படிப்பட்ட பட்டிக்காட்டுப் பெண்ணை விவாகஞ் செய்துகொள்ள நாராயணனுக்குச் சம்மதம் இல்லை. அவனோ தற்கால நாகரிகத்திலே பெரிதும் ஈடுபட்டவன்; இங்கிலீஷ் பாஷையிலுள்ள சிறந்த நூல்களையும் செந்தமிழ் நூல்களையும் கற்றுணர்ந்து ரஸிப்பதோடு, வடமொழி நூல்களையும் பண்டிதர்களின் உதவியின்றியே படித்து ரஸிக்கும் திறமை வாய்த்தவனாய் இருந்தான். மும்மொழியிலுமுள்ள ரஸபரிதமான கவிதைகளைத் தன்னுடன் சேர்ந்தனுபவிப்பதற்குரிய இல்லாளையே அவன் மனம் நாடிற்று. ஆயினும் பெற்றோர்கள் விருப்பங்கொண்டு நல்ல குலத்திலே பிறந்தவள் என்று பொறுக்கியெடுத்தவளை அவனால் மறுக்க முடியவில்லை. நாலுநாள் விவாகத்திற்கும் ஒப்புக்கொண்டு, தன் மனத்திலேயுள்ள அருவருப்பை வெளிக்காட்டாமல் விளையாட்டும் வேடிக்கையுமாகவே நாலுநாட் பொழுதையும் போக்கினான். தன் மனைவியோடு தனித்துப் பேச அனேக சந்தர்ப்பங்கள் இருந்தும் அப்பொழுதெல்லாம் அவள் கூச்சப்படுவதும் மௌனமாயிருப்பதும் அவனுக்கு மனக்கசப்பை உண்டுபண்ணிற்று. ஆயினும் நல்ல புத்திசாலியாகையால், நாளடைவிலே இவளை நம்மிஷ்டப்படி நடக்கும்படி வசக்கிக்கொள்ளலாம் என்று ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டான். விவாகமானவுடனேயே தன் வீட்டிற்கு அவள் வந்துவிட வேண்டும் என்று கண்டிப்பாய்த் தன் பெற்றோர்களிடம் சொல்லிவிட்டான். சாரதா சட்டத்திற்குப் பிறகு நடந்த விவாகமாகையால், பெண்ணைப் பெற்றவர்களும் ஆக்ஷேபிக்க இடமில்லாதிருந்தது.

— 2 —

நாராயணனைச் சிறு வயது முதற்கொண்டே எனக்குத் தெரியும். படிப்பில் அவன் துடியாய் இருப்பான். அவன் நடத்தையின் நேர்மையும் என்னை வசீகரித்துவிட்டது. வயதிலும் பள்ளிக்கூட வகுப்பிலும் அவனைவிட நான் மூன்று வருஷம் முந்தியவன்; ஆனாலும் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் செலவிடும் வேளைகளைத் தவிர, மற்றைப் பொழுதெல்லாம் இருவரும் இணைபிரியாதிருப்போம். எங்கள் இருவரையும் சங்கர நாராயணன் என்று ஒருவராகவே கூறிப் பரிகசிப்பார்கள் எங்கள் தோழர்கள். நாராயணனுக்குப் பழைய முறையிலே ஸம்ஸ்கிருதஞ் சொல்லிக் கொடுத்திருந்தார் அவனுடைய தகப்பனார், இங்கிலீஷ் ஹானர்ஸ் படிப்பிற்கு அது மிகவும் அனுகூலமாயிருந்தது. பரீக்ஷையில் அவன் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். கலாசாலைப் படிப்பு முடிந்ததுமே, நாராயணனுக்கு எங்கள் கலாசாலையிலேயே இங்கிலீஷ் வாத்தியார் வேலை கிடைத்தது. நானும் அதே சமயத்தில் வக்கிலாகத் தஞ்சாவூருக்குப் போய்விட்டேன்.

கல்யாணமான புதிதிலே நாராயணன் தான் குடும்பம் நடத்தப்போகும் விதத்தையெல்லாம் வர்ணித்துப் பேசுவான். லக்ஷ்மிக்கு எழுத்து வாசனையில்லை என்பது ஒன்றுதான் குறை; அந்தக் குறையை நானே அவளுக்குக் கல்வி கற்றுக்கொடுத்து நீக்கிக் கொள்வேன் என்று சொல்வான். அவளோடு நானும் கவிதைக் கனிகளைச் சுவைப்பதும் கவிதைக் கனுக்களைக் காணுவதுமாகப் பொழுதுபோக்குவேன் என்பான். அப்படியானால் இனி உனக்குச் சங்கரன் வேண்டியதில்லை என்று நான் ஊடுவேன். எப்படியிருந்தாலும் என் சங்கரனுகுமா என்பான்.

அவன் என்னிடம் கூறியவாறு தன் மனைவிக்குக் கல்வியும் நாகரிகமும் கற்றுக்கொடுக்க முயன்றான். ஆனால் லக்ஷ்மிக்குக் கல்யாணத்தின்போதே வயது பதினைந்து நிரம்பிவிட்டது; அதனால் படிப்பிலே அவள் மனம் செல்லவில்லை. 'அவளும் எவ்வளவோ முயன்று பார்த்தாள், பாவம்!' என்று நாராயணன் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டான். 'நீயும் என்னைப் பிரிந்து தஞ்சாவூர் போகிறாய்; நான் இனி யாரோடு ரஸித்துப் பொழுதுபோக்கு

வேன்' என்று அவன் வருந்தியதை நான் இன்னும் மறக்கவில்லை.

— 3 —

நாராயணன் நவநாகரிகத்தில் மோகங் கொண்டவன்; தலைமயிரைக் கிராப் செய்துகொண்டு, காற்சட்டையும் 'பூட்' ஸூம் தரித்துக்கொண்டிருப்பான், வெளியில் போகும்போது தலையில் ஒரு 'ஹாட்' (Hat.). ஒவ்வொருவனுக்கும் தன்தன் இஷ்டப்படி நடக்கச் சுயேச்சை வேண்டும் என்று வாதிப்பான். பொதுஜனக் கட்டுப்பாட்டை மீறுவதிலே அவனுக்கு உற்சாகம் அதிகம். ஆண்மக்களைப்போலவே பெண்மக்களும் சுயேச்சைப்படி நடக்கவேண்டும் என்பான். மனைவி மணாளனுக்கு அடங்கி நடக்கவேண்டும், அவனைத் தெய்வமாகக் கொள்ளவேண்டும் என்னும் கொள்கையை அவன் பரிகசிப்பான். 'வேதகாலத்தில் இம்மாதிரி இருந்ததில்லை; எல்லாம் பிற்காலத்து அநாகரிகம்' என்று பிரசங்கஞ்செய்வான். விவாகமந்திரங்களின் பொருள் அவனுக்கு நன்றாகத்தெரியும். அவற்றை உச்சரிக்கும்போது, வீட்டு விவகாரங்களில் எல்லாம் பூர்ண சுதந்திரம் அளிக்கிறேன் என்ற உணர்ச்சியோடேதான் உச்சரித்தான்; ஆகவே, அவள் குடித்தனந்தொடங்கிய பின், வீட்டுக் காரியங்களுக் கெல்லாம் அவளே நிர்வாகி ஆகிவிட்டாள். சமையல் முதலிய வேலைகளுக்கு ஆள் வைப்பதற்கு வேண்டிய அந்தஸ்து இருந்தபோதிலும் அவளே சமையல் வேலை முழுவதையும்செய்வாள். அதோடு பூஜை, விரதங்கள், பழையகாலத்து அனுஷ்டானங்கள் இவற்றையும் கவனித்துக்கொள்வாள். நாராயணனுடைய பெற்றோர்களுக்குரிய பணிவிடைகளையும் மனம் கோணாமல் செய்வாள். தன்சகோதர வாஞ்சையைச் செலுத்த ஒருநாத்தனார்கூட இல்லாதது அவளுக்குப் பெருங்குறையாகவே இருந்தது. தன் காதற்கணவனோ ஒருவிஷயத்திலும் தன்னைக் கலந்து கொள்வதுமில்லை, தன் விஷயத்திலே யாதொரு நிர்ப்பந்தம் செய்வதுமில்லை. அடிக்கடி, தன்கணவர் தன்னை நிர்ப்பந்தப்படுத்தமாட்டாரா என்று அவளுக்குத் தோன்றுமாம்; சுயகாரியங்களில் அவளிடம் கலந்து அவள் அபிப்பிராயத்தையும் கேட்கமாட்டாரா என்றும் தோன்றுமாம். அப்பொழுதெல்லாம் சாடைமாடையாக நாராயணனுக்கு அவள் கருத்தைத் தெரிவிப்பாளாம். "எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. நான் செய்வது அவளுக்குப் பிடிப்பதில்லை. அவள் செய்வது எனக்குப் பிடிப்பதில்லை. ஆனால் நாங்கள் இருவரும் அவரவர் இச்சைப்படியே நடந்துகொள்வது என்று தீர்மானித்துவிட்டேன். நான் செய்வதில் ஒரு தப்பும் இல்லாதவரையில் நான் ஏன் அவளைத் திருப்தி செய்வதற்காக அவள் விருப்பப்படி நடிக்கவேண்டும்? அவள் என்னைத் திருப்திசெய்விப்பதற்காகஎன் இஷ்டப்படியெல்லாம் ஆடத் தயார்தான். ஆனாலும் அவள் மனம் செல்லாத வழியிலே அவளை வலிந்து இழுத்துத் துன்புறுத்துவது என் கொள்கைக்கு விரோதமன்றோ" என்று என்னிடம் தன் இல்லற வாழ்க்கையை வர்ணித்துக் கூறுவான், நான் அவனை எப்பொழுதாவது பட்டினத்திலே சந்தித்தபோது விசாரித்தால்.

— 4 —

நான் தஞ்சாவூருக்கு வந்து பன்னிரண்டு வருஷம் ஆகிவிட்டது. நாராயணன் குடும்ப வாழ்க்கையைத் தொடங்கிப் பதினைந்து வருஷம் முடியும் சமயம். திடீரென்று ஒரு நாள் தினசரிப் பத்திரிகையில் லக்ஷ்மீ இறந்து போனாள் என்ற செய்தியைக்கண்டு திடுக்கிட்டுப்போனேன். அவள் நோய்வாய்ப்பட்டிருந்தாள் என்பது எனக்குத் தெரியாது. அவளுக்கு நோய் இருந்தால் நாராயணன் எனக்கு எழுதாமல் இருக்கமாட்டான். நாராயணன் நிலைமையை நினைந்து மிகவும் வருந்தினேன். சின்னதும் சிறிதுமாய் அவனுக்கு ஐந்தாறு குழந்தைகள். வயதோ இன்னும் முப்பத்தாறு நிரம்பவில்லை. தாயில்லாக் குழந்தைகளை வைத்துக்கொண்டு என்ன தவிப்புத் தவிக்கிறானோ? கல்யாணமான மறு வருஷத்திலே அவனுடைய தாயார் சுமங்கிலியாய்ப்போய்ச் சேர்ந்தார். அடுத்த வருஷத்திலே தகப்பனாரையும் இழந்துவிட்டான். ஆனாலும் வீட்டிலே பெற்றோர் பெரியோர் இல்லாத குறை அவனுக்குத் தோன்றாமல் இருந்தது; சிறு வயதிலேயே குடும்பப் பொறுப்பு முழுவதையும் வகிக்குந் திறமை லக்ஷ்மிக்கு இருந்தது. நாராயணனுக்கு ஒன்றும் தெரியாது. தன் புஸ்தகங்களுண்டு, தானுண்டு, தன்னிடம் கற்கும் மாணவர்களுண்டு. தனக்கு வேண்டிய காற்சட்டை. பூட்ஸ், ஹாட், நெக் டை, காலர் முதலானவற்றைப்பற்றிக்கூட அவனுக்குத் தெரிய வேண்டிய அவசியமேற்படவில்லை. இவையெல்லாம் லக்ஷ்மிக்குப் பிடிக்கவில்லையென்றாலும், கணவனுடைய விருப்பங்களை அறிந்துகொண்டு அவனுக்குப் பிடிக்குந் தினுசுகளைத் தேர்ந்தெடுத்து வாங்குவதிலும் லக்ஷ்மீ திறமை வாய்ந்தவளாய் இருந்தாள். வண்ணான் சட்டைகளைக் கிழித்துக்கொண்டு வந்துவிட்டால், வேறு துணிவாங்கி, புதுச் சட்டைகளைத் தைக்கச்செய்து தயாராக வைத்திருப்பாள்; பூட்ஸ் கிழியப்போவதைக் கவனித்துப் புதுப் பூட்ஸ் தைக்க ஆர்டர் செய்வாள்; புஸ்தகங்களிலுள்ள விஷயங்கள் அவளுக்குப் புரியாவிட்டாலும் அவற்றைப் பாகுபடுத்தி எங்கெங்கே வைக்கவேண்டுமென்பது லக்ஷ்மிக்கு நன்றாகத் தெரியும். இப்படியுள்ள மனைவியை இழந்தால், கையொடிந்ததுபோல் இராதா என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கையில், தபால் வந்து சேர்ந்தது. அதில் நாராயணனிடமிருந்து ஒரு காகிதம் இருந்தது. அவசரமாகப் பிரித்துப் பார்த்தேன்.

— 5 —

சங்கரா!

லக்ஷ்மியைப் பறிகொடுத்துவிட்டேன், திடீரென்று மாரடைப்பினால் இறந்துபோனாள். சின்னஞ்சிறுசுகளை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வேன்? யாரிடம் என் மனம் உடைந்துபோனதைச் சொல்லி அழுவேன்? இந்த எண்ணம் தோன்றியதும் உன் நினைவே வந்தது. ஆனால் நீ இருநூறு மைலுக்கு அப்பால் போய்விட்டாய். தபால் மூலமாகத்தான் என் புலம்பல் உன் காதிற்படும்.

நேற்று இராத்திரி லக்ஷ்மி படுத்துக்கொள்ள வந்தபோது, நான் மரணத்தைப்பற்றிப் பேகன் எழுதிய கட்டுரையை வாசித்துக் கொண்டிருந்தேன். அவளுக்கு ஒன்றும் நோய் இருப்பதாக எனக்குத் தெரியாது. படுக்கையறையினுள் நுழைந்தவள் திடீரென்று மார்பைக் கையால் பிடித்துக்கொண்டு நாற்காலியில் சாய்ந்தாள். நான் திடுக்கிட்டு எழுந்தேன். ஏகாதசிப் பட்டினியாலே களைத்துப்போய்விட்டாள் என்று நினைத்தேன். 'என்னடி செய்கிறது? ஏன் இப்படிப் பட்டினிகிடந்து சாகிறாய்?' என்றேன். உடனே அவள் படபடப்பாய் நாலு வார்த்தைகள் சொல்லிவிட்டு மௌனமாய் விட்டாள். என்ன சொன்னாள் தெரியுமா? 'என்னமோ செய்கிறது, நான் பிழைக்க மாட்டேன். பீடை ஒழிந்தது என்று உங்கள் மனதிற்கு இஷ்டமாய் நடக்கக்கூடியவர்களைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொள்ளுங்கள். என் குழந்தைகளை மாத்திரம் என் தாயாரிடம் அனுப்பிவிடுங்கள், அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அவற்றைவைத்துக்கொண்டுத் தவிக்க வேண்டாம்' என்றாள், தூங்கிக்கொண்டிருந்த குழந்தைகளையும் என்னையும் பிரேமை நிறைந்த பார்வையால் ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கண்மூடினாள். உடனே டாக்டருக்கு டெலிபோன் பேசினேன். அவரும் பத்து நிமிஷத்தில் வந்துவிட்டார். ஆனாலும் என்ன? மறு நிமிஷம் வந்திருந்தாலும் பயனில்லையே.

இராத்திரி முழுவதும் காளராத்திரிதான். குழந்தைகளை எழுப்பக்கூடாது என்று வாய்விட்டுப் புலம்பாமல் இருந்தேன். டாக்டரிடமேயே என் மாமியாருக்குத் தந்தி எழுதிக் கொடுத்துவிட்டேன். விடியும்பொழுது அவரும் வந்துவிட்டார்.

லக்ஷ்மி மகராஜி; ஏகாதசி மரணம், துவாதசி தகனம்; என் பிள்ளையிடம் 'புல்' வாங்கிக் கொண்டு நானே எல்லாம் செய்து முடித்தேன். குழந்தைகள் இன்னும் பாட்டியைக் கட்டிக் கொண்டு அழுதவண்ணமாய் இருக்கின்றன. என் மனம் கல்லு; இல்லை, கல்லாயிருந்தால் வெடித்துப்போயிருக்கும்; மண்ணாயிருந்தால் கரைந்துபோயிருக்கும்; வெறும் மரம்; அதனாலேதான் கரிந்து கரிக்கட்டையாய்விட்டது.

'சீச்சீ! நான் ஒரு மனிதனா? லக்ஷ்மியின் காதலுக்கு ஏற்ற பாத்திரமா? என்னை அவள் தெய்வமாகக் கொண்டாள். நான் அவளை முழு முட்டாளான இரண்டுகால் பிராணியாகப் பாவித்தேன். 'பிராணிக்குத்தான் பிரேமையும் அன்பும் இருக்கும்; அதனால் அவள் கல்வியறிவுபடைத்த லக்ஷயப்பெண்ணாய் விடுவாளோ' என்று நினைத்தேன். நானே முழு முட்டாள். புஸ்தகப்படிப்பு யாருக்கு வேண்டும்? வாழ்க்கையிலே கவிதையைக் காணாதவன் அன்றோ, புஸ்தகத்திலுள்ள கவிதையிலே மனஞ் செலுத்துவான். 'கனியிருப்பக் காய் கவர்ந்த' மூடன் நான்! நிழலின் அருமை வெய்யலிலே தெரியும் என்பார்கள். லக்ஷ்மியின் அருமை இப்பொழுதுதான் எனக்குச் சிறிது புலப்படுகின்றது; போகப் போகத் தான் முற்றும் புலப்படும்.

சங்கரா! நீ என்னைக் காண்பதற்காகப் புறப்பட்டு வராதே. உன் மனம் எனக்காக எவ்வளவு துன்புறும் என்பது எனக்குத் தெரியாதா? உன் கஷ்டங்களும் எனக்குத் தெரியும். "கோர்ட்டிலோ பெரிய கேஸ்; வீட்டிலோ பெண் பிரசவத்திற்கு வந்திருக்கிறாள்; இன்றோ நாளையோ என்றிருக்கிறது" என்று எழுதியிருந்த காகிதத்தை இப்பொழுதுதான் பார்த்தேன். உன் கடமையை நீ செலுத்தவேண்டும். என் கடமையை நான் செலுத்தாமல் இருந்துவிட்டேன்!

நரையை ஒழியுங்கள்!

நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலேன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4. சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: அப்பா & கோ.,

கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

கேடரைன்

மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: அப்பா & கோ., கெமிஸ்ட்ஸ்,

286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

அதோ, குழந்தைகள் ஓவென்று அலறுகின்றன. இன்று முதல் நானே அவைகளுக்குத் தாயுமாய் இருப்பேன், நேற்றுவரை அவள் அவைகளுக்குத் தாயும் தந்தையுமாய் இருந்தாள். என் கடமையை அவள் செய்தாள். அவள் கடமையையும் நானே செய்துமுடிப்பேன். பள்ளிக்கூடம் போகும் வரையும் தாய் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்வேன்; பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டுக் காலேஜுக்குப் போவேன்; காலேஜிலிருந்து கிளப்பிற்குப் போக மாட்டேன்; நேரே பள்ளிக்கூடத்திற்குச் சென்று குழந்தைகளை அழைத்து வருவேன்; என்ன செய்தாலும் குழந்தைகள் தாயை மறக்கக்கூடுமோ? என்ன முயன்றாலும் நான் லக்ஷ்மியாவேனோ? அவளுக்கிருந்த விவேகத்தில் ஒரு காற்பங்குகூட எனக்கு இல்லையே! குழந்தைகளுக்கு அவளை வைத்துவிட்டு என்னைக்கொண்டு போயிருக்கக்கக்கூடாதா அந்த யமன்!

பார்! அதற்குள் நான் வருங்கால வாழ்க்கைக்குத் திட்டம்போடத் தொடங்கிவிட்டேன். குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு என்னுடன் இருப்பதற்கு அத்தை சம்மதித்துவிட்டாள் என்ற தைரியத்தாலன்றோ இப்படி எல்லாம் எழுதமுடிந்தது. அத்தை மட்டும் வந்திராவிட்டால் உன் நண்பனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கும். இந்தக் காகிதத்திற்குப் பதிலாக டாக்டரிடமிருந்து உனக்குத் தந்தி கிடைத்திருக்கும். இப்படிக்கு,

— பைத்தியம் பிடியாதிருக்கும்
நாராயணன்.

— 5 —

நாராயணன் கேட்டுக்கொண்டபடியே, துக்கம் விசாரிக்க நான் பட்டினம் செல்லவில்லை, ஏனென்றால் அன்று பிற்பகலிலேயே நான் தாத்தாவாகிவிட்டேன். பிரஸவ வேதனையால் வருந்திய என் பெண்ணிற்கு உடம்பு குணமாவதற்கு முப்பது நாளாயிற்று. நான் ஜில்லா கோர்ட்டில் நடத்திக்கொண்டிருந்த கேஸைக்கூட வாயிதா ஒத்திப் போடும்படியிருந்தது. பிறகு பத்து நாள் ஆயிற்று அந்தக் கேஸ் முடிவதற்கு. இப்படியாக இரண்டு மாதமான பின்பு கிறிஸ்துமஸ் விடுமுறையிலேதான் பட்டினம்போய் வர முடிந்தது.

நாராயணன் முற்றும் மாறியிருந்தான், நன்றாய் அறியாதவர்களுக்கு அவனை அடையாளங்கண்டு கொள்வதுகூடசிரமமாய் இருக்கும். 'கிராப்' தலைபோய் வைதிகக் குடுமியாய்விட்டது. பொட்டலிலே புல் முளைத்திருப்பதுபோல் மொட்டைத் தலையிலே விரற்கிடைமயிர் இருந்தது. இடுப்பிலே பஞ்சக்கச்ச வேஷ்டி; மேலே யோகவேஷ்டி; நெற்றியிலே மூங்கிலிலைபோலே விளங்கும் கோபிச்சந்தனம்; "காலேஜுக்கும் இப்படியேதான் போறாயோ?" என்று கேட்டேன். "இதோ பார்!" என்று அலமாரியைத் திறந்து காட்டினான். லாங்கோட்டும் தலைப்பாகையும் அலமாரியுள் தொங்கிக்கொண்டிருந்தன. 'பூட்ஸ்' வைத்திருந்த 'ராக்'கைக் காணவில்லை. அந்த மூலையில் மிதியடி ஜதையொன்றுதான் காணப்பட்டது. 'என்னடா இது?' என்று கேட்டேன். நாராயணன் சொன்னதை அப்படியே எழுதிக் கதையை முடித்துவிடுகிறேன்.

"சங்கரா! உன் பழைய நண்பன் நாராயணன் இறந்துபோய்விட்டான். இப்பொழுது உன்னுடன் பேசுவது வேறொரு நாராயணன். அந்த நாராயணனுக்கே கல்விச் செருக்கும் படாடோபமும் இருந்தன. முன்னோர்களைக் காட்டிலும் தான் மேதாவியென்று நினைத்தான். மனந்தானே சுத்தமாய் இருக்கவேண்டும், வேஷத்தில் என்ன இருக்கிறது.' என்று மனம் போன போக்கிலே நடந்துவந்தான். அதனால் அவன் என்ன கண்டுவிட்டான்? தன் மனைவியின் சிறப்பைக்கூட அறியாத பேதையாய் இருந்தான். பண்டைக்காலத்திலிருந்து ஆசரிக்கப்பட்டு வந்த கட்டுப்பாடுகளையெல்லாம் மீறி நடந்ததால், மனத்திற்காவது ஆனந்தம் உண்டா? இல்லை; மனைவியைத் துன்புறுத்துகிறோமோ என்ற துக்கம் ஒரு புறம்; மனத்தைக்கட்டுப்படுத்துவதால் எழுந்த சஞ்சலம் ஒரு புறம்; வெள்ளைக்காரரைத்திருப்திசெய்விப்பதற்காக இப்படி வேஷம் போடுகிறான் என்ற அவதூறு ஒருபுறம், இப்படி நாற்புறமும் வேதனையேயன்றிச் சுகமே இல்லை என்பதை உணர்ந்துவிட்டேன், லக்ஷ்மீ இறந்து போகவில்லை. அப்பொழுது வீட்டில் மட்டும் இருந்தாள். இப்பொழுது நான் எங்குச் சென்றாலும் என்னருகிலேயே இருக்கிறாள். என் மார்பகத்தைவிட்டு கணப்பொழுதும் அகல்வதில்லை. முதலில் அவளைத் திருப்தி செய்வதற்காக இப்படி வேஷம் போடுவது சரியா என்று தோன்றிற்று. நாளடைவிலே 'இது வேஷமன்று; இதுவரை இருந்ததுதான் வேஷம்' என்பது விளங்கிற்று. வேஷம் பலித்துவிட்டது. என் மார்பகத்திலே லக்ஷ்மீ ஆனந்த நர்த்தனமிடுகிறாள். அவளுடைய பாதஸரமும் வளைகளும் ஒலிப்பதையும் மெட்டிகள் தாளம் போடுவதையும் உற்றுக்கேள்" என்று தன் மார்பைத் திறந்து காட்டினான். "குழந்தைகளுக்கும் நானே தாயாகிவிட்டேன். வளர்க்கும் பாட்டியைவிட என்னிடத்திலேயே அவைகள் ஒட்டிக்கொள்கின்றன, இப்பொழுது என்னை வெறும் நாராயணன் என்று நினையாதே; நான் 'லக்ஷ்மீ நாராயணனுக்கும்'' என்றான்.

குழந்தைகள் தடதடவென்று மாடிப்படியேறி வரும் சப்தம் என் காதில் விழுந்தது: அவர்களுக்கும் தாயுமானவனுக்குமிடையே நான் இருப்பது சரியென்று தோன்றவில்லை.

"லக்ஷ்மீ! நான் போய்வருகிறேன்; நாழிகையாகிறது" என்று கிளம்பிவிட்டேன்.

இருண்ட உலகம்

பி. எஸ். கிருஷ்ணசாமி

உனக்கும் எனக்கும் ரொம்ப வித்தியாசம். நீ ஆயிரக் கணக்கான காட்சிகளைப் பார்க்கிறாய்; நானோ கேவலம் சப்தங்களை மட்டும் கேட்கிறேன். பூமி, ஆகாசம், நந்தவனம், மேகம், சந்திரன், நட்சத்திரங்கள் இவைகளெல்லாம் என் பொருட்டு எப்பொழுதும் வெளிவராத ரகஸ்யங்கள். மலை, குகை இவ்விரண்டிற்கும் எனக்கும் ஒரே வித்தியாசம் தான்: மலையின்மேல் ஏறும்போது மூச்சுத் திணறுகிறது; குகைக்குள் இறங்கும்போது எங்கே விழுந்து விடுகிறோமோ என்று பயம் உண்டாகிறது. ஆனால், "இந்த மலை எவ்வளவு அழகாக இருக்கிறது; இந்தக் குகை எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது" என்று சொல்லப் படும்போது தான், அதன் அர்த்தம் புரிவதில்லை. என் மூளையில் என் ஆத்மாவின் முழுச் சக்தியையும் பிரயோகித்துப் பார்த்தேன். ஆனால் மூளை வேலை செய்தால்தானே? அதனால் நான் குழப்பமடைவதுதான் மிச்சம்.

'பச்சைப் பசேலென்றிருக்கும் வயல்களின் பசுமை, படிகமயமான நீரருவிகளின் அழகு, குழந்தைகளின் இனிமையான மழலைச் சொற்கள், புருஷர்களின் சௌந்தர்யம், பெண்களின் ரூபலாவண்யம், வானவில்லின் நிறம், கருமையான மேகங்களின் இந்திரஜாலங்கள், சந்திரனின் சோபை, புஷ்பங்களின் நிர்மலமான அழகு, இந்த எல்லாச்சப்தங்களும் எனக்காக விஸ்தரிக்கப்பட்ட அந்தகார மயமான வாயு மண்டலத்தின் வெவ்வேறு பாகங்களின் பெயர்களாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

இதைத்தவிர எனக்கு வேறொன்றும் தெரியாது; தெரிந்துகொள்ளக்கூடிய சக்தியும் என்னிடம் இல்லை; ஏனெனில் நான் குருடி. என் உலகம் நீண்ட இருண்ட யாத்திரை; சப்தங்கள் எல்லாம் அதன் கூடாரங்கள். "கடலில் அலைகள் எழும்புகின்றன, பிறகு இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன" என்று சொல்லுகிறார்கள். அதுபோல் என் இருண்ட உலகத்திலும் அநேகவிதமான சப்தங்கள் கிளம்புகின்றன, பிறகு மறைந்தும் விடுகின்றன. நான் சப்தத்தை அறிந்துகொள்வேன்; அதை அடையாளம் கண்டுகொள்வேன். அதன் உதவியாலேயே அழகையும் வயதையும் கூட அநுமானித்துக்கொள்வேன். சிறு குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்கும் போது என் இருதயம் அவர்களை அன்புடன் நேசிக்கும். அப்போது நான் "அழகு என்பது இதே இனிமையான வாணியின் பெயராகத் தான் இருக்கவேண்டும்" என்று எண்ணுவேன், எப்பொழுதாவது ஏதாவது புருஷனுடன் பேச நேர்ந்தால், அந்தப் புருஷனின் வார்த்தைகள் சந்திரனின் நிலவொளிபோலவும், பனிக்காலத்து வெய்யில் போலவும் தோன்றும். அப்போது வாலிபம் என்பது இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணமிடுவேன். ஏதாவது நடுங்கிக்கொண்டிருக்கும் குரலையும், அதனுள் மறைந்து—அமுங்கிக்கொண்டிருக்கும் சப்தங்களையும் கேட்கும்போது 'இந்த மனிதன் கிழவன். இவன், தன்னுடைய குரலின் கம்பீரத்தை இழந்ததுபோல, தன் உயிரையும் இழந்து விடுவான். இவன் வாலிபனாய் இருந்த போது இவன் குரலில் இருந்த கம்பீரம் இப்போது இல்லை. எப்படி இவனுடைய குரலின் இனிமையை யாரும் லட்சியம் செய்யவில்லையோ, அதுபோலவே இவன் மரணத்தைக் கூட யாரும் லக்ஷ்யம் செய்யமாட்டார்கள்' என்று தெரிந்து கொள்ளுவேன்.

இது மட்டுமல்ல, 'கோபம், துக்கம், பயம், ஆனந்தம், ப்ரேமை, தயை, ஆச்சரியம் இந்த எல்லா பாவங்களையும் சப்தங்களாலேயே கண்டு கொள்கிறேன். நான் குருடி—காதுகள் தான் என் கண்கள்.

— 2 —

நான் பஞ்சாபில் பிறந்தவள். ஆயினும் என் பெயர் மட்டும் வங்காளிகளைப்போல் வைக்கப் பட்டது. பஞ்சாபில் வசிக்கும் பெண்களில் என்னைத் தவிர வேறெந்தப் பெண்ணிற்கும் 'ரஜனி' என்று பெயர் வைத்திருப்பதாக நான் கேட்டதில்லை. என் தந்தைக்கு நாவல்கள் படிப்பதில் ரொம்பவும் பிரியம். வங்காள நாவல்களில் 'ரஜனி' என்ற நாவலை அவர் ஒருதடவை படித்தார். அதிலிருந்து என்னையும் 'ரஜனி' என்றே அழைக்க ஆரம்பித்தார். அதுமுதல் எனக்கு ரஜனி என்ற பெயரே ஸ்திரமாகிவிட்டது. என் தந்தை பணக்காரர்தான்; பணம் நிரம்பியிருந்தது. ஆனால் மனம் மட்டும் நிரம்பவில்லை, என்பொருட்டு ஸதா கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். நான் ஒரு பாக்யவான் வீட்டில் பிறந்தும், பாக்ய மற்றவளாகத்தான் இருந்தேன். என் தந்தையும் தாயும் என்னைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சுவிட்டார்கள். அப்போது, 'என் உலகத்தின் இருள், அவர்களின் உள்ளத்தினுள் புகுந்துகொண்டது; அவர்களுடைய கண்ணீர் கன்னங்களின் வழியாக வழிந்தோடிக் கொண்டிருக்கிறது' என்று அறிந்துகொண்டேன். நான் அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க, மனப்புண்ணை ஆற்ற விரும்பினேன்; ஆனால், என்னால் என்ன செய்ய முடியும்?

என் கையாலாகாத் தன்மையினால், என் முகம் சிவந்துவிடும். நான் பெரியவளானதும், என் தாய் தந்தையரின் மனக்கவலை அதிகரித்தது. முதலில் அவர்கள் கவலைப்படுவதன் காரணம் எனக்குப் புரியவில்லை; பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன். அவர்கள் வருந்திக்கொண்டிருந்ததெல்லாம் என் விவாகத்தைக் குறித்துத்தான். இந்தக் குருட்டுப் பெண்ணை எவன் கல்யாணம் செய்துகொள்வான்? என்று அவர்கள் தங்கள் மனதையே கேட்டுக்கொண்டிருந்தனர்; அந்தக் கவலை அவர்களுடைய ஹிருதயத்தை துளைத்துக்கொண்டிருந்தது. ஸதா ஸர்வ காலமும் என் பொருட்டே வருந்திக்கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் என் துர்ப்பாக்யத்தின் அநுபவம் எனக்கு உண்டாயிற்று. இதற்குமுன் கடவுள் என் கண்களைப் பிடுங்கி என்மேல் ஏதோ ஒரு பெரிய அக்கிரமத்தைச் செய்துவிட்டதாக நான் நினைக்கவில்லை. என் இருண்ட உலகத்திலேயே நான் ஆனந்தமடைந்திருந்தேன். ஆனால் இன்று கண்களைப் பிடுங்கிக் குருடர்களாகச் செய்யும் அந்தக் கடவுளால் குருடர்கள் எப்பொழுதும் வாலிபர்களாக ஆகாமலிருக்க ஒன்றும் செய்ய முடிகிறதில்லை; அவர்களுடைய மேனியில் அழகும் யௌவனமும் சேர்ந்து அவர்களை உருக்குலைக்காமல் பைத்தியம் பிடிக்காமல் இருப்பதற்கு ஒன்றும் செய்யமுடியவில்லையே என்று நினைக்கிறேன். அப்படிக் குருடர்கள் மட்டும் யௌவன தசையை அடையாமல் இருப்பார்களேயானால் அவர்கள் தங்கள் வாழ்க்கையின் பயங்கரமான விபத்துக்களிலிருந்து தப்பிக்கொள்வார்களல்லவா? மேலும் அவர்களுக்குத் தங்களுடைய துர்ப்பாக்கியத்தின்பேரில் வருந்துவதற்கும் கோபிப்பதற்கும் அவசியம் ஏற்பட்டிருக்காதல்லவா?

என் அறையின் கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு எத்தனையோமுறை கடவுளிடம் என் துக்கத்தைப் போக்கிவிடுமாறு பிரார்த்தித்துக்கொண்டேன்; ஆனால் கடவுள் என் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளவில்லை. என் பிரார்த்தனைகளால் கடவுளின் மனம் இரங்கவில்லை என்று தெரிந்தபோது அவர்மேல் எனக்கு வெறுப்பு உண்டாகிவிட்டது.

பிறகு, "கடவுள் இல்லை," அப்படி இருந்தாலும் அவர் கொடுமை வாய்ந்தவர், அக்ரமக்காரர், அலட்சிய புத்தியுள்ளவர்' என்று எண்ணினேன். ஆனால் இப்பொழுது அந்த எண்ணங்கள் மாறிவிட்டன.

நான் நல்ல அழகி. என் முகம், மேனி, உருவம்—எல்லாம், மனதை மோகிப்பிக்கும் சக்தியைப் பெற்றிருந்தன, இதெல்லாம் நான் சொல்வதல்ல, என் சிநேகிதிகளின் அபிப்பிராயம். என் குரலில் இனிமை நிரம்பியிருந்தது மட்டும் எனக்குத் தெரியும்; வேறொன்றும் தெரியாது.

நான் குருடி; என்னை நானே புகழ்ந்து கொள்வது அவ்வளவு நன்றாக இருக்காது; ஆயினும் என் குரலைக்கேட்டு நான் மிகவும் கர்வப்பட்டுக்கொண்டேன். ஆனால் குருடியின் குரலினிமையையும் அழகையும் விரும்பக்கூடியவர் ஒருவருமில்லை. இந்த எண்ணம் என்னைக்காட்டிலும் என் தாய் தந்தையரை மிகவும் வருத்திக்கொண்டிருந்தது. 'இவள் ஏன் பிறந்தாள்? அப்படித்தான் பிறந்தாளே, ஏன் சிறுவயதிலேயே இறந்திருக்கக்கூடாது? இப்போது பெரியவளாகிவிட்டாள், வரன் கிடைக்கவில்லை, என்ன செய்வது? எந்தக் கடவுள் கண்களைப் பிடுங்கிக்கொண்டாரோ அந்தக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். வேறு உபாயம் இல்லை' என்று என் தாய் தந்தையர்கள் அடிக்கடி சொல்வதுண்டு. அந்த வார்த்தைகள் என் ஹ்ருதயத்தில்பட்டுத் தகித்துக் கொண்டிருந்தன.

— 3 —

சாயங்கால வேளை. நான் என் அறையில் என் தலைவிதியைக் குறித்து அழுதுகொண்டிருந்தேன். திடீரென யாரோ என் அறையில் நுழைந்ததுபோல் இருந்தது. இவர் என் தந்தையல்ல, தாயாரும் அல்ல, வேலைக்காரியும் அல்ல. நான் அவர்களுடைய கால்களின் ஓசையை நன்கு அறிவேன்.

இந்தச் சப்தம் என் காதுகளுக்குப் புதிதாய் இருந்தது. நான் உடனே என் தலையிலிருந்த துணியைச் சரிப்படுத்திக்கொண்டு "யார்" என்றேன். யாரோ ஒருவர் 'நான்தான்' என்றார். நான் திடுக்கிட்டுப் போனேன். என் தேகத்தில் ஒரு அதிர்ச்சி உண்டாயிற்று. இவர் லாலா கர்த்தாராமின் புதல்வர், லாலா ஸீதாராம். முதலில் இவர் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தார். இவருக்கும் என் தந்தைக்கும் நெருங்கிய சிநேகம். அவர் அழகைப்பற்றி என்றால் என்ன சொல்லக்கூடும்? ஆம்; அவருடைய குரல் கோமளமாகவும் இனிமையாகவும் இருந்தது. அவர் பேசும்போதெல்லாம் அவர் பேச்சிலேயே மூழ்கிவிடுவேன். என்மனம் அவர் பேச்சையே கேட்க விரும்பும். அவரிடத்தில் மனதைக் கவரும் சக்தி இருந்தது. அவர் என் தந்தையுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, "ரஜனியின் கல்யாணத்தைச் சீக்கிரம் முடித்துவிட வேண்டும்" என்று சொல்வார். அதற்கு என் தந்தை, "இவளை யார் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்?" என்று மிக்க சலிப்புடன் பதிலளிப்பார்.

இதைக் கேட்டதும் சற்று நேரம் பேசாமலிருப்பார். பிறகு அவருடைய அடிவயிற்றில் இருந்து கிளம்பும் பெருமூச்சும், அவர் எழுந்து போகும் காலடிச் சத்தமும் என் காதில் படும். அப்போது அவர் எவ்வளவு துயரப்பட்டார், அந்த ஆழ்ந்த பெருமூச்சில் எவ்வளவு துக்கம்

கலந்திருந்தது என்பதைக் குருடியான நான் கூட அறிந்துகொண்டேன். அவர் காட்டிய இந்த அநுதாபங்களால் என்னை அவருக்குக் கடமைப் பட்டவளாக ஆக்கிவிட்டேன். இதற்குப் பிறகு நான் அவர் வரும் வழியை எதிர்நோக்க ஆரம்பித்தேன். அவர் வராவிட்டால் வருந்துவேன்; சாப்பாடுகூட வேண்டியிருக்காது. இப்படியாக ஆறுமாதங்கள் கழிந்தன. பிறகு இங்கு வருவதை விட்டுவிட்டார். ஒரு வருஷத்திற்குப் பிறகு இன்று வந்திருக்கிறார்.

இதை நினைத்துப் பார்த்தபோது என் தேகத்தின் ஒவ்வொரு ரோமத்திலும் ஆனந்தம் தாண்டவமாடியது. உட்கார்ந்துகொண்டிருந்த நான் எழுந்து நின்றேன். பிறகு மெதுவாக என்னைச் சமாளித்துக்கொண்டு, "இத்தனை நாள் எங்கே இருந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"இங்கேதான் இருந்தேன்" என்றார் அவர்.

இத்தனை நாள் இங்கே இருந்தவர் என்னை வந்து பார்க்கவில்லை என்ற கோபம் எனக்கு. அதே கோபத்தில் "நீங்கள் ரொம்ப இரக்கமற்றவர்" என்று சொல்லிவிட்டேன். இதற்கு ஒரு பதிலும் அவரிடமிருந்து வரவில்லை. என் இருதயம் துடித்தது. நான் சொன்ன வார்த்தைகள் அவருக்குக் கோபத்தை உண்டாக்கியிருக்குமோ எனப் பயந்தேன். அப்படி இருந்தால் அவரிடத்தில் மன்னிப்புக் கேட்கவும் தயாராய் இருந்தேன்.

அதே சமயம் அவர் "ரஜனி!" என்றார்.

இந்தச் சப்தம் அவர் வாயிலிருந்து எத்தனையோ தடவை வெளிவந்திருக்கிறது; அதை நான் கேட்டும் இருக்கிறேன்; ஆனாலும் இன்று அவர் வாயிலிருந்து கிளம்பிய சப்தத்திலிருந்த ஓர் அற்புதமான விஷயம் இதற்குமுன் எப்போதும் இருந்ததில்லை. குரல் நடுங்கிக் கொண்டிருந்தது. அதில்தான் எத்தனை இனிமை! எத்தனை மோகம்! எவ்வளவு குழப்பம்! எவ்வளவு அன்பு! இதையெல்லாம் என்னால் வர்ணிக்கமுடியாது; வர்ணிக்கவும் தெரியாது.

ஆனால் அதே பிரேமையினால் நான் மதம் பிடித்தவளாகிவிட்டேன். ஒரு கணத்தில் நான் குருடி என்பதையும் மறந்தேன். அப்போது நான் ஆகாயத்தில் பறந்துகொண்டிருப்பது போலவும், என்னைச் சுற்றிலும் இனிமையான சங்கீதம் பாடப்படுவது போலவும் தோன்றிற்று. அந்த ஒரு க்ஷண நேரம் எவ்வளவு சுகத்தையும் ஆனந்தத்தையும் கொடுத்தது என்பதை என்னால் இன்றுவரை மறக்க முடியவில்லை. எட்டு வருஷங்கள் கழிந்துவிட்டன. ஆயினும் அந்த ஒரு க்ஷண நேர ஸௌகத்தை மறக்க முடியவில்லை.

"பொன்னையே நிகர்த்த மேனி
மின்னையே நிகர்த்த சாயல்"

இவை அனைத்தும்

ஜாப்கோ

அழகு சாதனங்களின் பரிசு

பிரில்லியன்டைன் • ஸ்னோ
ஹேர்குரோயர் • லைம்கிளிஸ்
வாஸலீன் கலந்த காஸ்டர் ஆயில்
லக்விட் பிரில்லியன்டைன் முதலியன

jabco

ஜயபாரதம் கம்பெனி, மல்லேஸ்வரம் P.O. பெங்களூர்.

இந்த எட்டு வருஷத்திய அநுபவத்தில் எவ்வளவோ விஷயங்கள் தெரிந்துகொண்டேன்.

சில சமயம், "என் ஆத்மா இந்த ஆனந்தத்தின் சுமையைத்தாங்காது; ஆயினும் இந்த ஆனந்தம் அந்த ஒரு க்ஷண நேர சுகத்திற்கு மிகவும் துச்சமானது" என்று தோன்றும். அப்போது நான் குருடி என்பதையும், என் கண்கள் இந்த வெளியுலகத்தைப்பார்ப்பதிலிருந்து வஞ்சிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மறந்துவிட்டேன்.

பிறகு எனக்குத் திடீரென்று இடம், ஸமயம், நிலைமை, எல்லாம் ஒரே சமயத்தில் என் மனக்கண்முன் வந்து நிற்கவே, வெட்கத்தால் என் தலை குனிந்தது. என் உடல் பூராவும் வியர்வை; ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "ஏன்" என்றேன்.

"உனக்குக் கல்யாணம் நடக்கப்போகிறது" என்றார். இதைக் கேட்டதும் என் முகம் சிவந்துவிட்டது; ஏனென்றால் அவரிடமிருந்து இவ்விதமான பதில் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. அடுத்த க்ஷணம், "நான் குருடி" என்று என் வாய் சொல்லிற்று.

"குருடியாய் இருந்தால் என்ன?"

"என்னைக் கல்யாணம் செய்துகொள்ள யார் காத்திருக்கிறார்கள்?"

இந்த வார்த்தைகள் என் வாயிலிருந்து வெளிவரும்போது மிகவும் துணிவு பெற்றிருந்தன. ஆனால், இன்று அவ்வளவு துணிச்சலுடன் எப்படிச் சொன்னேம் என்று மனதையே கேட்டுக்கொள்கிறேன். ஆனால் குருடிக்குத் துணிவுண்டாவது ஒன்றும் ஆச்சரியமில்லை; ஏனென்றால் வெட்கம் கண்களில் தானே உண்டாகிறது? மேலும் அவள் குருடி-மற்றவர்களைப் பார்க்கமுடியாது; பிறர் இவளைப் பார்த்துக்கொண்டிருப்பதையோ அல்லது இவளைப் பரிகசிப்பதையோ எப்படி இவளால் அறிந்துகொள்ள முடியும்?

சீதாராம் சற்று நேரம் பேசாமலிருந்தார்; அப்படிப் பேசாமல் இருப்பது எனக்கு இந்த உலகத்திலேயே பெரிய தண்டனையாகத் தோன்றிற்று.

என் பாக்யத்தின் பரீக்ஷை முடிந்துவிட்டது; அதன் முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்; அதே சமயம் அவர் என் அருகில் வந்தார். பிறகு என் தலையை லேசாக தடவிக் கொடுத்தார். அவருடைய ஸ்பரிசத்தால் என் தேகம் சிலிர்த்தது.

என் வாழ்க்கையில் முதன் முதலில் அன்று தான் இன்பத்தை நுகர ஆரம்பித்தேன். அப்போது நான் எந்த நிலையில் இருந்தேன் என்று என்னால் சொல்ல முடியாது; அதை வர்ணிக்கச் சக்தியும் என்னிடம் இல்லை. என்னை நான் மறந்திருந்தபோது அவர், "ரஜனீ! உன்னை நான் கல்யாணம் செய்துகொள்வேன்" என்றார். என் தலையிலிருந்த பெரிய சுமையும் இறங்கிவிட்டது, 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதுபோல் என் மனதிலிருந்த சுமை, துக்கம் எல்லாம் ஒரு நொடிப் பொழுதில் பறந்துவிட்டன என்பதை என் முகம் காட்டிவிட்டது. அவர் தம் வலக்கையால் என்னை அணைத்துக்கொண்டு, அன்போடு முத்தமிட்டார்! அவைகள்தாம் எவ்வளவு இனிமையாய் இருந்தன. தேவாமிருதத்தில் தோய்ந்ததுபோன்று ஒரே இனிமையாய் இருந்தன.

அன்றிரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. அந்த இடத்தை ஆனந்தம் அபகரித்துக்கொண்டது. அப்போது நான் இருண்ட உலகில் அரசு செலுத்துவதுபோலவும், உலகம் என் பிரேமையின் சங்கீதத்தில் நிரம்பியிருப்பது போலவும் தோன்றிற்று.

மேற்கண்ட சம்பவத்திற்குப் பிறகு ஒரு மாதம்கூட ஆகவில்லை. அதற்குள் எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது.

— 4 —

இது என் வாழ்க்கையின் இரண்டாவது அத்தியாயம். இதுவரை நான் 'சப்த' உலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்தேன்; இப்போது இன்பப் பாதையில் நடக்கலானேன்—இன்பக் கடலில் மூழ்கிவிட்டேன். அவர் எப்பொழுதும் என்னைவிட்டுப் பிரிவதில்லை. ஒவ்வொரு நிமிஷமும் என்னுடன்தான் இருந்தார்.

சில சமயம் அவர் என் கரங்களைப் பிடித்துக்கொண்டு, "நான் எத்தனையோ யுவதிகளைப் பார்த்திருக்கிறேன்; ஆயினும் உன்னைப்போல் அழகுள்ள பெண்களை இதுவரை பார்த்ததில்லை, இனி பார்க்கப் போவதும் இல்லை" என்று சொல்வார்.

என் கணவரின் இந்த அபிப்பிராயத்தை முதல் முதலில் கேட்கும்போது வெட்கத்தால் என் முகத்தை மூடிக்கொள்வேன். பிறகு சிறிது சிறிதாக இந்த வெட்கமும் தூர விலகிவிட்டது. விவாகமான பெண்கள் தம் கணவன்மார்களுடன் எவ்வளவு சகஜமாகப் பழகுவார்களோ அதேபோல் நானும் அவருடன் சகஜமாகவே பழகிவந்தேன். அத்துடன் அவர் என்மேனி அழகைப்பற்றிப் புகழும்போது, என் மேனி அழகைப் பார்த்து (கண்களால் பார்க்காமல்) நானே கர்வப்பட்டுக்கொண்டேன். என்னைப் போன்ற பாக்யசாலிகள் ஒருவரும் இருக்கமுடியாது என்று நினைத்தேன்; ஆனால் இதே பாக்யம்தான் எனக்கு அநேக கஷ்டங்களை உண்டாக்கியது. என் வீடு குதூகலத்தாலும் விலாஸத்தினாலும் எதிரொலித்துக்கொண்டிருந்தது; ஆனால் இந்த விலாஸத்திற்குள்ளே, இனிமையான சங்கீதத்திற்குக் கீழே, எப்படிப் பூனையின் கால்களில் கூர்

மையான நகங்கள் மறைந்திருக்கின்றனவோ அதே போல என் சுகமயமான வாழ்க்கையிலும் சில சமயங்களில் துக்கப்படவும் நேர்ந்தது. நான் என்னுடைய ஒவ்வொரு சிநேகிதியினிடத்திலும், அவர்களுடைய வாழ்க்கையின் ரகசியங்களைச் சொல்லும்படி கேட்டேன். அவர்களிடமிருந்து, 'உலகத்தில் காதால் கேட்கக்கூடிய ரகசியம் ஒன்றும் இல்லை; எவர்களைப் பாக்யமற்றவர்கள் என்று நினைக்கிறோமோ அவர்கள் பாக்யமற்றவர்கள் அல்ல.'' என்ற தத்துவத்தைத்தான் தெரிந்துகொண்டேன்.

என் கணவரின் இன்மொழிகள் என் வாழ்க்கையைச் சுகமயமாகச் செய்துவிட்டன. அவர் எப்பொழுதும் எந்த விஷயத்திற்கும் என்னைக் குறை கூறுவதில்லை; கோபிப்பதில்லை. இதெற்கெல்லாம் என்ன காரணம் என்றால், ஒரு வேளை அவர், 'இவள் என்ன நினைத்துக்கொண்டிருப்பாள்? தன்னுடைய கண்கள் கெட்டுப்போனது நமக்குத் தெய்வீக சுகத்தைக்கொடுப்பதற்குக் காரணமாகிவிட்டது என்றுதான் அவள் நினைத்துக்கொண்டிருப்பாள்' என்று என் கணவர் எண்ணியிருக்கவேண்டும். அதனால் தானே என்னவோ என்னுடைய எல்லா வேலைகளையும் அவரே செய்துவந்தார்; வேண்டாமென்று தடுத்தால் உடனே, "ரஜனி! இதனால் எனக்கு எவ்வளவு ஆனந்தம் உண்டாகிறது தெரியுமா? எல்லாப்பெண்களும் தம் கணவர்களுக்குச் சேவை செய்கிறார்கள்; ஆனால் எவனாவது ஒரு புருஷன் தன் மனைவிக்காகச் சில அற்ப காரியங்களைச்செய்வதால் உலகில் பிரளயம் ஏற்பட்டுவிடாது!" என்று சொல்லிவிடுவார். அவருடைய வீட்டில் அனேக வேலைக்காரர்கள் இருந்தனர். ஆனால் அவர்களுக்கு அந்தப்புரத்திற்கு வர அனுமதி கிடையாது. சமையல் செய்வதற்கு ஒருவேலைக்காரி; என் மனதைக் குதூகலப்படுத்துவதற்கென்று மற்றொரு பெண் இருந்தாள். ஆயினும் சிலவீட்டுக்காரியங்கள் வீட்டுச் சொந்தக்காரியே செய்ய வேண்டியவளாய் இருக்கிறாள். நான் குருடியாகையால் அப்படிப்பட்ட காரியங்களை என் கணவரே செய்து வந்தார். அவர் எனக்குச் செய்யும் சேவைகள், அவற்றால் அவர் ஆனந்தமடைவது, அதனால் அடையும் மனத் திருப்தி இவைகளெல்லாம் அவரைமனதில் வைத்துப் பூஜிக்கச் செய்தன; அவருடைய பூஜாரியாகிவிட்டேன்.

அவரை என் தெய்வமாகக் கொண்டாடினேன். இப்படிப்பட்ட மனிதர்கள் இந்த உலகில் மிகச் சிலரே இருக்கவேண்டும் என்று எண்ணினேன். அவர் விரும்பினால் எத்தனையோ பெண்கள் (குருடியல்லாதவர்கள்) அழகுடையவர்கள் இருக்கிறார்களல்லவா? அவர்களில் யாரையாவது கலியாணம் செய்துகொண்டிருக்கலாம். அது அவருக்கு ஒன்றும் கஷ்டமில்லை: ஆனாலும் அவர் என்னைத்தான் விரும்பினார். அவருடைய இந்த மனத்திருப்தியால், அன்பானது சிரத்தையின் ரூபத்தில் மாறியது. அந்த வாழ்க்கை, வாழ்க்கையாக் இல்லாமல், சுகமயமான கனவாக இருந்தது. அக்கனவு பயத்தாலும், அதைர்யத்தாலும், குழப்பத்தாலும், துக்கத்தாலும் ஒருபோதும் நஷ்டமடையாமல் இருந்தது. அவருடைய அன்பு என் தெய்விகக் குற்றத்தை மன்னித்துவிட்டது. என் அந்தகார மயமான சிருஷ்டியின் ஒளியாக விளங்கினார்; அவருடைய ஒவ்வொரு க்ஷணத்திலும் அரசுபுரிய விரும்பினேன்.

அவர் வருவதற்குச் சற்று நேரமாகிவிட்டால் என் உயிரே போய்விட்டதுமாதிரி இருக்கும்; மூச்சுத் தடைபட்டுவிடும். இந்த வருத்தம் எவ்வளவு ஆழ்ந்த அன்பைக் காட்டுகிறது?

இந்த வாழ்க்கையில் எவ்வளவு இன்பம் நிறைந்திருக்கிறது? இதைச் சாதாரண மனிதர்களால் அறிந்துகொள்ள முடியாது. எவனுடைய ஹிருதயம் கண்ணில்லாத காமதேவனின் புஷ்ப பாணங்களால் காயப்படுத்தப்படுகிறதோ, அவனால்தான் அறிந்துகொள்ள முடியும்.

ஐந்து வருஷங்கள் கழிந்தன. நான் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டேன். நான் சந்தோஷத்தால் பூரித்துப் போனேன். அவன் எங்களிருவருடைய பரஸ்பர அன்பின் விக்கிரகமாக விளங்கினான். என் குழந்தை மிகவும் அழகாக இருப்பதாக என் சிநேகிதிகள் சொன்னார்கள்.

"நீ, ரஜனி—இருள், உன் குழந்தை சூரியன். இவனுடைய உருவம் மனதை மோகிக்கச் செய்கிறது. இவனைப் பார்ப்பவர்களெல்லாரும் மகிழ்ச்சியடைகின்றார்கள்'' என்று என் சிநேகிதிகள் சொல்வதைக்கேட்டு அகமகிழ்ந்தேன்.

இனிமையான வீணையின் நாதத்தைக் கேட்கும்போது எப்படி நம்மையே மறந்துவிடுகிறோமோ அதேபோல என் குழந்தையைப் புகழும்போது என்னையே நான் மறந்துவிடுவேன். அப்பொழுது, "இவன் கண்கள் எப்படி இருக்கின்றன?'' என்று கேட்பேன். அதற்கு, "பெரிய, பெரிய கண்கள்'' என்று அவர்களிடமிருந்து பதில்வரும்.

பெண்களுக்கு அநேக ஸ்திதிகள் இருக்கின்றன. அவள் பெண்ணாக இருக்கலாம்; சகோதரியாகஇருக்கலாம்; மனைவியாக இருக்கலாம்; ஆயினும், அவைகளில் தாயாக ஆகியபிறகு உண்டாகும் அன்பிற்குச் சமானமாக, உலகத்தில் வேறொன்றும் இல்லை.

இப்போது என்னை ஒரு ஆசை சூழ்ந்துகொண்டது; அது வேறொன்றுமில்லை. என் கணவரைப் பார்க்கவேண்டுமென்பதுதான். அதற்காகவே நான் அடிக்கடி வருந்தலானேன். வேறு என்னதான் என்னால் செய்ய முடியும்? நான் குருடியாய் இருந்தாலும், உணர்ச்சிகள்,

ஆசைகள் நிரம்பிக் கிடந்தன. ஒரு 'தடவையாவது என் கண்களால், என் கணவரைக் காண மாட்டேனா?' என்று மனதைக் கேட்டுக்கொள்வேன். என் குழந்தையை முத்தமிடும்போதும், அவனை என் மார்போடு அணைத்துக்கொள்ளும்போதும், என்னுடைய இந்த நாரி இருதயத்தில் எத்தனை ஆசைகள் பிறக்கின்றன? ஆனால் அந்த ஆசைகளெல்லாம் உண்மையில் பூர்த்தியாகுமா? என்று என் மனதை கேட்டுக் கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியவில்லை.

நான் விரும்பியதெல்லாம் வேறொன்றுமில்லை, இதுதான்: "ஒருக்ஷண நேரம் என் கண்கள் திறந்துகொள்ளட்டும். என் குழந்தையையும், என் கணவரையும் ஒரு முறை பார்த்துவிடுகிறேன்" என்பதுதான். நான் அல்லும் பகலும் இதைக் குறித்தே வருந்திக்கொண்டிருந்தேன். எப்படி ஒரு வீட்டில் பிடித்துக்கொண்ட தீயின் ஜ்வாலை அடுத்த வீட்டையும் பற்றிக்கொள்கிறதோ, அதேபோல என் இருதயத்தில் புகைந்துகொண்டிருந்த ஜ்வாலை என் கணவரையும் பிடித்துக் கொண்டது; அவர் என் மனோபாவத்தைத் தெரிந்துகொண்டுவிட்டார். இப்போது, அவருடைய குரலில் இருந்த மனோஹரத்தன்மை இல்லை; அந்த ரஸம் நிரம்பிய பேச்சுக்களும் அவர் வாயிலிருந்து வெளிவருவதில்லை, பேச்சு, வார்த்தைகளில்கூட வித்தியாசம் காணப்பட்டது. பேசிக்கொண்டிருக்கும் போதே வாய் அடைத்துப்போவார். அப்போதுமட்டும் என் கண்களிலிருந்த அந்தகாரத்திரை விலகிவிட்டிருந்தால், அவருடைய கண்களின் வழியாகச் சொட்டிக்கொண்டிருக்கும் நீர்த் திவலைகளைத் தவிர வேறொன்றையும் பார்த்திருக்கமாட்டேன் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு நாள் அவசர அவசரமாக என் அறைக்குள் நுழைந்தும் நுழையாததுமாய், "ரஜனீ!" என்று கூப்பிட்டார், அவரது உடல் நடுங்கிக் கொண்டிருப்பதுபோல் தென்பட்டது.

"ஏன்" என்றேன் நான்.

"நீ எப்பொழுது குருடியானாய்? நீ பிறவியிலிருந்தே குருடியில்லை என்று நான் நினைக்கிறேன்"

"ஆம்"

"அப்படியானால் உன்கண்கள் கெட்டுப் போய் எத்தனை வருஷங்களாகின்றன?"

"அப்போது எனக்கு மூன்று வயது"

"நன்றாக ஞாபகம் இருக்கிறதா? நிச்சயமாய் உனக்குத் தெரியுமா?"

"ஆம், இதில் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை"

இதைக் கேட்டதும் அவர் என்னை மார்போடணைத்துக்கொண்டே, "கடவுள் தான் காப்பாற்றினார்! கடைசியாக இன்னுமொருதரம் முயற்சி செய்யப் போகிறேன்!" என்றார்.

அவர் குரலில் நம்பிக்கை தொனித்தது. நான் அவர் கரங்களைப் பிடித்துக்கொண்டு, "என்ன விஷயம்?" என்றேன்.

"உன் கண்கள் திறந்துகொள்ள வேண்டும். நீயும் மற்றவர்களைப்போல் கண் பார்வையைப் பெறவேண்டும். நீயும் இந்த உலகத்தின் சிருஷ்டியைப் பார்க்கவேண்டும். இதைத்தான் நான் விரும்புகிறேன். ஆஹா! அப்படி மட்டும் நடந்துவிட்டால்................" இதைச் சொல்லும்போதே அவர் கற்பனா லோகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினார். சற்று நேரம் சும்மா இருந்துவிட்டு மீண்டும், "பிறவிக் குருடர்களைத் தவிர மற்றெல்லோருடைய கண்களும் சரியாக ஆகமுடியும், ஆனால் டாக்டர் மட்டும் நிபுணனாக இருக்கவேண்டும் என்று சில டாக்டர்கள் என்னிடம் சொன்னார்கள். என் நண்பன் ஒருவன் கண் வைத்தியம் கற்றுக்கொள்ள அமெரிக்காவிற்குச் சென்றிருந்தான். அவன் இப்போது அந்தச் சிகிச்சையைக் கற்றுக்கொண்டு வந்திருக்கிறான். அவன் வந்த கொஞ்ச நாட்களிலேயே 'கண் வைத்தியத்திலேயே கெட்டிக்காரன்' என்று பிரக்யாதி அடைந்துவிட்டான். இன்று நான் அவனைச் சந்தித்துக் கேட்டபோது, அவனும் 'பிறவிக் குருடர்களாக மட்டும் இல்லாமலிருந்தால், ஒரே மாதத்தில் குணப்படுத்தி விடுவேன்' என்று சொன்னான்".

"அதெல்லாம் போகட்டும், நல்லவளாக ஆகித்தான் என்ன செய்யப்போகிறேன்" என்றேன் நான்.

"இல்லை; இப்போது என்னாலானமட்டும் முயற்சிசெய்தே தீருவேன்"

"எனக்குப் பயமென்னவென்றால்........."

"உன்கண்கள் திறந்துகொண்டால், நீரொம்ப சந்தோஷப்படுவாய்."

"இந்த முயற்சி வீணாகப் போய்விட்டால்?"

"கடவுளைத் தியானித்துக்கொள், அவர் நம்மைக் கைவிடமாட்டார். இதுவரை அவன் நூறுபேர்களுக்குமேல் சிகிச்சை செய்திருக்கிறான்; அவர்களுள் ஒருவனைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் அவனுக்குப் புகழ்மாலை சூட்டிக்கொண்டிருக்கிறார்கள்."

துடித்துக்கொண்டிருக்கும் என் இருதயத் துடிப்பை அமுக்கிக்கொண்டு, அவ்வளவு கெட்டிக்காரரா அந்த டாக்டர்?" என்று கேட்டேன் ஆச்சரியத்துடன்.

"கெட்டிக்காரர், என்ன? இந்த யுகத்தில் அவதரித்த கடவுள் என்று சொல்."

"அப்படியானால் நான் உங்களெல்லோரையும் பார்க்க முடியும் என்று நினைக்கிறீர்களா?"

"நினைப்பதென்ன? உன் கண்கள் பார்வையைப் பெற்றுவிடும் என்று நம்புகிறேன். கூடிய சீக்கிரம் என்வாழ்க்கை இன்பவாழ்க்கையாக மாறப்போகிறது!"

என் பையனை வாரியணைத்துக்கொண்டேன். என் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடிற்று. மனதில் சிந்தனையின் அலைகள் எழ ஆரம்பித்தன. அந்த இடத்தில் நிராசை என்னும் அமைதி கலைந்துவிட்டது; அதற்குப் பதிலாக ஆசை என்னும் குழப்பமானது குடிகொண்டது. என் மனதில் ஆயிரக்கணக்கான எண்ணங்கள் வந்துகொண்டிருந்தன.

என் கணவர், புத்திரன், பூமி, ஆகாசம், புஷ்பங்கள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், அழகு—இவைகளைப்பற்றி அநுமானத்தின் குதிரையை ஓட்டிக்கொண்டிருந்தேன். "என் கண்கள்மட்டும் திறந்துகொண்டால், கண்களின் அந்தகாரத்திரைமட்டும் விலகிவிட்டால், ஒரு பெரிய கோவில் கட்டச்செய்வேன். அனாதை ஆச்ரமங்களுக்கு நன்கொடை அளிப்பேன். இதை என் தாய் தந்தையர்கள் கேட்டால் பிரமித்துப்போவார்கள். என் சிநேகிதிகள் எனக்கு ஆசீர்வாதம் செய்வார்கள். இந்தச் சந்தோஷத்தின்பொருட்டு ஒரு விருந்து அவசியம் நடத்தவேண்டும். பார்க்குக்குச் செல்லும்போது என்னையும் தன்னுடன் அழைத்துச் செல்லவேண்டுமென்பது என் கணவருடைய அவா; ஆனால் கண்களில்லாத தோஷம் வழியை மறைத்துக்கொண்டது. டாக்டருடைய முயற்சிமட்டும் வெற்றிகரமாக முடிந்துவிட்டால் நான் என் கை விலங்குகளைத் தகர்த்தெறிந்துவிட்டு, டாக்டருடைய மனைவியை அழைத்துக் கொண்டு வருவேன்; அவளுக்குப் பட்டு-பீதாம்பரம் ஒன்று வாங்கித்தருவேன்."

இவ்விதமான எண்ணங்களிலேயே என் மனம் சென்றுகொண்டிருந்தது.

அன்று சாயந்திரம் நான் டாக்டரின் வரவை எதிர் நோக்கிக்கொண்டிருந்தேன்; அவர் வந்த உடனே என் கண்களும் திறந்துகொள்ளும் என்று மனப்பால் குடிக்கலானேன். அப்போது வாசலில் ஏதோ ஒரு கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. என் உடல் நடுங்க ஆரம்பித்தது. அவநம்பிக்கை என் தொண்டையைப்பிடித்து அழுத்தியது. இதற்குள் என் கணவர் வந்து, "டாக்டர் வந்துவிட்டார்" என்றார்.

அதைக் கேட்டதும் என் ஹிருதயம் 'பட், பட்' என்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது; என் தேகம் பூராவும் வியர்வை; உடலில் நடுக்கம்.

டாக்டர் என் கண்களைப் பரீக்ஷிக்க ஆரம்பித்தார். சற்றுநேரம் நிச்சப்தம். பிறகு அவர்,

உங்கள் கூந்தலைக் காப்பாற்ற

மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

எங்கும் கிடைக்கும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்,

சோல் ஏஜண்டுகள் :

ஆங்கிலோ - இந்தியன்
டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்—2

"உன் கண்கள் நன்ருக ஆகிவிடும் என்று நம்பு கிறேன்; இதில் கொஞ்சமும் சந்தேகப்பட வேண்டாம்" என்ருர்.

ஒரு பிச்சைக்காரனிடத்தில் போய், "உனக்கு ராஜ ஸம்பத்துக் கிடைக்கப்போகிறது" என்று சொன்னுல், அந்தப் பிச்சைக்காரன் எவ்வளவு ஆனந்தம் அடைவானே அதைக் காட்டிலும் அதிகமான ஆனந்தம் எனக்கு டாக்டருடைய வார்த்தையைக் கேட்டதும் உண்டாயிற்று. உடனே எழுந்து, என் இரு கைகளையும் கூப்பி, "டாக்டர், ஸார்! உங்களுடைய இந்த உபகாரத்தை என்றென்றும் மறக்கமாட்டேன்" என்றேன்.

அப்போது என் குரலில் ஓர் அபராதியின் பிரார்த்தனையும் மகிழ்ச்சியும் கலந்திருந்தன. கண்கள் திறந்துகொள்ளும் என்ற நம்பிக்கையானது இத்தனை நாளாக இருந்துவந்த சந்தோஷத்தையும், அமைதியையும் பறக்கடித்துவிட்டது.

— 6 —

'ஆப்ரேஷன்' செய்யப்பட்டது; மிக வெற்றிகரமாகவே செய்யப்பட்டது. என் கணவரின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. 'இன்னும் கொஞ்ச நாட்கள்தான் இருக்கின்றன. நீ இந்த உலகத்தின் ஒவ்வொரு காட்சியையும் காண்பாய்' என்று அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். பிறகு என்னிடம், "உனக்கு இதுவரை இந்த விஷயம் தெரியாமலேயே இருக்கலாம்; அப்படியே தெரிந்திருந்தாலும் கண்கள் இல்லாதது எவ்வளவு பெரிய அக்கிரமம் என்பதை நீ பூர்ணமாக அறிந்திருக்கமாட்டாய். கொஞ்சம் உன் கண்களில் இருக்கும் கட்டைத்தான் அவிழ்த்துவிடேன்; பிறகு தெரியும் உனக்கு. ஒரு நாளைக்குக் கண்ணில் வலி ஏற்பட்டாலும் அல்லது இருட்டில் இருக்க நேர்ந்தாலும் ஹிருதயம் நடுங்குகிறது; அப்போது உடனே அறையின் கதவுகளை உடைத்தெறிந்து விட்டாவது வெளியில் ஓடுவதற்கு மனம் விரும்புகிறது. ஆயினும் நீ சேர்ந்தாற்போல் அநேக வருஷங்களாக இதே நிலையில் இருக்கிருய். அப்படி.................."

இதைக் கேட்டதும், என் சந்தோஷத்தை மறைப்பதற்கு முயற்சி செய்துகொண்டே, "அப்படியானுல் நான் உங்கள் எல்லோரையும் பார்ப்பேனு? இது உங்களுக்கு நிச்சயமாகத் தெரிகிறதா?" என்று கேட்டேன்.

"சந்தேகமில்லாமல்; பதின்மூன்று நாட்களுக்குப் பிறகு".

"ரொம்ப சந்தோஷம் போலிருக்கே, உங்களுக்கு."

"ஒன்றும் கேட்காதே. என்னுடைய ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொரு வருஷத்திற்குச் சமமாகக் கழிந்துகொண்டிருக்கிறது. இந்த நாட்கள் ஏன் இன்னும் கழிந்துபோகவில்லை என்று வருந்திக்கொண்டிருக்கிறேன். அமைதியே இல்லை. ஒருவேளை அந்தப் பதின்மூன்ருவது நாட்களுக்குள் எனக்குப் பயித்தியம் பிடித்துவிடும்போல் இருக்கிறது?"

"ஒரு வேளை இந்தச் சந்தோஷம், நம்பிக்கை எல்லாம் நிர்மூலமாகிவிட்டால்?"

"அப்படி ஒருபோதும் நடக்காது; இது அசம்பாவிதம்."

"நம்பிக்கை எப்போதும் ஏமாற்றத்தைத் தானே அளிக்கிறது"

"ஆனுல் இது நம்பிக்கை இல்லையே."

ஆம், உண்மையில் இது நம்பிக்கையில்லை தான். எனக்குக்கூட 'இது நம்பிக்கை இல்லை' என்று நிச்சயமாய்த் தெரியும். என் கண்கள் பார்வையைப் பெற்றுவிடும் என்று நிச்சயமாய்த் தெரியும்; ஆனுலும் அவருடைய இருதயத்தில் இருக்கும் உண்மையை அறிந்துகொள்ளுவதற்காகவும் என் நம்பிக்கையை இன்னும் ஸ்திரப்படுத்திக்கொள்வதற்காகவும், "ஏன்" என்று கேட்டேன்.

"டாக்டர் சொல்லியிருக்கிருர்."

"டாக்டர்தான் கடவுள் அல்லவே; மனுஷ்யர்தானே."

இதைக்கேட்டதும் அவர் ஒன்றும் பேசவில்லை. ஆனந்தத்தின் கற்பனைகளில் ஏதோ துக்கசமாச்சாரம் வந்துவிட்டதுபோல, சற்று நேரம் கழித்து என் கைகளைப் பிடித்துக் கொண்டு, "டாக்டர் தம் வித்தையில் நிகரற்றவர்; அவருக்கு நிகர் அவர்தான். அவருடைய வார்த்தை பொய்யாகாது. நான் இப்போது பூரித்துக்கொண்டிருக்கிறேன், அரசன், இம்பீரியல் பாங்கிற்கு, 'செக்' எழுதிக்கொடுத்துவிட்டதுபோல்.

'செக்' கிடைத்துவிட்டது; ரூபாய் கிடைப்பதற்கு ஒரு தடையும் இல்லை. கேவலம் அந்தப் பதின்மூன்ருவது நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். அரசனும் ஆண்டியாக முடியாது; டாக்டருடைய வார்த்தையும் பொய்யாது. நீ ஏன் இவ்விதம் உன் இருதயத்தைச் சந்தேகத்தால் வியாகுலப்படுத்திக் கொள்கிருய்?"

பன்னிரண்டு நாட்கள் கழிந்துவிட்டன. இப்போது கேவலம் ஒரே ஒரு நாள்தான் பாக்கி. நாளை இந்நேரத்திற்கு என்ன ஆகும் என்று யோசித்துக்கொண்டிருந்தேன். ஒரு சமயம் நம்பிக்கை இருதய கமலத்தை மலரச் செய்யும்; ஒரு சமயம் அவநம்பிக்கை மனக் குழப்பத்தை உண்டாக்கிவிடும். கண்களில் கட்டுக் கட்டிக்கொண்டு பன்னிரண்டு நாட்களை அனுயாசமாகக் கடத்திவிட்டேன்,

இப்போது இந்த ஒருநாள்கழிவது மிகவும் கஷ்டமாகிவிட்டது. பன்னிரண்டு நாட்களை ஒரு கஷ்டமும் ஒருவிதமான மனக்குழப்பமும் இல்லாமல் கடத்திய எனக்கு முடிவு நாளாகிய அந்தப் பதின்மூன்றாவதுநாளை நெருங்கியதும் ஏனோ என்தேகம் நடுங்கியது. 'இந்த ஒருநாள் ஒருகணமாகி மாறி விடவேண்டும், என் கண்களில் இருக்கும் கட்டையும் அவிழ்த்துத் தூர எறிந்துவிடவேண்டும்' என்று நினைத்தேன்; ஆனால் இயற்கையின் அசைவற்ற நியமனத்தை மாற்றியவர்தான் யார்? நேரம் அதே பிரகாரம் மெள்ள மெள்ளத் தன் நிமிஷங்களின் கால்களால் நடக்க ஆரம்பித்தது. அதற்கு என்னைப்பற்றி என்ன கவலை? சாயங்கால வேளை. என் கணவர் கச்சேரியிலிருந்து வந்துவிட்டார். சூரஜ் பாலனைத் (என்புத்திரனின் பெயர் சூரஜ்பால்) தூக்கிக்கொண்டு என் அறைக்குள் நுழைந்தார். என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டே "நாளை இதே சமயம் எப்படி இருக்கும்?" என்றுகேட்டார். நான் என் கைகளை உயரத்தூக்கி, கடவுள்தான் கிருபை செய்ய வேண்டும்" என்றேன்.

"அவசியம் கடவுள் கிருபை செய்வார்" எப்படி மிருதங்கத்தில் விரல்கள் பட்டவுடன் இனிமையான நாதம் உண்டாகிறதோ அதே போல என் ஹிருதயத்திலும், அவர் சொன்ன வார்த்தைகள் இன்பமாகிற சப்தத்தை உண்டாக்கின. அவைகள்தான் எவ்வளவு இன்பத்தை அளித்தன! எவ்வளவு ஆனந்தத்தைக்கொடுத்தன! அவற்றில் மிருதங்கத்தின் இனிமையும் ஸ்வப்பன-சங்கீதத்தின் மயக்கமும் இருந்தன. "இந்த மோகம் அருகில்வந்த பிறகும்கூட இப்படியே நிலையாக இருக்குமா? இந்த மயக்கம்-மோகம் விழித்துக்கொண்ட பிறகும் ஸ்திரமாக இருக்குமா?" என்று எண்ணினேன். அதே ஸமயம் அவர், "அப்பா, எவ்வளவு உஷ்ணம் உட்காரக் கூட முடியவில்லையே" என்றார். நான் பங்காவின் கயிற்றைப்பிடித்துக்கொண்டே, "என் ஜன்னலைத்தான் திறந்துவிடுங்களேன். சூரஜ் பால்கூட பயப்படுகிறாள்" என்றேன்.

இதைக்கேட்டதும் அவர் துள்ளிக் குதித்தார். உடனே, "என்ன சொல்கிறாய்? ஜன்னலைத் திறக்கவா? டாக்டர், எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்? மறந்துவிட்டாயா, என்ன?"

"ஆனாலும் இப்பொழுதுதான் சயங்காலமாகிவிட்டதே? கொஞ்சம் ஜன்னலைத் திறவுங்கள்; என் கண்களில்தான் 'கட்டு' கட்டியிருக்கிறதே" என்று வாதாடினேன். என் கணவர் எவ்வளவோ தடுத்துப் பார்த்தார்; நான் அவருடைய வார்த்தையைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. ஜன்னலைத் திறந்தேன். சூரஜ் பால் கைகளைக்கொட்டிக்கொண்டு ஆர்ப்பரித்தான். ஜன்னலைத் திறந்தவுடன் அவனுக்கு ஆனந்தம் தாளமுடியவில்லை. நான் அவன் சிரிப்பதைப்பார்க்க விரும்பினேன்; ஆனால் கண்களில் கட்டுக் கட்டப்பட்டிருந்தது.

பிறகு சூரஜ்பால் ஜன்னலின்மேல் ஏறி விளையாடிக்கொண்டிருந்தான். அந்த ஜன்னலுக்குப் பக்கத்தில் முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று சுவரில் தொங்கவிடப்பட்டிருந்தது. அவன் அந்தக் கண்ணாடியைப் பிடித்து இழுத்தானோ அல்லது அதில் தன் முகத்தைப் பார்க்க முயன்றானோ எனக்குத் தெரியாது. ஆனால் என் கணவர் "சூரஜ்! கண்ணாடியை விட்டுவிடு; உடைந்துவிடும்" என்று கத்தியதுமட்டும் என் காதுகளில் விழுந்தது. சற்று நேரத்திற்குப்பிறகு மீண்டும் என் கணவர் "ரஜனீ! சற்று இப்படிப் பாரேன்!" என்றார். என் கணவர் சொன்ன வார்த்தைகளில் எவ்வளவு பதட்டம், எவ்வளவு அவசரம், நிரம்பியிருந்தது என்று வர்ணிக்க என்னால் முடியாவிட்டாலும், அவர் சொன்ன அதே சமயம் பார்க்காவிட்டால். இனி எப்பொழுதுமதைப்போன்ற காட்சியைப் பார்க்க முடியாது என்பதை அவருடைய குரல் சொல்லிற்று! அவ்வளவுதான்! என் நிலையைப் பற்றிய ஞாபகமே எனக்கில்லை! அந்தச் சமயம் மீகவும் ஆபத்தானது என்பதையும் நான் குருடியென்பதையும் மறந்தேன். ஒரே ஒரு நாளைக்குத்தான் சந்தோஷப்படமுடியும்;

ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

இந்த அஜாக்கிரதையின் காரணமாக என் வாழ்க்கை ஸர்வநாசமாகிவிடும்; பிறகு எந்தச் சக்தியாலும், எந்த உபாயத்தாலும்கூட என் கண்களைத்திறக்க முடியாது என்பதை நான் அறியவில்லை. நான் பைத்தியம் பிடித்தவளாகிவிட்டேன். எனக்கு அப்படிப்பட்ட நிலை இதுவரை ஒருபொழுதும் உண்டானதில்லை. என் கரங்கள் என் வசத்தில் இல்லை. அவைகள் என் கண்களிலிருந்த கட்டை அவிழ்த்துப் பூமியில் எறிந்துவிட்டன! நான் கண்களைத் திறந்தேன்! என்ன ஆச்சரியம்! என்னால் பார்க்க முடிந்தது. ஒரேதிருஷ்டியில் என் கணவரையும் என் குழந்தையையும், ஜன்னலின் வழியாகத் தென்பட்ட தோட்டத்தின் சில பாகங்களையும் பார்த்தேன்! அதே ஆனந்தத்தில் "நான் உங்களைப் பார்த்துவிட்டேன்" என்று கத்தினேன்.

அவர், ஆச்சர்யம், பயம் ஆனந்தம் இவைகளெல்லாம் கலந்த பார்வையில் என்னை நோக்கினார். அவருடைய கண்களும் என் கண்களும் ஒன்றோடொன்று சந்தித்தன! அவ்வளவுதான்! மறுபடியும் நாலா பக்கங்களிலும் இருள் சூழ்ந்துகொண்டது மறுபடியும் என் கண்கள் பார்வையை இழந்தன! என் இருண்ட உலகம், என் கணவரின் அன்பானமுகத்தையும், என் குழந்தையின் முகத்தையும் மறுபடியும்தன்னுள் மறைத்துக்கொண்டது. என் இருதயத்திலிருந்து பெருமூச்சுக் கிளம்பி, நான்மூர்ச்சையடைந்து கீழே விழுந்தேன். பாங்கியிலிருந்து ரூபாய் கிடைத்துவிட்டது, அதுவும் கெடுவுக்கு முன்னால். ஆனால் என் அஜாக்கிரதையினால் அதைத் தண்ணீரில் கொட்டிவிட்டேன்.

இப்போது எனக்கு ஒரு நம்பிக்கையும் இல்லை. நான் அந்த நம்பிக்கை என்ற வழியை என் கரங்களாலேயே மூடிவிட்டேன். மறுபடியும் என் கண்கள் திறந்துகொள்ளவேண்டும் என்ற ஆவல் கடுகளவும் என் ஹிருதயத்தில் இல்லை. வெகுநாட்கள் வரை அழுதுகொண்டே இருந்தேன். என் கணவர் எனக்குத் தைரியமூட்டினார். "நடந்ததைக் குறித்து வருந்தாதே. நீ உயிருடன் இரு, அதுவே போதும்." என்றார். ஆனால் இந்தத் தைரியமூட்டும் வார்த்தைகள் என் இருதயத்தில் ஈட்டிபோல் குத்திக்கொண்டிருந்தன என்பதை அவர் அறியவில்லை. என் உடல் தீயிலிட்ட புழுப்போல் துடித்துக்கொண்டிருந்தது. 'ஒரு தடவை கண்கள் திறந்துகொண்டால் நான் மிகவும் சந்தோஷமடைவேன்' என்று நான் நினைத்தேன். ஆனால் அது சுத்தப் பொய் என்பது இப்போது தெரிந்துவிட்டது. ஒருக்ஷண நேரத்துப் பார்வையில் என் துர்ப்பாக்யத்தின் துக்கத்தைத்தான் அநுபவித்தேன் என்பதை உணர்ந்தேன்.



— 7 —

என்னிடம் வந்த விபத்து தன்னுடன் ஒரு ஜோதியையும் கொண்டுவந்தது. அது நம்பிக்கையின் ஜோதி அல்ல. அது ஒரு சமயம் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்; ஒரு சமயம் ஒளி இழந்துவிடும். இது ஆசையற்ற நம்பிக்கையின் ஒளியாக இருந்தது; இது எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டே இருக்கும். ஒளியிழப்பதில்லை, நான் என் கணவரையும் புத்திரனையும் பார்த்துவிட்டேன், புஷ்பங்கள் மிக அழகாக இருக்கின்றன என்று கேட்டிருக்கிறேன். அது உண்மையானால், 'நான் ஒரு க்ஷணமாத்திரத்தில் இரண்டு அதிசுந்தரமான

புஷ்பங்களைக் கண்டேன்; அதைக்காட்டிலும் நல்ல பொருளை நான் பார்த்திருக்கமாட்டேன்' என்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். அவைகள் இன்றுகூட என் அந்தகார மயமான சிருஷ்டியில் அதே மாதிரி பசுமையாக மலர்ந்திருக்கின்றன. அவைகளின் உருவங்கள் என் ஹிருதய பீடத்தில் அமரத்வம் பெற்றுவிட்டன. இந்த உலகத்திலுள்ள ஒரு சக்தியும் ஒருவஸ்துவும், ஒரு உரிமையும் அவைகளை அழிக்கமுடியாது.

சில நாட்களுக்குப்பிறகு ஊரில் வைசூரி பரவிவிட்டது. எங்குப் பார்த்தாலும் இதே பேச்சாக இருந்தது. சூரஜ்பால் விளையாடுவதற்கு அடிக்கடி வெளியே ஓடிவிடுவான். வெளியில் போகவேண்டாமென்று எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டான். ஒரு நாள் என் கணவர், “சூரஜ்பாலை வெளியில் போக விடாதே, இனி என்வாழ்க்கையின் ஆதாரம் இவன்தான்!' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் குழந்தையின் கால்களில் இரும்புச்சங்கிலியா போடப்பட்டிருக்கிறது? அவன் வேலைக்கரர்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு வெளியே ஓடிவிடுவான். கடைசியில் அவனையும் இந்த ரோகம்பிடித்துக்கொண்டது. இது என் கணவருக்கு மிகவும் துக்கத்தைக்கொடுத்தது. பேரிடி அவருடைய தலையில்விழுந்ததுபோல், இரவும் பகலும் அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அவனுக்குச் சிசுருஷைசெய்துவந்தார். அவன் படுத்துறங்கினால் தாமும் உறங்குவார், அவன் விழித்துக்கொள்ளும் போதெல்லாம் தாமும் விழித்துக்கொள்வார். ஒருநிமிஷம் கூட அவனைவிட்டுப்பிரியவில்லை. அல்லும்பகலும் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டார். இதன் நிமித்தம் கச்சேரிக்குப்போவது நின்றுவிட்டது. சூரஜ்பாலுக்குச்செய்த சிசுருஷையின் முடிவாக கணவருக்கும் அந்நோய் வந்துவிட்டது. 'இந்த வழக்கில் மட்டும் கடவுள் எனக்கு வெற்றி அளிக்கட்டும். எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். என்குழந்தைக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கட்டும்' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் அதற்கு நேர் விரோதமாக என் கணவரையும் அந்நோய் பற்றிக்கொண்ட செய்தி என் தலையில் உண்மையாகவே இடி விழுந்ததுபோல் இருந்தது. என் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக அவர் தம்மையும் படுகுழியில் தாமே தள்ளிக்கொண்டார். இப்போது, துக்கமே நிரம்பிய என் இருதயத்தில் புயல் அடித்தது. நிந்தையான இயற்கையின் கைகள் என்னிடம் இருந்த இரண்டு புஷ்பங்களையும் பற்றிப் பறிப்பதற்குத் தயாராய் இருந்தன; ஆயினும் இரவும் பகலும் தெரியாத நான் (குருடிக்கு இரவும் பகலும் ஒன்றுதானே) அவர்களுடைய சேவையில் ஈடுபட்டு இருந்தேன். அபலையான எனக்குக் கடவுள் வெற்றியை அளித்தார். நோய் அவர்களை விட்டு நீங்கியது. என் ஆனந்தத்திற்களவில்லை, காணாமற்போன திரவியம் திரும்பக் கிடைத்ததுபோல். அவர் அன்புடன் என் கைகளைப்பற்றிக்கொண்டு “நீதான் எங்களை மரணத்தின் வாயிலிருந்து காப்பாற்றினாய்; இல்லாவிட்டால்...........”

நான் உடனே என்கையால் அவர் வாயை மூடி, “போதும், இதற்குமேல் ஒன்றும் சொல்ல வேண்டாம். அவைகளைக்கேட்க என் காதிற்குச் சக்தியில்லை!” என்றேன். பிறகு அவர் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரத்திற்குப்பின், அவர் அழுதுகொண்டிருக்கிறார் என்று தெரிந்துகொண்டேன். உடனே நான், “ஏன்! அழுகிறீர்கள்? இனிமேல் ஒன்றும் பயம் இல்லையே?” என்று கேட்டதற்கு அவரிடமிருந்து ஒன்றும் பதில் இல்லை. ஆனால். அதற்குப் பதிலாக அந்த அழுகையில் விம்மலும் சேர்ந்துகொண்டது. நான் திடுக்கிட்டுப்போனேன். என் ஹிருதயம் துடித்தது. பிறகு “மறுபடியும், “எதற்காக அழுகிறீர்கள்?” என்று கேட்டேன். என்வார்த்தையில் பயம் நிரம்பியிருந்தது. சற்றுநேரத்திற்குப் பிறகு விம்மல்கள் அடங்கியவுடன், தடுமாறிக் கொண்டே, “ஒருவேளை உன்னால் பார்க்க நேர்ந்தால், எங்களைப் பார்த்ததும் மூர்ச்சை போட்டுவிடுவாய்” என்றார். அவர் சொன்னது எனக்கொன்றும் புரியவில்லை. “உங்கள் அபிப்பிராயம் என்ன? வெளிப்படையாகச் சொல்லுங்கள்” என்றேன்.

“என் உருவமும் சூரஜ் பாலனின் உருவமும் மாறிவிட்டன; அவைகளை மட்டும் நீ பார்க்க நேர்ந்தால் கண்டிப்பாய்ப் பயந்துவிடுவாய்; உன் ஹிருதயம் துடித்துப்போகும்” என்றார்.

இதைக் கேட்டதும் என் உடலில் ஏதோ ஓர் உணர்ச்சி பரவியது. நான் எழுந்து நின்றுகொண்டேன். “அப்படி யிருந்தாலும் என் கண்களில் எந்த உங்களுடைய உருவங்கள் அமைந்துவிட்டனவோ அவைகளை மாற்ற யாரால் முடியும்? இந்த உலகத்தின் கண்களுக்குவேண்டுமானால் நீங்கள் மாறிவிடலாம்; ஆனால் என் கண்களில், நீங்கள் முன்போலவே அழகாகவும், மனோகரமாகவும் காணப்படுகிறீர்கள். கடவுள் இரண்டாவது முறையும் என் கண்களைப் பிடுங்கிப் பொறுக்கமுடியாத ஒரு பெரிய அநியாயத்தை எனக்குச் செய்துவிட்டார் என்று எண்ணினேன். ஆனால் இன்று அந்த அநியாயமாகிய அந்தகாரத்திரையில் கடவுளின் அபரிமிதமான கருணை மறைந்திருந்ததை நான் கண்டுகொண்டேன்.” நான் இதைச் சொல்லி நிறுத்தியதும் எனக்கு ஏதோ பிரமை தட்டியதுபோல் இருந்தது, என் உடல் தள்ளாடிற்று. அப்போது என் கணவர் என்னைப் பற்றிக்கொண்டார். நான் என் கைகளை அவருடைய தோளில் போட்டேன். என் விரல்கள் அவருடைய கழுத்தைத் தடவின. அப்போது என் இருண்ட உலகத்தில் வர்ணிக்கமுடியாத ஒரு ஜ்யோதி சுடர் விட்டுப் பிரகாசித்தது.

501
SPECIAL
HOUSEHOLD SOAP
SPECIALLY MADE FOR
501 SPECIAL
501 ஸ்பெஷல்
வீட்டிற்குரிய சோப்பு
மெல்லிய ஆடைகள்
விஷயத்தில் பிரத்-
தியேக ஜாக்கிரதை
வேண்டும்
A TATA PRODUCT
டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியர் வீதி, P.B. நெ. 31
சென்னை.

கல் வடிவங்களிலும் மரப் பதுமைகளிலும் கடவுளை ஸாக்ஷாத்காரம் செய்து உபாஸனை செய்யும் குடிகள் படைத்த தேசம் அது. சிலைகளிலே கடவுளைக் காணும் யுகம் என்று கூட அதைச் சொல்லலாம்.

அத்தேசத்திற்கோர் அரசன். இகலோக ஐச்வரியங்களில்மட்டுமன்றி, பாரமார்த்திக புத்தியிலும் தனது குடிகள் தேர்ச்சிபெற்றவர்களாயிருக்கவேண்டும் என்பது அவ்வரசனின் நோக்கம். அரசனது ஆசையைப் பூர்த்திசெய்வதில், கண்ணுங் கருத்துமாயிருந்தன குடிபடைகளும்.

அரசனின் ஆசைகளெல்லாம், புரோகிதர்களின் ஆசிபெற்று, மந்திரி பிரதானிகளால் உருவுற்று, குடிகளுக்கு ஆனந்தமளித்து வந்தன.

ஒருதடவை அவ்வரசன் தன் நாட்டைச் சுற்றிப் பார்த்துவரத் தன் மந்திரி பிரதானிகள் புடைசூழப் புறப்பட்டான். தன் குடிகளின் ஆனந்த இன்ப வாழ்க்கையைக் கண்ணுற்ற அரசனுக்கு அளவுகடந்த புளகம் ஏற்பட்டது. நாட்டில் எந்தக் கோயிலிலும் புருஷப் பதுமையையன்றிப் பெண் பதுமைகளையே அவன் காணவில்லை. குடிகள் ஆண் பிம்பத்தை மட்டும் வைத்துப் பூஜித்து வந்தன. ஸௌந்தரியோபாஸகனான அரசனுக்கு, 'குடிகள் ஏன் ஆண் சிலையை மட்டும் வைத்துப் பூஜிக்கின்றன? பெண் சிலைகளைவைத்துப் பூஜிப்பதில்லை' என்ற விஷயம், விளங்கவில்லை. மந்திரிகளைக் கேட்டான். அவர்களாலும் சந்தேகத்தைத் தீர்த்துவைக்க முடியவில்லை. சிக்கலான பிரச்னைகளைத் தீர்த்துவைப்பது மந்திரிகளின் கடமையல்லவா! ஆதலால் இப்பொறுப்பு அவர்கள்மீது விழுந்தது.

— 2 —

விசாரித்த பின்னர், அந்த நாட்டில், ஆண் வடிவங்களைச் சமைக்கும் ஆற்றல் வாய்ந்த ஒரே ஒரு சில்பிதான் இருப்பதாகத் தெரிய வந்தது.

சில்பி தன் பெருமையை அறியாதவனாய் ஒரு சிறு குடிசையில் வசித்துவந்தான். அரசனது ஆக்ஞை, அவனுக்குப் பிறப்பிக்கப்பட்டது. அவன் பாதி திறந்த கண்களுடன், தன்னுள்ளத் திரையில் எழுந்த உருவத்தை, கல்தூண், ஒன்றில் உருவகப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். அவனது அம்முயற்சியில், யோகியின் தியானமும், பக்தனின் உணர்ச்சியும் ஒருங்கே கூடியிருந்தன.

சிறு பிராயத்திலிருந்தே, குடிகளுக்குப் பூஜைக்குத் தக்க சிலைகளைச் சமைத்துக் கொடுத்து வருவதுதான் அவனது வழக்கம்—லக்ஷியமாக இருந்து வந்தது. தாய்தந்தையின் உபதேசம், குருவின் கட்டளை எல்லாம் அதுவே. அக்கடமையை நிறைவேற்றுவதில் எப்பொழுதுமே கவனமாயிருந்து வந்தான்.

அவன் கைகளால் ஆக்கப்பட்ட ஹனுமான் குடிகளின் பூஜையை ஒத்துக்கொண்டு, அவர்களை வீரர்களாக்கி வந்தான். அவனது கைகளால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீராமச்சந்திரர், குடிகளின் நிவேதனங்களையும், பூஜைகளையும் ஏற்று, அவர்கள் மனோபீஷ்டங்களைப் பூர்த்தி செய்துவந்தார். அவனது கைகளால் செதுக்கப்பட்ட கிருஷ்ண விக்கிரஹம் குடிகளின் ஸ்துதியைக் கேட்டு, முக்தி அளித்து வந்தது. தன்னைச் சிருஷ்டித்த சில்பிக்குத் 'திருப்தி என்னும் ஐச்வரியத்தை வேண்டுமளவு கொடுத்துத்

திருப்திசெய்து வந்தன அச் சிலைகள். சில்பியின் குடும்பத்தைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு குடிகளினுடையது. சில்பிக்குக் குடும்பக்கவலையே கிடையாது. அரசனது கட்டளையை அடைந்த சில்பி, அரச அவையை அடைந்தான்.

— 3 —

'இந்த நாட்டிற்கு நீதானே சில்பி?'

'ஆம், அடியேனும் ஒருவன்.'

'அந்த அக்ரஹாரத்திலிருக்கும் சிவலிங்கம் நீ செய்ததுதானே?''

'ஆம், மஹாராஜா'

'அந்தணர் தெருவிலிருக்கும் அந்த ராமர் சிலை?'

'நான் செய்ததுதான்'

'ஸ்ரீபுரத்து ஹனுமான்?'

'மகாராஜா, நான்தான்'

'களநாட்டுக் கிருஷ்ண விக்ரஹம் செய்தது?'

'அதுவும் இந்த அடிமைதான்'

'திபபுரத்தின் சூரியப் பிரதிமை?'

'அடியேனே'.

'பெண் தெய்வங்களின் சிலை ஏதாவது செதுக்கியிருக்கிறாயா?'

'மகாராஜா, நான்......,

'சொல். எந்தச் சிலை?'

'பெண்சிலை மகாராஜா, நான்........'

'சொல்லு'

'செய்த.........'

'செய்ததில்லையா?'

'இல்லை மகாராஜா!'

ஒன்றுகூட?'

'ஒன்றே.........'

'......ஒன்று செய்திருக்கிறாயா?'

'ஆம் மகாராஜா.'

'யாருடையது?'

'சொல்லட்டுமா?......'

'தாராளமாய்ப் பயப்படமல் சொல்லு'

'என் அன்னையினுடையது'

'உன் அன்னையினுடையதா? அது தெய்வச் சிலையாகிவிடுமா?'

'அது குடிகளுக்காக அல்ல, எனக்காக மட்டும்......'

'அந்தச் சிலை எங்கிருக்கிறது?'

'நான் பூஜித்து வருகிறேன். குடிகளுக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை'

'உன் வீட்டிலேயே இருக்கிறதா?'

'ஆம் மகாராஜா!'

'மற்றச் சிலைகளைப்போலத்தானே அதுவும்?'

'ஆம். அழகில் அவைகளுக்கு ஈடானதுதான் அது. ஆனால் எனக்கு எல்லாவற்றையும் விட அதுதான் உயர்ந்தது?'

'குடிகளுக்குத் தம் தாயைப் பூஜிக்க ஆவல் இராதா?'

'இல்லாமலிருக்குமா, மகாராஜா?'

'அவர்களின் ஆசையை உன்னையன்றி யார் பூர்த்தி செய்வார்?'

'மகாராஜா!'

'அவர்கள் ஆசையை நீ பூர்த்தி செய்துவிடுவாயல்லவா?'

'என்னால் அது நடக்கக் கூடியதுதானா, மகாராஜா!'

'உன்னாலன்றி வேறு யாரால் நடக்கக்கூடும்!'

'அவ்வளவு சக்தி எனக்கில்லை, மகாராஜா!'

'ஆண் வடிவங்கள் சமைப்பதில் இவ்வளவு எழிலை வாரியிறைக்கும் நீயா இப்படிக் கூறுகிறாய்? கடவுளுக்குக் குற்றமிழைப்பதாக ஆகாதா?'

'மகாராஜா!'

'தன் அன்னையின் உருவத்தைச் சிருஷ்டிக்கும் கைகளில் உலகத்து அன்னையின் உருவச் சிலையைச் சிருஷ்டிக்கும் சக்தி கட்டாயம் இருக்கும்.'

'மகாராஜா—'

'குடிகளின் மனத்தில் தாயன்பை உண்டு பண்ணுவதற்கென உலகத்து மூன்று அன்னைகளின் உருவச் சிலைகளையும் தயார் செய்.'

'மகாராஜா. ஒரு பிரார்த்தனை.'

'உனது சில்ப வடிவங்கள் ஸதா ஸர்வகாலமும் முக்திக்கு வழிகாட்டிகளாயிருப்பவை. போய் உருவச் சிலைகளைத் தயார் செய்'

'மகாராஜா. ஒரு.........'

'ஒரு வருஷம் தானே வேண்டும்?'

'மகாராஜா.........'

'சரி, நீ போகலாம்.'

'அப்படியே மகாராஜா........,'

அரசனது கட்டளையைப் பெற்ற சில்பி, போனதும் தன் காரியத்தை ஆரம்பித்திருக்க வேண்டும்; அரசனது தயவையும் தனத்தையும் பெறும் பொருட்டாவது, கல்பாறைகளில் வடிவங்களைச் செதுக்க ஆரம்பித்திருக்க வேண்டும். அல்லவா!

ஆனால் இதுகாறும் சில்ப வேலையில் ஈடுபட்டிருந்த அதே சில்பி, அரச ஆக்ஞை கிடைத்த தற்குப் பிறகு, கல் சுத்தியலை எடுக்கவேயில்லை. தனியாக ஓரிடத்தில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்துவிட்டான். நாட்கள் பல சென்றன. ஒரு மாதம் ஆயிற்று. இரண்டாம் மாதமும் உருண்டோடியது. மூன்றும் மாதமும் கடந்துவிட்டது. ஆனால் அவன் மனத்தை ஒருமனப் படுத்துவதில் ஈடுபட்டிருந்தான், ஏகாந்தத்தில் அமர்ந்த வண்ணம்.

அவனது குடும்பக் கவலையெல்லாம் அரசன் மேல் விழுந்தது. மாதங்கள் உருண்டோடிய வண்ணம் இருந்தன.

கற்கள் சேகரிக்கும் எண்ணமே சில்பிக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆயுதங்களைச் சீர்திருத்தவும் அவன் மனம் நாடவில்லை.

வருஷம் முடியவிருந்தது. அரசனே, தேச தேசாந்தரங்களிலிருந்து நல்ல கற்களாகத் தேர்ந்தெடுத்து வாங்கி அனுப்பினான். வேலையாட்கள்மூலம் நல்ல உளி, சுத்தியல் முதலியவைகளைச் செய்து அனுப்பினான். சில்பி இதையெல்லாம் கண்டு தனக்குள் சிரித்துக்கொண்டான். வருஷமும் முடிந்துவிட்டது. அரசவைக்கு வரும்படி சில்பிக்கு உத்தரவு வந்துவிட்டது.

5

'சில்பி!'

'மகாராஜா!'

'சிலைகள் செய்து முடிந்துவிட்டனவா?'

'மகாராஜா. ஒரு விண்ணப்பம்.........'

'உன் சக்தியே உனக்குத் தெரியமாட்டேனென்கிறதே! ஆண் வடிவங்களை அழகாகப் பொறிக்கும் உன் கைகள் பெண் வடிவங்களைப் பொறிக்கும் சக்தியை எப்படி இழந்துவிடும்? சிலைகள் நன்ருக அமைந்திருக்கின்றனவா?'

'மகாராஜா! அடியேனை மன்னித்தருள வேண்டும்.'

'மன்னிப்பா? அது எதற்கு? இன்று உன்னைக் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.'

'மகாராஜா! நான் தங்களுக்கிழைத்திருக்கும் திங்கிற்குத் தக்க தண்டனை அனுபவிக்கவும் தயாராயிருக்கிறேன்.

'ஏன், தண்டனை எதற்காக?'

'ராஜாதிராஜ்! ஒரு வேண்டுகோள்.........'

'என்ன? சொல்'

'கொடுத்த அவகாசம் முடிந்துவிட்டது. தங்களது உத்தரவை நான் நிறைவேற்றினபாடில்லை.'

'என்ன? சிலைகள் தயாராகவில்லையா?'

'அவ்வேலை என்னால் செய்ய முடியவில்லை.'

'அரசனது உத்தரவை மீறினையல்லவா?'

'ஆம் மகாராஜா!'

'உன் குடும்பத்தை நான் புண்ணிய தனத்தினால் ரக்ஷித்தேன், தெரியுமா?'

'தெரியும் மகாராஜா.'

'அப்படி யிருக்கும்பொழுது அதற்காக நீ என்ன உழைத்தாய்?'

'மகாராஜா. ஒரு பிரார்த்தனை.'

'சில்பக் கலையில் கைதேர்ந்த நீ இதுவரை வேலையைத் தொடங்காமலிருப்பதற்குக் காரணம்?'

'மகாராஜா! அதுதான் கூறுகிறேன்.'

'சொல்.'

'மூன்று அன்னைகளின் வடிவங்களையும் தயார் செய்யவேண்டுமென்பது தாங்கள் எனக்கிட்ட கட்டளை?

'ஆம்.'

'நான் சாதாரண மனிதன்.'

'இருக்கலாம்.'

'இந்திரியங்கள் சக்தி வாய்ந்தவை.'

'ஆம்.'

'அப்படி இருக்கும்பொழுது என்னைப் போன்ற சாதாரண மனிதனால் கற்பனைக்கும் எட்டாத பெண் தெய்வங்களை நிர்மாணிக்க எப்படி முடியும், மகாராஜா?'

'உன் சில்பத்தில் ஒரு குறைவுமில்லையே!'

'ஆம் ஆண்டவனருளில்.........'

'செய்யும் வன்மையும் கற்பனையும் இருக்கிறதல்லவா?'

'ஆம் மகாராஜா!'

'அப்படி இருக்கும்பொழுது.........'

மகாராஜா, என் விண்ணப்பத்திற்குச் செவி சாயுங்கள். அப்பெண் தெய்வங்கள்பால், என்னுள்ளத்தில் தாயன்பும் தாய் நோக்கும் பரிசுத்தமானதாக ஏற்படாத வரையில், அச்சிலைகளின் அவயவங்களை எப்படி நான் நிர்மாணிப்பேன்? நிர்மாணிக்கும்பொழுது, என் மனம் தடுமாறிவிட்டால் எனக்கு நரகத்தில் கூட இடம் கிடைக்காமற் போய்விடுமல்லவா மகாராஜா! அச்சிலைகளில் என் தாயின் உருவத்தைப் பார்க்கும் சக்தி எனக்கேற்படும் வரையில், நான் அக்கற்களை எப்படித் தொடு

வது? என் கைகள் குழந்தைகளின் தளிர்க் கரங்களாக ஆகாத வரையில் நான் எப்படித் தாயின் சிலையைச் செதுக்கமுடியும்? அத்தேவிகள் என் தாய்களாகவும், நான் அவர்களின் குழந்தையாகவும் ஆகாத வரையில் என்னால் அக் கற்களைத் தொடமுடியாது. நான் தொட்டு, அவைகளின் அழகில் என் மனம் சஞ்சலப்பட்டு விடுமாகில், அவைகளின் அழகே அல்லவா எனக்குச் சத்துருவாகிவிடும். அப்பேர்ப்பட்ட சிலைகள், குடிகளின் பூஜைக் கருகதையாக ஆகிவிடுமா?.........'

'சரி, இன்னும் ஒருவருஷ அவகாசம் தருகிறேன். போ.'

'சரி. மகாராஜா!'

குடிகளுடன்கூட என்னுள்ளமும் தாயைப் பூஜிக்கத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது தெரிகிறதா! சீக்கிரம் உன் வேலையை ஆரம்பி.

'மகாராஜா!'

— 6 —

அரசன் அரசாங்கத்தின் மற்றக் காரியங்களில் ஈடுபட்டுவிட்டான். சில்பியும் தன் சித்தத்தை ஒருமிக்கச் செய்து அத் தெய்வத் தாய்களின் தயவை எதிர்பார்த்தவண்ணமிருந்தான். மாதங்களுக்குமேல் மாதங்களாக உருண்டோடி மறைந்தன. அரசன் கொடுத்த அவகாசமும் கழிந்தது. ஆனால் இத்தடவை அரசனும் அவனை அழைக்கவில்லை. சில்பியும் அவனிடம் செல்லவில்லை.

வருஷங்கள் உருண்டோட ஆரம்பித்தன. சில்பியின் யௌவன தசையும் மறையலாயிற்று. கிழடுதட்ட ஆரம்பித்தது. இப்பொழுதுதான் அவன் தாயன்பிற்கு அருகதையாகிக்கொண்டு வந்தான்.

சரீரத்தில் சுருக்கங்கள் விழலாயின. பார்வைமட்டும் குன்றாமல் கூர்மையாகவே இருந்தது. கைகளிலும் நடுக்கமேற்படவில்லை. ஆம், அவன் வெளியுலகை மட்டும் ஏறெடுத்துக்கூட பார்க்கவில்லை. ஏகாந்தத்தில் அமர்ந்து அக்கிழட்டுச் சில்பி, ஆயுதங்களை எடுத்துச் சிலைகள் சமைக்க ஆரம்பித்தான். அத்தாய்த் தெய்வங்களின் கருணை கிட்டிவிட்டது. சில்பியும் முனைந்து தாய்த் தெய்வங்களின் உருவத்தை மனத்தில் உருவகப் படுத்திக்கொண்டு செதுக்க ஆரம்பித்தான். நாளுக்குநாள் சிலைகளும் அழகு பெறலாயின. அவனது சரீரமும் நாளுக்குநாள் குன்றலாயிற்று. சிலைகளிலும் அழகு சொட்டலாயிற்று. ஆத்ம ஒளியும் வீசலாயிற்று. குடிகளும் தாயைப் பூஜிப்பதற்காகத் துடித்த வண்ணமிருந்தன.

கிழட்டுச் சில்பியினிடம் குழவிப் பருவம் முளைத்து விருத்திஅடைந்து வந்தது. உதடுகளில் மந்தஹாஸம் தாண்டவமாடியது. உள்ளத்தில் பரிசுத்தம் ததும்பியது. உள்ளக் கிடக்கையில் அழுந்திக் கிடந்த தாயுருவங்கள் சிலைகளில் இறங்கி வந்தன; உயிர் ஒளி வீசிய வண்ணம் காட்சி அளிக்கலாயின.

மூன்று சிலைகளும் பூர்த்தி அடைந்துவிட்டன என்ற செய்தி அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஓரளவில்லை. சில்பியைக் கௌரவிக்கும் பொருட்டு, வெகு விமரிசையாக அம்மூர்த்திகளுக்குப் பிராணப் பிரதிஷ்டை செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்தன.

'ஆனால் சில்பி எங்கே?'

அவன் தன் ஆத்மா, உடல் அனைத்தையும் தாய்களுக்கே அர்ப்பணித்துவிட்டான். சாதாரண கண்களில் புலப்படாதவாறு அச்சில்பி அச்சிலைகளினுள் மறைந்துவிட்டான். வெகு விமரிசையாக அச்சிலைகளுக்குப் பிராணப் பிரதிஷ்டை நடந்தேறியது.

பண்டிதர்கள் வந்து அச்சிலையைத் தரிசித்தனர்; பூஜித்தனர்; அவைகளின் எழிலில் சொக்கிப்போய், அத் தெய்வத் தாய்கள், இச்சிலைகளிலேயே நிரந்தரமாக வசிப்பதாகக் கூறினர்; உண்மைத் தாய்கள், சிலைகள் என்றுகூட கூறக்கூடாது என்றனர். அரசனது விருப்பத்திற்கிணங்க, பண்டிதர்கள் சாஸ்திரங்கள் இயற்றுவதற்கு ஆதாரமாக அச்சிலைகளைக் கொண்டனர்.

அது முதற்கொண்டு தான் சிற்பக்கலை உதயமாயிற்று.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற குழந்தைகளின்
டானிக்

தெய்வச்செயல்

வேங்கடலட்சுமி

பகல் மணி இரண்டிருக்கும், வெளியில் எரித்த வெய்யில் ஆளையே பொசுக்கி விடும் போலிருந்தது. வானத்தில் பெயருக்குக்கூட ஒரு மேகம் கிடையாது. வீதியில் அப்போதைக்கப்போது ஒன்றிரண்டு வண்டிகள் மட்டிலுமே சென்றுகொண்டிருந்தன. கால்நடையாகச் செல்லும் மனிதரையே காணோம். தெருக்களில் திரியும் நாய்கள்கூட அந்த வெம்மைக் காற்றாமல் எங்கோ நிழலைத் தேடிப் படுத்திருந்தன.

மத்தியான போஜனத்துக்குப் பின்பு கூடத்திலிருந்த ஊஞ்சலிற் படுத்தாள் பார்வதி. அவளுடைய ஓரகத்தி விசாலாட்சி வீட்டிலில்லை. சாப்பாடு ஆனவுடனே பக்கத்துத் தெருவிலிருக்கும் தன் தாய்வீட்டுக்குக்குழந்தையுடன் போய்விட்டாள். குழந்தை வீட்டிலில்லாமல் சந்தடியே இல்லாமலிருந்தது.

கண்ணை மூடிப் படுத்திருந்தபோதிலும் பார்வதிக்குத் தூக்கமே வரவில்லை. பல பல எண்ணியவாறே படுத்திருந்தாள். அன்று காலையிலிருந்து அவள் மனம் ஒரு நிலையிலில்லை. பல நாட்களாக மனதுக்குள்ளேயே அடக்கி வைத்திருந்த அவளுடைய துயரம் அன்று கட்டுக்கு மீறிக் கண்ணீர் வெள்ளமாக வெடித்து வந்துவிட்டது. பொங்கி எழுந்த துக்கத்தினால் அவளுக்குக்கோவெனக் கதறியழ வேண்டும்போலிருந்தது. இந்நிலையில், தன்னையுமறியாமல் மூடியிருந்த விழிக்கடைகளிலிருந்து பெருகிய கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்த வண்ணமே நெடுநேரம் அசையாமல் படுத்திருந்தாள்.

பார்வதி நல்ல தகுந்த பெரிய குலத்திலுதித்தவள். திருநெல்வேலியில் பரம்பரைப் பணக்காரர் அவள் தந்தை. அவருக்குப் பார்வதிதான் மூத்தபெண். நல்ல அழகி அவள். மாநிறமேயாயினும் கொடிபோல் துவண்ட அழகியமேனி, தலைநிரம்ப அடர்ந்த கூந்தல், களைபொருந்திய வசீகரமான முகம், காதிலும் மூக்கிலும் வைர நகைகள் மின்னின. அதிகமான நாகரிகம் அவளுக்குத் தெரியாது. தமிழில் நல்ல பாண்டித்யமுண்டு. ஆங்கிலத்தில் அவளுக்கு அதிகப் பரிச்சயமில்லை; அதில் மோகமும் கிடையாது. பழங்கால வழக்கங்களில் பற்றுதல் உள்ளவள்; யாரிடமும் வெகு பிரியமாயிருப்பாள்; அவளுடைய சம்பாஷணையே வெகு கவர்ச்சிகரமாயிருக்கும்.

இவளுக்கு நேர் எதிரிடையானவள் விசாலாட்சி, பார்வதியின் ஓரகத்தி. நல்ல சிவப்பு அவள். கட்டைக்குட்டையாயிருப்பாள்; முகமும் அழகென்று சொல்ல முடியாது; எப்பொழுதும் அவளிடம் குடியிருந்த வெடுவெடுப்பும், மனுஷ்யர்களைத் தூக்கியெறிந்து பேசும் சுபாவமும் யாரும் விரும்பத்தக்கதாயில்லை. மெட்ரிகுலேஷன் வரையில் படித்திருந்தாள். தன்னுடைய ஆங்கிலப் படிப்பைக் குறித்து அவளுக்கு மட்டற்ற பெருமையுண்டு. ஆங்கிலச் சொற்கள் கலவாமல் பேசமாட்டாள். ஆனால் தன் ஓரகத்தி பார்வதி தன்னைக்காட்டிலும் அழகி என்பதில் அவளுக்கு உள்ளூறப் பொறாமையுண்டு. அத்துடன் பார்வதியின் இனிய குணம், யாவரையும் அவள்பால் வசீகரிக்கிறதென்பதும் அவளுடைய பொறாமையை வளர்த்தது. சிலசமயங்களில் அப்பொறாமை அவளையும் மீறிக் கடுஞ்சொற்களாக வெளிவரும். ஆனால் பார்வதி அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தனக்கியற்கையான பெருந்தன்மையுடன் நடந்துகொண்டமையால் வீட்டில் இதுவரையில் பெரிய சச்சரவுகள் உண்டாகவில்லை.

பார்வதிக்கு விவாகமாகிப் பத்து வருஷங்கள் ஆயிருந்தபோதிலும் குழந்தைகளில்லை. விசாலாட்சி தனக்கு விவாகமான மூன்றாவது வருடத்திலேயே ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். ஏற்கனவே கர்வமும் அகங்காரமும் படைத்த அவளுக்குப் புத்ரபாக்கியமும் உண்டானவுடன் தலைகால் தெரியவில்லை. போதாக்குறைக்குப் பக்கத்துத் தெருவிலேயே குடியிருந்த அவளுடைய பெற்றோர் போடும் தூபம் வேறு.

குழந்தைக்கு மூன்றாவது வயது நடந்துகொண்டிருந்தது; நல்ல அழகு அவன். பார்வதிக்குக் குழந்தைகளென்றால் பிராணன். குழந்தையின்பேரிலுள்ள ஆசையால் தன் ஓரகத்தி கூறும் அம்புபோன்ற சொற்களைக்கூட பல சமயங்களில் அவள் பொருட்படுத்தாமல் அவனைத் தூக்கிக் கொஞ்சுவாள்.

ஃ ஃ ஃ

பார்வதி! மணி இரண்டுக்குமேலாகிவிட்டதே! இன்னும் காப்பிபோடவில்லையா?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார் கந்தசாமிப்பிள்ளை.

''இதோ போடுகிறேன்; காப்பி போடுவதற்கும் சமைப்பதற்குமல்லாமல் நான் வேறு எதற்கு ஜன்மமெடுத்திருக்கிறேன்?'' என்று வெடுக்கெனக் கூறிக்கொண்டே ஊஞ்சலைவிட்டெழுந்து சமையலறைக்குள் நுழைந்தாள் பார்வதி.

எதிர்பாராத இப் பதில் பிள்ளையைத் திடுக்கிடச் செய்தது. தம்முடைய மனைவியின் வாயிலிருந்து இம்மாதிரியான சொற்களை ஒரு நாளும் கேட்டதில்லை. ஆகவே அவர் ஸ்தம்பித்துப் போய் அப்படியே நின்றுவிட்டார்;

சற்றுப் பொறுத்துச் சமையலறைக்குள் நுழைந்தார். பார்வதி கரியடுப்பைப் பற்ற வைத்து விசிறிக்கொண்டிருந்தாள்.

மெதுவாக அவளருகிற் போய், "-பார்வதி!" என்றார்.

நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது.

"பார்வதி!—ஏன் அழுகிறாய்?......என்ன நடந்தது? விசாலம் ஏதாவது சொன்னாளா?" என்று பரிவோடு கேட்டுக்கொண்டே அவளருகிலுட்கார்ந்தார் கந்தசாமிப்பிள்ளை.

"சொல்லுவதற்கென்ன இருக்கிறது?...அது தான் வேண்டியது சொல்லியாயிற்றே!"

அழுகையுடன் வெளிவந்த இவ்வார்த்தைகள் பிள்ளையின் மனதில் பல விதமான உணர்ச்சிகளை உண்டாக்கின. தம் மனைவியின் குணம் அவருக்கு நன்றாய்த் தெரியும்; தம் தம்பி மனைவியின் குணமும் தெரியும்;—ஆகவே விசாலம் தான் ஏதாவது துடுக்காகக் கூறியிருப்பாளென்று ஊகித்துக்கொண்டவராய், "பார்வதி! விசாலம் என்ன சொன்னாள்? என்று மீண்டும் கேட்டார்.

உடனே இதுகாறும் அவள் மனதிற் குமுறிக்கொண்டிருந்த உணர்ச்சி வெள்ளம் வார்த்தைகளாக வெளிப்பட்டது.

'இன்று காலையில் பக்கத்து வீட்டு ஆச்சி வந்திருந்தார்கள்—அவர்கள் நேற்று விசாலத்தின் பிறந்த வீட்டுக்குப் போயிருந்தார்களாம். விசாலமும் அங்கேயிருந்தாளாம். அவள் அம்மா ஆச்சியிடம் என்னைப்பற்றி வாயில் வந்ததையெல்லாம் சொன்னாளாம்—நான் பிள்ளையில்லாத மலடியாம்—அவள் பேரனைப்பார்த்துக் கரிக்கிறேனாம்—மைத்துனனின் வரும்படியையெல்லாம் நானே அநுபவிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்களை நம்முடனேயே இருக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறேனாம்—இன்னும் என்னென்னவோ சொன்னார்கள் ஆச்சி. இவ்வளவு நாள்வீட்டு விஷயம் வெளியில் போகாமலிருந்தது. இப்பொழுது அதுவும் ஆரம்பித்துவிட்டது. போன சனிக்கிழமை பாருங்கள்! நான் தாழ்வாரத்தில் தோசைக்கு அரைத்துக்கொண்டிருந்தேன். குழந்தையின் அழுகை முன்கட்டில் கேட்டது, என்னவோபார்ப்போமென்று எழுந்தேன், அதற்குள் அவன் 'ஓ'வென்று அலறிக்கொண்டே ஓடிவந்து என்னைக் கட்டிக்கொண்டான்; நான் அப்படியே அவனைத் தூக்கிக்கொண்டேன். என்னவென்றுகேட்டால், அவன் பம்பரத்தை எறிந்தானாம்; அது இவள் காலில் பட்டுவிட்டதாம்; அதற்காகக் குழந்தையை அடித்திருக்கிறாள்; முதுகில் ஐந்து விரலும் பதிந்துபோயிருந்தது; என் மனம் கேட்கவில்லை, பச்சைக் குழந்தையை இப்படிப் போட்டு அடிக்கலாமாவென்று கேட்டுவிட்டேன்! அவ்வளவு தான்; குழந்தையின் முதுகில் மீண்டும் பிசாசைப்போல் இரண்டறைவைத்து என்னிடமிருந்து வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டாள். அவன் என் கழுத்தைக் கட்டிக்கொண்டு விடவேமாட்டேனென்றான். நான் என்ன செய்ய? அவள் பிள்ளையை உருப்படாமல் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் அவனுக்கு அசட்டுச் செல்லமெல்லாம் கொடுத்து அவனைக் கெடுக்கிறேனாம். அந்தப் பிள்ளை இந்த வீட்டுக்குள்ளிருக்கிறவரையில் அவன் உருப்படமாட்டானாம்; அதற்காக இனிமேல் அவனைத் தன் தாய் வீட்டிலேயே விட்டுவைக்கப்போகிறாளாம்;—முன் பக்கத்துக் கூடத்திலுட்கார்ந்து ஆச்சியிடம் பொரிந்து கொண்டிருந்தாள்; இன்றைக்குக் குழந்தைக்கு வீட்டில் சாப்பாடுகூட ஊட்டவில்லை, பட்டினியாகவே தன் தாய் வீட்டிற்குக் கொண்டுபோய்விட்டாள். நான் எவ்வளவு நாள் இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியும்? நீங்களோ ஒன்றையுமே காதில்போட்டுக்கொள்வதில்லை. அவளுக்குத் தன் புருஷனுடன் தனியாகக் குடித்தனம் செய்யவேண்டுமென்ற எண்ணமிருக்கிறதென்பது நன்றாகத்தெரிகிறது! அதற்கு நான் குறுக்கே நிற்பதாக எண்ணிக்கொண்டு இப்படியெல்லாம் பேசுகிறாள்!"

பார்வதி கலங்கிய கண்களுடன் கூறிய வார்த்தைகள் கந்தசாமிப் பிள்ளையின் மனதைக் குழப்பின. சற்றுநேரம் ஒன்றும் தோன்றாமல் மௌனமாய் உட்கார்ந்திருந்தார்; விசாலத்திற்கும் அவள் பெற்றோருக்கும் தம் தம்பி தம்முடனிருப்பது சிறிதேனும் இஷ்டமில்லையென்பது அவருக்குத்தெரியும். இருந்தாலும் வெளியாரிடம் அவர்கள் இவ்வளவு தூரம் வரம்பு மீறிப் பேசுவார்களென்று அவர் எதிர் பார்க்கவில்லை. அவர் மனதில் ஒருவகையான ஆத்திரம் தோன்றியது.

பார்வதி மீண்டும், "......அவர்கள் வேறு குடித்தனம் செய்யவேண்டுமானால் செய்து கொள்ளட்டும்; இல்லாவிட்டால் என்னையாவது ஊருக்கு அனுப்பிவிடுங்கள்", என்று அவருடைய முகத்தை நோக்கியபடியே கூறினாள். இவ்வார்த்தைகளைக் கூறும்பொழுது அவள் மனம் பட்ட வேதனை அவளுடைய முகத்திற் பிரதிபலித்தது.

"பார்வதி!............நீ சொன்னதெல்லாம் எனக்கும் தெரியாமலில்லை. என்ன செய்வது? தம்பி ஒருவனுக்காகப் பார்க்கிறேன்; இவ்வளவுநாள் ஒன்றாகவேயிருந்துவிட்டு இப்பொழுது வேறாகப் பிரிவதென்றால் அவனு

டைய மனம் வருந்துமே; தவிர ஊரார்தான் என்ன சொல்லுவார்கள்?'' என்று மனவேதனையுடன் பேசினார் பிள்ளை.

‘ஆமாம்......... உங்கள் தம்பியும் ஊராரும் தான் உங்களுக்குப் பெரிதாகப்படுகிறார்கள்;- நான் ஒருத்தி வீட்டுக்குள் இப்படி அவஸ்தைப்படுவது உங்களுக்குத் தெரியவில்லை;— எனக்குமட்டுமென்ன? குடும்பத்தைக்கலைக்க வேண்டுமென்று ஆசையா?. உங்கள் தம்பிக்காக நான் வஞ்சனையின்றி இவ்வளவு காலம் உழைத்தேன், இப்பொழுதும் அவர்பேரில் எனக்கு ஒரு வருத்தமும் கிடையாது. ஆனால் இந்த மாதிரி என்னைப் பலவிதத்திலும் விசாலம் ஏசிக் காட்டுவதை என்னால் இனிப் பொறுக்க முடியாது; ஒன்று. அவர்கள் வேறாகப் போகட்டும்; இல்லாவிட்டால் நாம் வேறு வீட்டுக்குப் போய்விடுவோம்;''

இவ்வாறு கூறிக்கொண்டே காப்பியைக் கலந்து அவர் கையில் கொடுத்தாள் பார்வதி.

அதைக் கையில் வாங்கிக்கொண்ட கந்தசாமிப்பிள்ளையின் மனம் பலவாறு எண்ணியது. பார்வதி கூறியதெல்லாம் உண்மையேயென்பது அவருக்கு நன்றாகத் தெரிந்தது. ஆனால் தம்முடைய ஒரே தம்பியை விட்டு எவ்வாறு பிரிவது? அவன்தான் அதற்குச் சம்மதிப்பானா? தாய் தந்தையர் இறந்தபின்பு தம் தம்பியை உயிர்போல் நேசித்துப் படிக்க வைத்தார் பிள்ளை; தம்பி குருசாமியும் அண்ணனிடம் தெய்வ விசுவாசம் வைத்திருந்தான். பார்வதி வீட்டுக்கு வந்த பிறகு அந்த விசுவாசம் முன்னிலும் பன்மடங்கதிகமாயிற்று. ‘தம்பி, தம்பி, யென்று பார்வதியும் அவனிடம் வெகு பிரியமாயிருந்தாள்.

குருசாமி படித்துப் பாஸ் பண்ணி உள்ளூரிலேயே வேலையாகப் வந்தபொழுது கந்தசாமிப்பிள்ளையின் சந்தோஷம் எல்லை மீறியது. தம்பிக்குக் கல்யாணம் செய்வதில் முனைந்தார். விசாலத்தின் தந்தை அவருக்கு ஏற்கெனவே கொஞ்சம் பரிச்சயமானவர். மொத்தத்தில் நல்லவிடமென்றே அவருக்குப்பட்டது. அண்ணனுடைய சம்மதம் தம்பிக்கும் சம்மதமே;

ஆனால் பார்வதிக்குமட்டும் தன் மைத்துனனுக்கு வரப்போகும் மனைவியைக்குறித்து அவ்வளவு நல்ல அபிப்பிராயமுண்டாகவில்லை; பெண்ணைப் பார்க்கப்போன அன்றைக்கே விசாலாட்சியின் வெடுவெடுப்பான மாதிரியும் அகங்காரமான பேச்சும் அவளுக்கு வெறுப்பை அளித்தன. ஆனால் பெருந்தன்மையான குணமுடையவளாகையால் தன்னுடைய அபிப்பிராயத்தைக் குறித்து அவள் ஒன்றும் கூறவில்லை.

எப்படியோ விவாகமும் முடிந்து விசாலமும் வீட்டுக்கு வந்தாள். அன்றைய தினத்திலிருந்து வீட்டில் அமைதி கிடையாது. நாள், கிழமை, எதுவாயினும் விசாலம் வீட்டில் தங்கமாட்டாள்; தன் பிறந்த வீட்டுக்குப் போய்விடுவாள்; தன் கணவனும் உடன் வர வேண்டுமென்பது அவளுடைய அவா. ஆனால் குருசாமி அவளுடன் போகமாட்டான். தன் மனைவியின் குணமும், அவளுடைய பெற்றோர், தமையன் முதலியோரின் குணமும் அவனுக்கு வெகு வெறுப்பைக் கொடுத்தன. இந்த வெறுப்பு வளர வளரத் தன் அண்ணன் மீதும் அண்ணிமீதுமிருந்த விசுவாசமும் வளர்ந்துகொண்டே வந்தது.

2

அன்றைய தினம் இரவு எட்டு மணி இருக்கும். பார்வதி தன் கணவனுக்கும் மைத்துனனுக்கும் சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்தாள். விசாலம் அங்கில்லை. மாடியறையில் குழந்தையைத் தூங்கவைத்துக்கொண்டிருந்தாள்.

அப்போது வேறு குடித்தனம் போவதைக் குறித்து மெல்லப் பிரஸ்தாபித்தார் கந்தசாமிப் பிள்ளை. வீட்டில் நடக்கும் விஷயங்களைக் குறித்து, அவர் பேசும்பொழுது குருசாமி ஒன்றுமே கூறாமல் மௌனமாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

கடைசியாக அவர்,'' தம்பி! நீயே சொல்லப்பா! உன் மனைவிக்கு வேறாகக் குடித்தனம் செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயம் உண்டாயிருக்கும்பொழுது நானும் அண்ணியும் அதற்குக் குறுக்கே நிற்பது தவறல்லவா?'' என்று நயமாகக் கேட்டார்.

தலை நிமிர்ந்து பார்த்தான் குருசாமி. அவன் கண்கள் கலங்கியிருந்தன.

சமையலறை நடுவில் நின்றபடியே அவன் முகத்தைப் பார்த்த பார்வதியின் மனதில் சொல்ல முடியாத வேதனை தோன்றியது.

‘‘அண்ணா! இவ்வளவு காலம் நாம் ஒன்றாக இருந்துவிட்டு, இப்பொழுது எப்படிப் பிரிந்து போவது? தனியாக இருக்க என்னால் முடியாதே! நீங்கள் ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? என்று நெஞ்சையடைத்த துக்கத்துடன் கேட்டான் குருசாமி. கந்தசாமிப் பிள்ளை ஒன்றுமே பதில் சொல்லத் தெரியாமல் சற்றுநேரம் மௌனமாயிருந்தார். பின் மீண்டும் நயமான குரலிற் பேசத்தொடங்கி, ‘‘தம்பி, நான் சொல்லுவதைக் கேள். நீயே யோசித்துப் பார்த்தாயானால் நாம் இப்பொழுதே வெவ்வேறாகப் பிரிந்திருப்பதுதான் நலமென்பது உனக்கே விளங்கும். வீட்டில் நடந்துவரும் ரஸாபாஸங்களெல்லாம் நான்கு பேருடைய வாயில் அடிபட ஆரம்பித்தால் பிறகு நமக்குத்தானே அவமானம்? இவ்வளவு காலம் எவ்வளவோ ஐக்கியமாகத்தானி

ருந்தோம்; விஷயங்கள் முற்றுவதன் முன்பு நாம் பிரிந்துவிடுவது உத்தமமல்லவா?'' என்ருர்.

''அண்ணி என்ன சொல்லுகிருர்கள்? அவர்களுக்கு என் பேரில் ஒரு வருத்தமுமில்லேயே?'' என்று வாடிய முகத்துடன் அவளை நோக்கினன் குருசாமி.

''உங்கள் பேரில் எனக்கென்ன வருத்தம்? நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.'' என்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டே இருவருக்கும் கைகழுவ ஜலம் கொடுத்தாள் பார்வதி.

ஃ ஃ ஃ

பதினைந்து தினங்கள் சென்றன. அங்கிருந்து சற்று எட்டவிருந்த ஒரு தெருவில் நல்லதாக ஒரு வீடு பார்த்து நிச்சயமாய் விட்டது. பார்வதியும் கந்தசாமிப் பிள்ளையும் அந்த வீட்டுக்குக் குடி போய்விடுவதென்றும், அவர்கள் இருந்துவந்த வீட்டில் குருசாமியும் விசாலமும் இருந்துவிடுவதென்றும் ஏற்பாடு. விசாலத்துக்குப் பரம திருப்தி. அண்ணனைவிட்டுப் பிரித்துவிட்டால் புருஷன் தன் கைக்குள்ளடங்கிவிடுவானென்றும், பிறகு தன் தமையன் முதலியோரெல்லாம் அடிக்கடி தன் வீட்டுக்கு வருவார்களென்றும் பலவிதமாக எண்ணிச் சந்தோஷப்பட்டாள்.

பிரியவேண்டிய நாள் நெருங்க நெருங்க அண்ணன் தம்பி இருவருடைய மனமும் சொல்ல முடியாதபடி கஷ்டப்பட்டது. குருசாமியின் மனதில் சொல்லமுடியாத ஒரு ஏக்க முண்டாயிற்று. விசாலம்தானே இவ்வளவுக்கும் காரணம் என்று எண்ணும் பொழுது அவள் பேரில் அளவற்ற கோபமும் ஆத்திரமும் பொங்கியது. ஒன்றும் தோன்ருமல் அவ்வளவு கஷ்டத்தையும் மனதுக்குள்ளேயே வைத்துக்கொண்டு பொருமினன்.

பார்வதியின் மனமும் சொல்ல முடியாதபடி வேதனைகொண்டு புழுங்கியது. நெடுநாளாகப் பழகிய வீட்டையும் அக்கம்பக்கத்தையும் விட்டுப் போவதில் அவளுக்கு அளவற்ற ஏக்கம். பலபல எண்ணங்களுக்கிடையே புறப்படவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாள். எவ்வளவோ பிரியமாகத் தான் மதித்துவந்தமைத்துனனையும், வீட்டுக்கே விளக்கைப்போலிருக்கும் குழந்தைபச்சையப்பனையும் விட்டுப் பிரிவதில் அவள் நெஞ்சு விரிந்து விடுவதுபோலிருந்தது.

புறப்படுவதற்கு முதல்நாள் பகலில் விசாலம் குழந்தையுடன் பிறந்த வீட்டிற்குப் போயிருந்தாள். பார்வதி தன்னுடைய சாமான்களை எல்லாம் ஒழுங்காக எடுத்துவைத்துக்கொண்டு, தன்னுடைய துணிமணிகளையெல்லாம் பெட்டிகளில் அடைத்துக்கொண்டிருந்தாள்,

பக்கத்து வீட்டு ஆச்சி உள்ளே நுழைந்தாள்.

''வாருங்கள்'' என்று உபசரித்து உட்காரச் சொன்னுள் பார்வதி.

ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு நாற்புறமும் பார்த்தாள் ஆச்சி.

''எப்போ போறிய?'' என்று கேட்டாள்.

''நாளைக்குப் பகல் மூன்று மணிக்கு நல்ல வேளை பார்த்திருக்கிறது'' என்று பதில் கூறிவிட்டுத் தன் வேலையில் முனைந்தாள் பார்வதி.

''உன் ஓரத்தாளுக்கும் அவுக அம்மாவுக்கும் பாலும் பளமும் சாப்பிட்டாப்பலேயிருக்குது'' என்று ஆரம்பித்தாள் ஆச்சி.

பார்வதிக்கு இந்தப்பேச்சை வளரவிடுவதில் இஷ்டமில்லை. ஆயினும் ஆச்சி ஏதோ சொல்லுவதற்காகவே வந்திருக்கிருள் என்பதை ஊகித்தவளாய், அதை அறியும் ஆவலுடன் அவள் முகத்தை நோக்கினுள்.

''அங்கே போயிருந்தேன்; அவ ஆயி சொல்லுரு, இனிமேலே தன் மகளுக்கு விடிஞ்சு போயிடுமாம். இவ்வளவு நாளு உங்களோடு இருந்ததிலே, உன்னுடை கண்ணு பட்டுப்பட்டு குளந்தையும் அவ மகளும் ஒடுங்கிப் போயிட்டுதுகளாம்; இன்னமேதான் அவ மக ஒடம்பு தேறணுமாம்; புள்ளெயக் கரிச்சுக் கரிச்சு குச்சியாப் போய்ட்டானும்; புள்ளெ பெருத மலடிக்குப் பிள்ளையருமை என்ன தெரியுமின்னுல்லா கேட்டா; பிறவு கேளு; அவ மருமவப் புள்ளெ சம்பாத்தியமெல்லாம் நீ நகெ பண்ணிக்கிட்டயாம்''... என்று இன்னும் ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

''ஐயோ. ஆச்சி! போதும், என்னிடம் ஒன்றும் சொல்லாதீர்கள்!'' என்று கண் கலங்கக் காதுகளைப் பொத்திக்கொண்டாள் பார்வதி.

ஆச்சியின் முகம் சுண்டிவிட்டது. சற்றுப் பொறுத்துப்பேச்சை மாற்ற விரும்பியவளாய், ''பச்சையப்பனைக் காணுமெ உனக்குப் பொளுதே போவாதில்ல'' என்று கேட்டாள்.

பார்வதியின் கண்கள் வேதனையினுல் மின்னின.

தன் மார்பைக் கைகளால் அழுத்திய வண்ணமே,'' ஆமாம்; என்ன செய்யலாம்? நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்,'' என்ருள்.

ஆச்சி போவதற்காக எழுந்தாள்.

ஃ ஃ ஃ

ஒரு மாதம் ஓடிவிட்டது. புதிதாய்க் குடி வந்த வீட்டில் சாமான்களை ஒழுங்காக எடுத்து வைப்பதற்கும், வீட்டைச் சுத்தம் செய்வதற்கும் பார்வதிக்கு வேலை சரியாயிருந்தது.

வருவதற்கு முதல்நாளிரவு கந்தசாமிப் பிள்ளை தம் தம்பியுடன் மாடி அறையில் நெடு நேரம் தனித்துப் பேசிக்கொண்டிருந்தார். என்ன சொல்லியும் குருசாமி மனம் தேறுமல் வருந்தினுன்.

கடைசியில், " அண்ணு! தெரியாமல் நம் முடைய வீட்டில் ஒரு பிசாசைக்கொண்டு வந்துவிட்டேன்! அது நம்முடைய சந்தோஷமான குடும்பத்தையும் பிரித்துவிட்டது! உங்களையும் அண்ணியையும் விட்டுப் பிரிந்து நான் இந்த வீட்டில் எப்படியிருப்பேனண்ணு? பொறுமையில் பூமிதேவியாயிற்றே என் அண்ணி! அவர்கள் மனம் நொந்து போயிருக்கையில் இந்த வீடு எப்படி இனிமேல் விளங்கப்போகிறது? என்று பலவாறு சொல்லிச் சிறு பிள்ளையைப்போல் கண்ணீர் விட்டான்.

கந்தசாமிப்பிள்ளையின் கண்களும் கலங்கிவிட்டன. அவர் குருசாமியின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "தம்பி! இதென்ன பைத்தியக்காரத்தனம்? இப்பொழுது என்ன நேர்ந்துவிட்டது? நானும் உன் அண்ணியும் எங்கே போய்விட்டோம்? இங்கே தானே உன் சமீபத்திலிருக்கப்போகிறோம்! தினம் தவருமல் நாம் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளலாமே!" என்றெல்லாம் பலவாருகக் கூறி அவனைத் தேற்ற முயன்ருர்.

புது வீட்டுக்குப் போன பிறகு குருசாமி தினந்தோறும் தன் அண்ணன் வீட்டுக்குப் போகாமலிருக்கமாட்டான். விசாலம் அவனை அங்குப் போகாமல் நிறுத்துவதற்குத் தன்னுல் ஆனவரையில் பாடுபட்டாள். அவளால் அது முடியவில்லை; ஆனல் குழந்தை பச்சையப்பனை மட்டும் அங்கே கொண்டுபோகவிடமாட்டாள். குருசாமியும் அது விஷயமாக அவளை வற்புறுத்தவில்லை. அவன் கூட அதிகமாகக் குழந்தையைக் கையிலெடுப்பதில்லை.

மைத்துனன் அடிக்கடி வந்துபோவதில் பார்வதிக்கு மட்டற்ற மகிழ்ச்சி. வீட்டிற் செய்யும் பண்டங்களில் அவனுக்குப் பிரியமானதை எல்லாம் எடுத்துவைத்திருந்து அவன் வந்த பொழுது கொடுப்பாள். குருசாமி அண்ணன் வீட்டில் மணிக்கணக்கில் உட்கார்ந்துவிடுவான். வீட்டிற்குத் திரும்பிப்போவதற்கு அவனுக்கு விருப்பமேயுண்டாவதில்லை,

பேதை பார்வதிக்குக் குழந்தையைக் காண வேண்டுமென்ற ஆவலைமட்டிலும் அடக்கவே முடிவதில்லை. ஆனல் அதற்காகத் தன் ஓரகத்தியின் வீட்டிற்குப்போக அவள் விரும்பவில்லை. ஒவ்வொரு ஸமயம், தன்மேல் எவ்வளவோ பிரியமாயிருந்த அக் குழந்தையைக் குறித்து எண்ணும்பொழுது அவளுக்குக் கண்ணீர்கூட வந்துவிடும். மற்றப்படி அவளுடையவாழ்க்கை சந்தோஷமாகவே இருந்தது. இப்பொழுதெல்லாம் அவளை மலடி, மலடியென்று ஏசிக்காட்டுவோர் ஒருவரும் கிடையாது.

இதற்கு நேர் எதிராக இருந்தது விசாலத்தின் வாழ்க்கை. அவள் கட்டியிருந்த மனக்கோட்டையெல்லாம் பகற்கனவாகவே முடிந்தது. குருசாமியின் மனதைத் தன் பக்கம் திருப்ப அவளால் முடியவில்லை. அவளிடம் அவன் கொண்டிருந்த வெறுப்பை மறைக்க முயலவேயில்லை; வெளிப்படையாகவே காண்பித்தான். அத்துடன் அவன் உடலும் இளைக்க ஆரம்பித்தது.

விசாலம் கவலைகொள்ளலானுள். அவள் தன் தாய் வீட்டிற்கும் போகக்கூடாது, அவளைச் சேர்ந்தோர் ஒருவரும் தன் வீட்டுக்குள்ளும் நுழையக்கூடாது என்று திட்டம் செய்துவிட்டான் குருசாமி.

தன்னந்தனியே அப்பெரிய வீட்டில் குழந்தையுடன் காலம் தள்ளுவது அவளுக்கு வெகு கஷ்டமாக இருந்தது. எப்படியோ கொஞ்ச காலம் சென்றது.

விசாலம் தன்னுடைய தப்பிதத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உணரலானுள், தன் வாழ்க்கை முழுதுமே இப்படியாய்விடுமோ என்ற பயம் அவளைக் கவ்விக்கொண்டது. குருசாமியினிடம் இப்பொழுதெல்லாம் அவளுக்குப் பேசவே பயமாயிருந்தது. அவளுடைய முகத்தைக் கண்டாலே எரிந்துவிழலானுன் குருசாமி.

குடும்பத்தைப் பிரித்தது பெரிய தப்பிதம் என்று அவள் மனதிற்பட்டலாயிற்று, ஆயின் இனிமேல் என்ன செய்வது? தன்னுடைய மனதைப் பலவகையிலும் கெடுத்த தனது பெற்ருேரை நொந்தாள். தன்னையே நொந்துகொண்டாள். பார்வதி வீட்டிலிருக்கையில் அவளுக்குக் கவலையே இல்லாமலிருந்தது. வீட்டுப்பொறுப்புச் சகலத்தையும் அவள் ஏற்றுக்கொண்டிருந்தாள். இப்பொழுதோ குருசாமி வீட்டுக்கு வேண்டிய சாமான்களைக் கூட சரியாக வாங்கிப்போடுவதில்லை; கேட்டாலும் சள்ளென்று வேட்டை நாயைப்போல் அவள்மேல் விழுந்தான். தவிக்கலானுள் விசாலம்.

ஃ ஃ ஃ

எப்படியோ ஒரு வருடத்துக்குமேல் ஓடிவிட்டது. ஒரு தினம் சாயந்திரம் குருசாமி ஆபீஸிலிருந்து வந்ததும் உடுப்புக்களைக்கூட கழற்றுமல் கட்டிலில் படுக்கையைப்பிரித்துப் போட்டுப்படுத்துக்கொண்டான்.

காப்பியை எடுத்துவந்த விசாலம் அவன் படுத்திருப்பதைக்கண்டு திடுக்கிட்டாள்.

"என்ன உடம்புக்கு? ஏன் படுத்திருக்கிறீர்கள்?" என்று கவலையுடன் கேட்டாள்.

அவளை விழித்துப் பார்த்த குருசாமி வெறுப்புடன் மறுபுறம் திரும்பிப்படுத்துக்கொண்டான்.

விசாலத்துக்குக் கண்ணீர் தளும்பியது.

"காப்பி சாப்பிடுகிறீர்களா?" என்று பயத்துடன் மீண்டும் கேட்டாள்.

அவன் பதிலே கூறவில்லை.

பொங்கியெழுந்த அழுகையை அடக்க முயன்றுகொண்டே அவள் உள்ளே போய் விட்டாள்.

அன்று இரவு முழுதும் குருசாமிக்கு ஜ்வரம் நெருப்புப் பறந்தது. அவனுக்குத் தன் நினைவேயில்லை. வாயில் வந்தபடியெல்லாம் பிதற்றிக்கொண்டிருந்தான். குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு, அவன் பக்கத்திலேயே இரவெல்லாம் கவலையுடன் உட்கார்ந்திருந்தாள் விசாலம்.

விடியற்காலம் குருசாமிக்குச் சிறிது நினைவு வந்தது; கண்களைத் திறந்து பார்த்தான். பக்கத்திலுட்கார்ந்திருந்த தன் மனைவியைக் கண்டதும் மீண்டும் கண்களை இறுக மூடிக் கொண்டுவிட்டான்.

விசாலம் மெல்லிய குரலில்," டாக்டரை அழைத்துவரச் சொல்லட்டுமா? எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்று மெதுவாய்க் கேட்டாள்.

வெறுப்புடன் சிரித்தான் குருசாமி.

"என்னுடைய தமையனுக்கு ஆளனுப்பி டாக்டரை,"............

அந்த வாக்கியத்தை முடிக்கவில்லை விசாலம்.

அதற்குள் குருசாமி அவளைப்பார்த்த பார்வை அவளை நடுங்கச்செய்துவிட்டது. பற்களை நறநறவென்று கடித்தான்.

"யார்? உன் தமையனையா வரவழைக்கப் போகிறாய்? அந்தப்பயல் மட்டும் இந்த வீட்டுக்குள் வரட்டும்! அவன் காலை ஒடித்து விடுகிறேன்! பாபி! என் அண்ணனையும் அண்ணியையும் வீட்டைவிட்டுத் துரத்தினாயே? உன்னால்தானே அவர்கள் என்னைவிட்டுப் பிரிந்துபோனார்கள்! சீ! உன்னையும் பெண்ணென்று மதித்துத் தாலிகட்டினேனே! என் புத்தியைச் செருப்பாலடிக்கவேண்டும்; மகா உத்தமி என் அண்ணி! அவர்களை மனம் நோகச்செய்து விட்டாயே!" என்று ஆவேசம் வந்தவனைப்போலக் கூவினான்.

விசாலம் நடுநடுங்கிவிட்டாள்.

குருசாமி ஆயாசத்துடன் படுக்கையிற் சாய்ந்துவிட்டான்.

விசாலம் உள்ளே போய் ஊஞ்சலிற்குப்புறப்படுத்துக்கொண்டு நெஞ்சு விரியும் துயரத்துடன் தேம்பித்தேம்பி அழலானாள்.

3

குருசாமிக்கு ஜ்வரம் வந்த எட்டாவது நாள். அன்று அவனுடைய நிலைமை விசாலத்துக்கு மிகுந்த திகிலையுண்டாக்கியது. பிரக்ஞை தப்பிய நிலையிலும் அண்ணனையும் அண்ணியையும் கூவியழைத்தவாறே இருந்தான். இன்னது செய்வதென அறியாமல் குழம்பித் தவித்தாள் விசாலம். தன்னுடைய கொடூரமான எண்ணங்களுக்குக் கடவுள் சரியான தண்டனை கொடுத்துவிட்டாரென எண்ணினாள். அவனுடைய படுக்கையருகிலேயே உட்கார்ந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

விளக்கு வைக்கும் சமயம். தெருக்கதவு படீரெனத் திறந்துகொண்டது.

"என்னப்பா குருசாமி! என்றலறிக்கொண்டு உள்ளே நுழைந்தார் கந்தசாமிப் பிள்ளை. படுக்கையிற் கிடந்த தம் தம்பியைச் சேர்த்துக்கட்டிக்கொண்டார்.

குருசாமி கண்களைத் திறந்தான். அவற்றில் ஒரு பிரகாசம்.

"அண்ணா! என் அண்ணா!"

திக்பிரமை பிடித்துப்போய் உட்கார்ந்திருந்தாள் விசாலம்.

அவள் சரீரம் குலுங்கியது.

தன்னை மறந்தவளாய்ச் சட்டென்று மைத்துனன் காலில் விழுந்து, "என்னை மன்னிப்பீர்களா? பாபி, என்னால்தானே இவ்வளவும் வந்தது! என்று கோவெனக் கதறினாள்.

அவளை அன்புடன் தூக்கினார் கந்தசாமிப் பிள்ளை. "எழுந்திரம்மா!—ஒன்றும் பயப்படாதே;—நம்மாலாவது என்ன இருக்கிறது? எல்லாம் தெய்வச்செயல்," என்று தேற்றினார்.

நெடுநேரத்துக்குப்பின் குருசாமி அண்ணன் கையால் கொடுக்கப்பட்ட கஞ்சியைச் சிறிது குடித்துவிட்டு அயர்ந்து தூங்கலானான்.

விசாலம் குழந்தையைக் கந்தசாமிப் பிள்ளை இடம் விட்டுவிட்டு உள்ளே ஏதோ கவனிக்கச் சென்றாள். அவள் மனதிலிருந்த பாரம் இறங்கிவிட்டது. திரும்பிவந்தவுடன்,"-அண்ணியை அழைத்துவரவேண்டாமா?"என்று கேட்டாள்.

கந்தசாமிப்பிள்ளையின் முகத்தில் புன்முறுவல் தோன்றியது. மடியிலிருந்த குழந்தையைத் தடவிக்கொண்டே,"—அண்ணி ஊரில் இல்லை; திருநெல்வேலிக்குப் போயிருக்கிறாள்,"—என்றார். திகைப்புடன் அவரை நோக்கினாள் விசாலம்.

"எப்பொழுது போனார்கள்?—என்ன விசேஷம்?" என்று மெதுவாகக் கேட்டாள்.

அண்ணிக்குக் குட்டிப் பச்சையப்பன் பிறந்திருக்கிறான்,"—என்று ஒரு வகையான பெருமையுடன் கூறினார் பிள்ளை.

விசாலத்தின் கண்கள் ஆச்சர்யத்தினால் விரிந்தன.

ஃ ஃ ஃ

ஆறுமாதம் சென்றது.

பார்வதி தன் ஓரகத்தியின் பிள்ளைக்கு மத்தியானச்சாப்பாடு போட்டுக்கொண்டிருந்தாள்.

விசாலம் பார்வதியின் பிள்ளையை மடியில் வைத்து விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தாள்.

பக்கத்து வீட்டு ஆச்சி கையிலிருந்த சர்க்கரைப் பொட்டலத்துடன் உள்ளே நுழைந்தாள்.

"வாருங்கள், ஆச்சி," என்று வரவேற்றாள் விசாலம்.

ஆச்சி ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டாள்.

"பச்சையப்பனையல்ல உரிச்சு வைச்சிருக்கு" என்று கூறிக்கொண்டே ஆச்சி குழந்தையின் வாயில் சர்க்கரை கொடுத்தாள்.

"ஆமாம், அப்படித்தான் எல்லாரும் சொல்லுகிறார்கள், மைத்துனர்கூட அவனைக் 'குட்டிப் பிச்சையப்பா' என்றுதான் கூப்பிடுகிறார்" என்று குழந்தையின் கன்னத்தைத் தடவினாள் விசாலம். குழந்தை தனது பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தது.

"ஏட்டி! உன்னெத்தெரியுதில்ல பயலுக்கு!" என்று ஆச்சர்யப்பட்டாள் ஆச்சி.

"பின்னே, அவன் சித்தியை அவனுக்குத் தெரியாமலா இருக்கும்?" என்று குழந்தையை ஆச்சியிடமிருந்து வாங்கி முத்தமிட்டாள் விசாலம்.

"ஏன் தெரியாது? நீதான் ஸதா அவனைத் தூக்கிக்கொண்டே திரிகிறாயே!" என்று சிரித்துக்கொண்டே கூடத்திற்கு வந்தாள் பார்வதி.

"அவனை எவ்வளவு கொஞ்சினாலும் சீராட்டினாலும் நான் செய்த பாபத்திற்கெல்லாம் பரிகாரமாகுமா?" என்று தழுதழுத்த குரலில் கூறினாள் விசாலம்.

பார்வதியைத் தானும் தன் தாயுமாக, மலடி, மலடியென்று ஏசியதெல்லாம் அவளுக்கு நினைவுக்கு வந்தது. தன் கண்ணில் துளும்பிய நீரை மறைக்கவெண்ணி, முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

பார்வதி, "எல்லாம் தெய்வ சங்கல்பம்; நம் கையில் என்னவிருக்கிறது?" என்று தனக்கியற்கையான பெருந்தன்மையுடன் கூறிப் பேச்சை மாற்றினாள்.

இரவு எல்லாரும் சாப்பிடுகையில், "பாப்பா என்னெ பார்த்து சிரிக்குது பெரியப்பா!" என்று தொட்டிலண்டை ஓடினான் குழந்தை பச்சையப்பன். "எல்லாம் தெய்வச் செயல்," என்றான் குருசாமி. அண்ணனையும் அண்ணியையும் மாறிமாறி நோக்கிய அவன் கண்களில் திருப்தியும் சந்தோஷமும் பிரதிபலித்தன.

உள்ளேயிருந்த விசாலத்தின் செவிகளில் அவன் கூறிய, "எல்லாம் தெய்வச்செயல்," என்ற வார்த்தைகள் விழுந்தன.

சுவாமி படத்தினருகில் சென்று நமஸ்கரித்தாள். அவள் மனதில் ஆனந்தம் நிரம்பி இருந்தது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

மேதாவின்
ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனாக இப் புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலைப் படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணிவிட்டது.

கே. எஸ். மேத்தா & கோ.,
மதராஸ்.

காடம்பாடி - 1851

சாரி

நாகபட்டினத்தில் துறைமுகம் கட்டினார்கள். "லாரென்ஸ் அண்டு கம்பெனி"யைச் சேர்ந்த இரண்டு ஆங்கிலேயர் வந்து இறங்கி, சமுத்திரக்கரையோரம் இடத்தைப் பார்வையிட்டுச் சென்றனர்.

பிறகு ஒரு மாதம் வரையில் ஒருவிதப் பேச்சுமில்லை. ஒரு நாள் திடீரென்று நாட்டுத் தோணிகளில் துறைமுகத்துக்கான சாமான்கள், ஏராளமாய் வந்து கரையோரம் இறங்கின.

அதன்பின் சுமார் ஆறுமாதத்திற்கு நாகையின் சுற்றுவட்டாரத்துக் கிராம ஜனங்களில் முக்கால்வாசி, துறைமுகம் கட்டும் வேலையில் ஈடுபட்டனர். ஆனால் ஆறுமாதமும் மண் வெட்டிப்போட்டு, பூமியைச் சமப்படுத்தும் வேலையே நடந்தது. இதற்குக் காரணம், இந்தக் காலத்தைப்போல அப்பொழுதெல்லாம் மண் அள்ளுவது, அதை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்வது, கனத்த சாமான்களை உயரத்திற்கு ஏற்றுவது, இவ்வித வேலைகளுக்கு இயந்திரங்களும், வண்டி வசதிகளும் இல்லாததே. யாவும் மனித சக்தியால் மெதுவாகவே நடைபெறும். ஆயிரக்கணக்கான கூலி ஜனங்கள் ஆணும் பெண்ணுமாக, வேலையில் புகுந்து கொண்டார்கள். ஆங்கிலேயர் மேற்பார்வையில் நடைபெற்ற முதல் பெரிய வேலை, அந்தப் பக்கத்தில் இதுவே. கூலி தாராளமாகவும் பிரதி சனிக்கிழமை மாலையில் ஒழுங்காகவும் கொடுக்கப்பட்டது.

அனேகமாய் மீன் பிடிப்பவர்களே கூலி வேலைக்கு வந்தார்கள். சமுத்திரத்தில் கட்டைமரங்களில் சில மைல் தூரம்போய், வலை வீசி, மாலையில் நிறைய மீன்களுடன் திரும்பும் அவர்களுடைய தொழில், இந்தத் துறைமுகம் கட்டுவதில் கொஞ்சம் தடைப்பட்டது என்று சொல்லலாம்.

— 2 —

இவ்விதம் கூலிக்கு வேலை செய்த செம்படவர்களில் கட்டையன் என்பவனும் ஒருவன். அவன் மனைவி சுழியாள் பதினைந்து பிராயத்துப் பெண். பிரும்மதேவன் அவளை ஏனோ பிறவி அழகியாகச் சிருஷ்டி செய்திருந்தான்!

சுழியாள் வாட்டசாட்டமான தன் அழகிய மேனியில் ஓர் ஆபரணமும் அணியவில்லை. அடர்ந்து நீண்டிருந்த கருங் கூந்தலை அள்ளிச் சொருகியிருப்பாள். கண்களுக்கு மைதீட்டி, அகன்ற விழிகளைச் சுழற்றி, மோஹனப் பார்வை பார்த்து, ஆளை மயக்கித் தன் வசமாக்கிக்கொள்ளும் சக்தி வாய்ந்தவள்.

அந்தப் பார்வைக்கும், அவள் வனப்பிற்கும் தன் நெஞ்சைப் பறிகொடுத்தவன் கட்டையன்; அவளைச் சுற்றித் திரிந்த அநேக வாலிபர்களுள் மேலான வீரத்தை, மீன் பிடித்து வருவதில் காண்பித்து, சுழியாளை மணந்துகொண்டான்.

அதுமுதல் கட்டையனுடைய சொத்தாக அவள் மாறினபோதிலும், மனதளவில் சுழியாள் என்றுமே ஒரு விபசாரிதான். அதை எப்படி மாற்றுவது? அவளுடைய பிறவியே அந்த மாதிரி.

கட்டையனுக்கு ஒருநாளும் சுழியாளின் நடத்தையில் நம்பிக்கை கிடையாது. இந்தக் காரணத்தினால் எந்த நிமிஷமும் மனைவி தன் கண்பார்வையில் இருக்கவேண்டுமென்று பிரியப்பட்டான். மற்றச் செம்படவப்பிள்ளைகளிடம் அதிகக் கோபமும் கொண்டான்.

அவன் தலை மறைந்ததும் சுழியாள் தன் கண்ணைச் சுழற்றிக் காதல்வலை வீசி, அதிற் சிக்கும் மீன்களாகிய ஆண்களை மயக்கி வேடிக்கை பார்த்துச் சிரிப்பாள். இதுவே அவளது பொழுது போக்காயிற்று!

— 3 —

ஜான் லாரென்ஸ் இந்தியாவில் வந்து இறங்கிய சமயம் அவருக்கு வயது 25. இங்கிலாந்தில் ஒரு பிரபு வம்சத்தில் மூன்றாவது குமாரனாகப் பிறந்தவர்; இவருடைய தமையன் எட்வர்ட் என்பவருடன் துறைமுகக் கம்பெனி ஏற்படுத்தி, அந்த வேலையைத் துவக்கத்திலேயே தங்கள் மேற்பார்வையில் நடத்தும் உத்தேசத்துடன் இந்தியாவிற்கு வந்தார்கள்.

எட்வர்ட் சென்னைப்பட்டினத்தில் இருந்துகொண்டு, துறைமுகத்துக்கான சாமான்களைச் சீமையிலிருந்து நேரே அங்கே தருவித்துக் கொள்ளுவார். பிறகு தோணிகளின் மூலமாக அவைகள் நாகபட்டினம் வந்துசேரும்.

ஜான் லாரன்ஸ் நல்ல கட்டழகர். ஆங்கிலேயரில் ஸாக்ஸன் என்று வழங்கும் ஜாதி. நீலநிறக் கண்கள்; பழுப்பு நிறமான மயிர்; நீண்டு அழகிய மூக்கு; இதோடு ஆறு அடி உயரமும், கண்டவர் மனதைக் கவரும் புன்னகையும் முகத்திற் கொண்டவர்.

விதி என்பது என்ன விபரீதங்களையெல்லாம் செய்ய வல்லது? யாரை எங்கேயெல்லாம் இழுத்துச் செல்லுகிறது! ஜான் லாரென்ஸ்

எங்கே—செம்படவச் சிறுமி சுழியாள் எங்கே—இவர்களைக் காதலில் பிணைத்து நாடகம் நடிக்கவிட்டு விதியும் வேடிக்கை பார்த்தது.

— 4 —

ஓர் அந்திப்பொழுது. கட்டையன் மண்வெட்டியால் வெட்டி, தட்டு நிறைய மண்ணை அள்ளிச் சுழியாள் தலையில் ஏற்றி வைக்கிறான். அவள் மேனி நோகாமல் நடந்து, பதினைந்து அடி தூரத்தில் உள்ள பள்ளத்தில் மண்ணைச் சேர்ப்பித்து, தட்டைக் கையிற் பிடித்து, உல்லாசமாகத் திரும்புவாள். வரும் சமயம் தன் கண்ணைச் சுழற்றி, அருகில் நிற்கும் துரை தன்னையும் பார்க்கிறாரா என்பதைக் கடைக்கண்ணால் கவனித்துக்கொள்ளுவாள். சுழியாள் மனத்தில் ஒரு பெரும் புயல் அடிக்கிறது. சென்ற ஒரு மாதமாகத் துரை தன்னை ஒரு தினுசாகப் பார்ப்பதை அவள் அறிந்தாள். சனிக்கிழமை தன்னுடைய கூலியைக் கை நீட்டி வாங்கியபொழுது, வழக்கத்துக்கு மேல் இரண்டு பணம்கூடக் கொடுத்திருப்பதையும் அவள் கவனியாமலில்லை. ஏன்? கூலியைத் தன் கையில் வைக்கும் தருணம், லேசாகத் தன் விரல்களை அவர் ஸ்பரிசிக்கவில்லை?

பிறகு, பணம் அதிகம் இருப்பதை அவரிடம் தெரிவிக்கலாமென்று அவர் முகத்தைப் பார்த்ததும், கண்களால் ஒருவித சமிக்ஞை செய்து, அவசரமாக அடுத்த கூலிக்காரனிடம் சென்றுரல்லவா?

அப்பப்பா............இதற்கெல்லாம் காரணமென்ன?.........இப்படி எண்ணும் பொழுது சுழியாளுக்கு உடலெல்லாம் புல்லரித்தது. சீச்சி.........இப்படியும் இருக்குமா?

கட்டையனிடம் இது விஷயமாக அவள் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.

— 5 —

ஜானின் மேற்பார்வையில் பூமி சமப்படுத்தும் வேலை முடியும் தருணம் வந்தது. இன்னும் பத்துத் தினங்களில் இது முடிந்து, கட்டிட வேலை ஆரம்பிக்கப்போகிறது.

சென்ற ஒரு மாதமாகக் கட்டையன் வேலைக்கு வருவதில்லை. காய்ச்சலில் படுத்திருந்தான். மனைவியைத் தனியாக வேலைக்கு அனுப்ப அவனுக்குச் சிறிதும் சம்மதமில்லை. எவ்வளவோ தடுத்தும் பார்த்தான். சுழியாள் கேட்டால்தானே? கணவனைத் தன் மாமன் வீடாகிய சிக்கல் என்கிற ஊரில் கொண்டு போய்விட்டு, வழக்கம்போலக் கூலிவேலைக்கு வந்துவிட்டாள். இரவில்கூட நாகையில் தங்கி, காலையில் ஒழுங்காக வேலைக்கு வந்துவிடுவாள்.

இந்தப் பெண்ணை என்ன செய்வது? துரையைப் பாராமல் அவளால் ஒரு நிமிஷமும் இருக்க முடியவில்லை. அவருடைய கூடாரத்தின் சமீபமாகவே வேலை செய்வாள். அவளுடைய சிரிப்பும், தளுக்கும் மாயமாக மறைந்துவிட்டன. செம்படவப் பையன்களைத் தன் கிட்டத்தில் நெருங்க விடுவதும் இல்லை.

கூலியாட்களை நிறுத்தும் தினம் வந்தது. கட்டையன் தன் மனைவியை அழைத்துப் போக, மெதுவாகக் கோலைப்பிடித்து நடந்து அங்கே வந்து சேர்ந்தான்.

ஆட்களை ஒருங்கே திரட்டி, நன்றிகூறி, கூலியும், வெகுமதியும் கொடுத்துக்கொண்டிருந்தார், துரை. எப்பொழுதும்போல் அவர் முகத்தில் இன்று புன்னகை தவழவில்லை. ஏக்கம் கொண்டவர்போலவும், எதையோ தேடுவது போலச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டும் தம் வேலையைக் கவனித்தார்.

சுழியாளை எங்கேயும் காணவில்லை! அவளைத்தான் அவள் கணவனும் தேடிக்கொண்டிருந்தான். துரையின் கூடாரத்திற்குச் சற்று எட்ட ஒரு மரத்தடியில் அவருடைய குதிரை கட்டப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் பசும் புல் தரையில் படுத்து, சீலையால் தன் முகத்தை மூடித் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தாள், சுழியாள்.

கூலியெல்லாம் கொடுத்து முடிந்தது. பணப்பையும் கையுமாக, ஜான் லாரென்ஸ், தலையைத் தொங்கப்போட்ட வண்ணம் குதிரையின் சமீபம் வந்தார்.

கீழே அலங்கோலமாகக் கிடக்கும் சுழியாளை அவர் கவனித்ததும் உள்ளம் கலங்கிப்போனார். ஓடி அவளைச் சேர்த்து அணைத்துப்பிடித்து உட்காரவைத்து, மனப்பதட்டத்தில், தனக்குத் தெரிந்த காதல் வார்த்தைகளை எல்லாம் ஆங்கிலத்தில் அவள்மேல் சொரிந்தார்.

சுழியாள் தலை நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்க்கவே இல்லை. அவளுடைய உடல் பயத்தாலும், கூச்சத்தாலும் 'வெட வெட'வென்று நடுங்கிற்று. ஒடிந்த கொடிபோலத் துவண்டு அவர் பாதங்களில் தன் முகத்தைப் புதைத்து, மறுபடியும் விக்கி விக்கி அழலானாள்.

மனைவியைக் கூலிகளின் மத்தியில் தேடி அலுத்துப்போன கட்டையன், அச் சமயம் அங்கே வந்துகொண்டிருந்ததை, சற்றுத் தூரத்தில் இருக்கும்பொழுதே துரை கவனித்தார்.

அவ்வளவுதான்! ஒரே நொடியில் அவருடைய மனம் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டது. பிரிதிவி ராஜன், ராஜகுமாரி சம்யுக்தையைக் கொண்டுபோனதுபோல், சுழியாளை வாரி எடுத்துக் குதிரையின்மேல் வைத்தார். அவளுக்குப்பின்னால், தாமும் தாவி ஏறிக்கொண்டு, குதிரையை ஒரு தட்டுத் தட்டினார். குதிரை இவர்களைச் சுமந்து காற்றாகப் பறந்து சென்றது.

இதைச் சற்றுத் தூரத்திலிருந்தே கவனித்த கட்டையன், பெருத்த கூச்சல்போட்டுப் பின் தொடர்ந்து ஓடிவந்தான்.

கொஞ்சதூரம் சென்றதும் ஜான் ஒரு முறை திரும்பிப் பார்த்தார். கட்டையன் பின் தொடர்ந்தது அவர் மனத்தை என்னவோ செய்தது. ஒரு பைப் பணத்தை அவன் காலில் வீசி எறிந்தார்.

நோயாளி எவ்வளவு தூரம் ஓடுவான்? அலுத்துப்போன சமயம் காலில் வந்து விழுந்த பணப்பையைப் பொறுக்கி எடுத்துக்கொண்டான். சுழியாள் போனுலென்ன? பதிலுக்கு 500 ரூபாயல்லவா கிடைத்திருக்கிறது; என்ன நல்லதிர்ஷ்டம்! மனைவியிடம் அவனுக்கிருந்த ஆசையை அறுத்தெறிந்தான்.

குதிரை கண்ணுக்கு மறையும்வரை பார்த்திருந்து வீட்டுக்குத் திரும்பினுன்.

இனிமேல் இவனுடைய கதை நமக்கு அவசியமில்லை அல்லவா? சிலர், இவன் மறுபடி கலியாணம் செய்துகொண்டு குழந்தை குட்டிகளுடன் சௌக்கியமாக இருந்ததாகச் சொல்கிருர்கள். 500 ரூபாயில் ஒரு மளிகைக் கடைவைத்து, வியாபாரமும் செய்தானும். எப்படியானுல் நமக்கென்ன? கட்டையன் நம் கதையிலிருந்து இப்பொழுது விலகிக் கொண்டான்.

— 6 —

"குணதிசை குணதிசையே, குடதிசை யாவதெங்ஙனே?"

என்பது கவி வாக்கு. "இதுவும் உண்மையாகுமா, இதோ, பொய் யென்று நிரூபிக்கிருேம் நாங்கள்" என்று உலகத்தை இடித்துக் காட்டுவதுபோல் ஜான்லாரென்ஸும் சுழியாளும் மணவாழ்கை நடத்தினுர்கள். அவளைத் தம் மனைவியாக்கிக்கொண்டதின் அடையாளமாக, அவள் விரலில் ஒரு மோதிரம் அணிவித்தார், ஜான்.

இனி என்ன நடந்தது? ஒவ்வொரு நிகழ்ச்சியையும் விவரிக்க ஒரு பெரிய நாவல் எழுத வேண்டும். ஆகையால் பத்து வருஷத்தில் நடந்ததைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

காடம்பாடியில் உள்ள தம் அழகிய பங்களாவிற்குச் சுழியாளை எஜமானியாக்கினுர். இயற்கையான அவருடைய பெருந்தன்மை, அவருடைய ஒவ்வொரு செய்கையிலும் வெளி வந்தது. சுழியாளைத் தம் மனைவியாக்கித், தம் சொத்து, பணம் காசு, வீடு வேலையாட்கள் இவ்வளவையும் அவள் கையில் ஒப்புவித்தார்.

தம்மையும் மறந்து வேலையில் ஈடுபட்டார். ஓய்வு நேரங்களில், சுழியாளின் எல்லையில்லாத காதலின் நிழலில் தம்மை இளைப்பாறிக்கொண்டார். கல்வியறிவே இல்லாத சுழியாளுக்கும் ஜான் லாரென்ஸ்க்குமிடையே மலர்ந்த அபூர்வமான இக்காதலின் அழகை எண்ணி வியந்தவர் கணக்கில்லை. அவளிடம் ஜான் வைத்திருந்த மதிப்பும் கௌரவமும், எல்லையற்ற நிலையில் இருந்தன.

— 7 —

பத்து வருஷத்தில் துறைமுகம் கட்டும் வேலை முடிவடைந்தது. அத்துடன் லாரென்ஸ் சகோதரர்களின் வேலையும் இந்தியாவில் முடிந்து போனதால், இங்கிலாந்திலிருந்த இவர்களின் தந்தை உடனே காலதாமதமின்றிப் பிரயாணம் செய்யும்படி உத்தரவிட்டார்.

எட்வர்ட் லாரென்ஸ் நாகபட்டினம் வந்து தம்பியிடம் பிரயாண ஏற்பாடுகளைச் சொன்னுர். ஜான் புறப்பட மறுத்து, சில வார்த்தைகளில் தம் மனதில் உள்ளதைத் தெரிவித்தார்,

"இனி இந்தியாவே என் சொந்த தேசம். இந்தக் குழந்தைகள் என் சந்ததியார். இவர்களைக் கைவிட்டு நான் இங்கிலாந்திற்கு வர முடியாது" என்ருர்,

"ஆனுல் நீ நமது தந்தை, தாய், உற்ருர், உறவினரைத் துறக்கிருயே? நீயில்லாமல் நான் மாத்திரம் போய்த் தந்தையிடம் என்ன சொல்லுவது? உண்மைக் காரணத்தைத் தெரிவித்தால், உன்னை இனி ஒருநாளும் அவர் சேர்த்துக்கொள்ளமாட்டாரே."

"அதைப்பற்றி எனக்கு என்ன? சுழியாள் என் மனைவி; எவ்விதத்திலும் என் அன்பிற்குப் பாத்திரமானவள். அவளை ஒருநாளும் நான் கைவிடமாட்டேன்" என்று முடிவாகப் பதில் சொன்னுர் ஜான்.

எட்வர்ட் இந்தவிதமான பதிலை எதிர்பார்க்கவில்லை. ஜான் புறப்பட ஏதாவது தடங்கல் இருக்குமென்பதை ஊகித்து, செம்படவப் பெண்ணுக்கும், குழந்தைகளுக்கும் கொடுக்கும் பொருட்டு நிறையப் பணத்துடன் வந்திருந்தார்.

இங்கே அவர் கண்ட காட்சி அவர் மனதையும் கலக்கிவிட்டது. வாய் பேசாமல், ஏராளமான திரவியத்தைத் தம்பியின் கையில்கொடுத்துவிட்டு, சென்னையில் இருந்தத் தம் வீடு, சொத்து, சுதந்திரம் யாவற்றையும் தம்பி பேருக்கு எழுதிக் கொடுத்தார்.

அண்ணனும் தம்பியும் இனி இப் பூவுலகில் சந்திப்போமென்கிற நம்பிக்கை இல்லாமல், இறுகத் தழுவிக்கொண்டு, கண்ணீருடன் பிரிந்தனர்.

— 8 —

"லாரென்ஸ் டிரேடிங்கு கம்பெனி"—இந்தப் பெயருடன் சீமைச் சரக்குக்களை இறக்குமதி செய்து வியாபாரம் செய்தார் ஜான். முக்கியமான இறக்குமதி, சீமைச் சாராயமும் பிராந்

தியும். இதற்குவேண்டிய உதவியை, அண்ணன் சீமையிலிருந்து செய்தார். நாகைத் துறைமுகத்தில் பண்டங்களை இறக்குமதி செய்து, ஜான் பெரிய வியாபாரி ஆனார். ஏராளமான பணம் அவரிடம் குவிந்தது.

இப்பொழுது அவர்களுக்கு இரண்டு ஆண், இரண்டு பெண் குழந்தைகள். அவர்கள் நல்ல அழகாக இருந்தார்கள்.

குழந்தைகளுக்குப் பிரத்தியேகமான ஸ்நான அறை, படுக்கும் அறை, விளையாடும் இடம், படுக்கும் இடம், தினி சாப்பிடும் இடம், ஓடி ஆடித்திரியும் தோட்டம், அவர்களின் வேலைகளைக் கவனிக்கும் தாதிகள், அவர்கள் ஏறும் குதிரைகள் இவைபோன்ற ஸகல ஏற்பாடுகளும் மேல்நாட்டு முறையில் இருந்தன.

சுழியாள் இந்நாட்களில் ஆனந்தமாகக் காலங்கழித்தாள். அவளுடைய பராமரிப்பில் தோட்டம், மாடு கன்றுகள், கோழி, ஆடு, வண்டிக்குதிரைகள் இவையெல்லாம் நன்கு செழித்தன.

இவர்களின் காதலும் சிறிதும் குன்றுமல் வளர்ச்சிபெற்றது. ஆனால் இந்த வாழ்க்கையில் குறையே எதுவும் இல்லையா என்று கேட்கலாம் நீங்கள். அதுவும் இருக்கத்தான் இருந்தது.

ஜானுக்குத் தம் இனத்தாருடன் பழகும் சந்தர்ப்பமே கிடையாது. காலையில் வியாபாரஸ்தலம், மாலை வந்தால் வீடு, இவ்வளவுதான். ஓரிரண்டு ஆங்கிலேய நண்பர்கள் இவருடைய உறவைச் சிறிதும் விரும்பவில்லை. ஜான் இதைப்பற்றி வருந்தியதாக நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை மனத்தளவில் இருந்திருக்கலாம். ஒரு சந்தர்ப்பத்திலும் வெளிக்குக் காண்பிக்கவேயில்லை.

முன்பு ஜானைப் பார்த்தவர்கள் இப்பொழுது ஒரு விசேஷ மாறுதலைக் கவனிப்பார்கள். அவருடைய நடையில் வழக்கமாயுள்ள சுறுசுறுப்பு இப்போது இல்லை. முகத்தில் தவழ்ந்த புன்னகை இப்பொழுது காண்பதற்கு அரிய வஸ்துவாகிவிட்டது. இதைத்தவிர அவருடைய தோற்றம் பழைய அழகன் என்பதைப் பொய்யாக்கவில்லை என்றே சொல்லலாம்.

9

சுழியாளைப்பற்றிச் சிறிது விவரிப்போம். ஒருநாள் மாலை நேரம், பங்களாவின் முன் தோட்டத்தில் பூச்செடிகளின் மத்தியில் சாய்வு நாற்காலிகளும், திண்டுகளும் போட்டிருக்கின்றன. தரையில் விரித்திருந்த ஓர் உயர்ந்த கம்பளத்தில் உட்கார்ந்து, திண்டில் சாய்ந்திருக்கும் சுழியாளை நமக்கு அடையாளம் தெரியவில்லை.

அவளிடம் நிறைய மாறுதலைக் காணமுடிகிறது. ஒடிந்துவிழும் கொடிபோன்ற சரீரம் இப்பொழுது உருண்டு திரண்டு ஓரே

பருமனாகிவிட்டது. ஆனால் முகத்தின் வனப்பு, சற்றும் குன்றவில்லை. அதே மயக்கம் தரும் பார்வை, மின்னல் போன்ற சிரிப்பு! தலை மயிரைப் பழைய மாதிரியே அள்ளிச் சொருகியிருந்தாள். சந்தேகமில்லாமல் இவள் அழகிதான். உடலில் பொன்னும் இரத்தினமும் பதித்த நகைகள்; இடையில் உயர்ந்த ஜரிகைச் சேலை; இடுப்பில் பணப்பை.

ஜான் அவளருகில் ஒரு தாழ்ந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்து படித்தவண்ணமிருக்கிறார். குழந்தைகள் தாதிகளின் கவனிப்பில் ஓடியாடி விளையாடுகின்றனர்.

சில நிமிஷங்களுக்கு ஒருதரம் அவர்களருகில் இருந்த சாராயத்தைச் சிறிய கண்ணாடிக் கோப்பைகளில் ஊற்றிப் புருஷனுக்கு வழங்கித் தானும் பருகினாள் சுழியாள். ஜான் ஒரு முறை சாப்பிட்டால், பல முறை மறுத்துவிடுவார். சுழியாள் மட்டும், ஓய்வின்றிப் பானங்களை அருந்தியது, பார்வைக்கு அருவருப்பைத் தரும் காட்சியாக இருந்தது.

— 10 —

இப்படியாக இருபது வருஷங்கள் ஓடி மறைந்தன. குழந்தைகள் வயதில் வளர்ந்து சிலர் சென்னைக்கும், சிலர் குளிர்ந்த பிரதேசத்திற்கும், கல்வி கற்கும் பொருட்டு அனுப்பப்பட்டார்கள்.

சுழியாளிடம் இப்பொழுது பெருத்த மாறுதல் ஏற்பட்டிருந்தது. இந்த உலகில் அவளுக்குத் தேவையானதெல்லாம் சாராயம் ஒன்றேதான்! ஆம், அவள் அழகையும், கணவனிடம் அவளுக்கிருந்த அன்பையும், அவளுடைய சகல நற்குணங்களையும் கெடுத்துப் பாழாக்கியது இந்தக் குடிப்பழக்கம்.

நாட்கணக்காகக் குடித்து, தன் சுய நினைவிழந்து அசுத்தமான நிலைமையில் படுத்துக் கிடப்பாள். பாவம், ஜான்! அவருடைய பொறுமை எல்லை கடந்ததாக இருந்தது.

வியாபார ஸ்தலத்திலிருந்து திரும்பி வந்ததும், தம் மனைவியிடம் சென்று, ஒரு குழந்தையைப்போல அவளைப்பாராட்டி அன்பு மொழி கூறுவார். அபூர்வமாக, என்றைக்காவது சுழியாள் சற்று நிதானத்தில் இருந்தால், அவளைச் சிங்காரித்துத் தம்மருகில் பீடன் வண்டியில் ஏற்றிக்கொண்டு காற்றில் உலாவி வரக் கடற்கரைக்கு அழைத்துச் செல்வார்.

மற்ற நேரங்களிலோ — பாவம், அறைக்கத்வை தாளிட்டுக்கொண்டு, அவளை அமைதிக்குக் கொண்டுவந்து, சற்றுக் கண்ணயரச் செய்யும் முறையில் நேரத்தை செலவழிப்பார்.

சில நாட்களில், எல்லோரும் கண்ணயர்ந்த சமயம், சுழியாள் குடி மயக்கத்தில் பங்களா முழுவதும் சுற்றித் திரிவாள். வாயும் பிதற்றத்தொடங்கும். என்ன சொல்லுகிறோமென்கிற நினைவேயின்றி, துரையைத் தாறுமாறாகத் திட்டுவாள். அப்பொழுதெல்லாம், ஜான் மட்டுமே அவளெதிரில் வரக்கூடும். மெதுவாக அவளை அழைத்துச்சென்று படுக்கையில் கிடத்தி, மனது அமைதிக்கு வரும் வரை, அவளுடன் தாமும் கண்விழிப்பார்.

இதையெல்லாம் அதிகம் விவரிப்பானேன்? எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் வளர்ந்த அவர்களின் இன்ப வாழ்க்கை, முற்றும் பாழாகும் நிலைமைக்கு வந்துவிட்டது.

— 11 —

இனி நடந்ததை எப்படிச் சொல்லுவது? நினைத்தாலே மனம் கூசுகிறது.

ஒரு கோடைக்கால விடுமுறையில் குழந்தைகள் நால்வரும் காடம்பாடிக்கு வந்திருந்தார்கள். அன்னைக்குத் தன் சுய அறிவே கிடையாது. உடலில் ஸதா நடுக்கம். தூங்காத நேரத்தில் அவள்போடும் கூச்சல் வெகு தூரம் கேட்கும்.

குழந்தைகள் சுழியாளின் அருகில் போகவேயில்லை. மாடியில் வசித்தார்கள்.

ஜான் துயரத்தில் ஆழ்ந்தார். அவர் முகத்தைப்பார்க்கவே நமக்குச் சகிக்கவில்லை. தம் காதல் ஏன் இப்படியாகவேண்டும், அதன் வலிமைகூடச் சுழியாளை இந்தப் படுகுழியிலிருந்து கரையேற்றச் சக்தியற்றதாகிவிட்டதே இனி என்ன ஆகும்? என்றெல்லாம் நினைத்து ஏங்குவார்.

ஓர் இரவு வழக்கம்போலத் தம் மனைவியின் அறையில் படுத்து உறங்கினார் ஜான். அன்று பகலெல்லாம் அதிகச் சிரமப்பட்டதினால் சற்று அயர்ந்து நித்திரை போய்விட்டார்.

யாரோ தம்மைத் தட்டி எழுப்பியமாதிரி தோன்றி, திடுக்கிட்டுக் கண் விழித்தார். எங்கும் வெளிச்சமாகி, சூரிய கிரணம் ஜன்னல் வழியே அறையிலிருந்த கட்டிலின் மீது விழுந்தது. துரை பதறிப்போய் எழுந்திருந்தார்.

கட்டிலில் படுத்திருந்த சுழியாளை எங்கும் காணோம்!

பைத்தியம் கொண்டவர்போல கதவருகில் ஓடினார். கதவு திறந்துகிடந்தது.

அவர் போட்ட கூச்சலில் வீட்டிலிருந்த அனைவரும் ஓடிவந்து, எஜமானியைத் தேடுவதில் ஈடுபட்டார்கள்.

ஐயோ, பாவம்......பாவம்......! பகல் 12 வரையில் தேடி அலுத்த பின்......விஸ்தரிப்பானேன்......தோட்டத்துப் பாழுங் கிணற்றில் சுழியாளின் பொன்னுடல் மிதந்ததை, பெரிய பெண் ஹெலனா, எட்டிப்பார்த்து வீரிட்டு அலறினாள்.

இந்த அதிர்ச்சியினுல், ஜான் மூளை குழம்பிப் படுக்கையில் விழுந்தார். பாரிச வாயுவென்று வைத்தியர்கள் கண்டு பிடித்தார்கள்.

சுழியாளின் பிரேதத்தை அடக்கம் செய்யும் பொழுது துரைக்குச் சற்று ஞாபகம் வந்தது. ஒரு நாற்காலியில் அவரை வைத்துக் கிணற்றினருகில் கொண்டுபோனுர்கள். மனைவியின் உடலை அன்புடன் தடவிக் கொடுத்து, தம் கையினுல் அவளை அடக்கம் செய்தார்.

— 12 —

இந்தக் கதையின் துக்ககரமான முடிவிற்கு வந்துவிட்டோம். இனி நடந்ததெல்லாம் ஊகிக்கவேண்டியதுதான்.

இந்தியாவில் பெருகியிருந்த வியாபாரத்தை விற்றுவிட்டு, வியவகாரங்களை ஒடுக்கிக் கொள்ள ஒரு மாதம் பிடித்தது. நோயாளியான ஜான் லாரென்ஸ் தம் நான்கு குழந்தைகளுடன் ஒரு வர்த்தகக்கப்பலில் இங்கிலாந்திற்குப் பிரயாணமானுர். இனி இந்த ஆயுள் காலத்தில் பார்க்கவே போவதில்லை என்று நினைத்திருந்த தம் தாய் நாட்டிற்கு நிரந்தரமாகவே போய்ச் சேர்ந்தார்.

காடம்பாடி பங்களாவை ஒருவரும் விலைக்கு வாங்க முன் வரவில்லை. ஆகவே சாமான்களுடன், பூட்டிச் சாத்தப்பட்டது. எல்லாம் மக்கி மண்ணுயின. வீட்டின் உட்புறத்திலும் செடி கொடிகள் முளைத்து மண்டின. பாழும் வீடு, பேய் உலாவும் வீடு என்றெல்லாம் அதற்குப் பெயர்கள் ஏற்பட்டன.

இதெல்லாம் சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகள் — எவ்வளவோ தூரத்தில் இருந்து கடல் கடந்து வந்து, இந்தியாவின் ஒரு சிறியமூலையில் இந்த அதிசயமான நாடகத்தை நடத்திய அன்னியரின் அடையாளம் உங்களுக்கு வேண்டுமானுல் என்னுடன் வாருங்கள்.

தோட்டத்துப் புதர்களை விலக்கிக்கொண்டு. பாழும் கிணற்றின் அருகில்போக உங்களுக்குத் தைரியமுண்டானுல், அந்த இடிந்துபோன மேடைக்குச் சமீபம் கல்லால் கட்டி, இப்பொழுது உருத்தெரியாமல் நிற்கும் சமாதியைக் காண்பீர்கள். சமாதிக் கல்லில் பொறித்து உள்ள அடியிற்கண்ட எழுத்துக்களைப்பார்த்து, இந்த விபரீதக் காதற் கதையில் உங்கள் உள்ளம் உருகும்.

சுழியாள் லாரென்ஸ்
1851, ஜூன் 22

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **"இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"**

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி	மயிலாப்பூர்
தியாகராயநகர்	புரசவாக்கம்	மவுண்டுரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	33,48,561
ரிஸர்வ் நிதி	ரூ.	32,00,000
டிபாஸிட்டுகள்	ரூ.	9,91,53,0

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N.P.B. N. கோபால அய்யர், செக்ரடரி

தொடர் கதை

இதென்ன உலகம்!

மூல ஆசிரியர்

மொழி பெயர்ப்பாளர் :— **கிருத்திவாஸ்** இலா சந்திரஜோஷி

நான் திறந்தபின் பார்த்தால் டாக்டரைக் காணோம். என் கைக்கடியாரத்தில் மணி மூன்றாகியிருந்தது. டாக்டர் வெளிச் செல்லும் பொழுது, கதவை வெளிப்புறமாக மூடிச்சென்றிருந்தார். இருந்தாலும் குளிர் தாங்கவில்லை. தனிமையில் இருக்கப் பயமாகவும் இருந்தது. குளிர், பயம் இவ்விரண்டிற்கும் அஞ்சி, கனத்த கம்பளிப் போர்வை ஒன்றினால் இழுத்து முகத்தையும் சேர்த்துப் போர்த்திக் கொண்டுவிட்டேன். பேய் பிசாசு ஏதாவது புகுந்து கழுத்தைத் திருகிப் போடாமலிருக்க வேண்டுமே என்ற பீதி, உணர்ச்சியற்றுத் தூங்கி வழிந்து கொண்டிருந்த கண்களை உணர்ச்சிபெறச் செய்துவிட்டது.

சரீர பயம் என்பது ஆத்ம பலவீனத்தின் மாற்று உருவம். பெண்களின் ஆத்மாவில், 'திடத்துவம், காடின்யம், சகிப்புத் தன்மை' என்ற ரஸாயனப் பொருள்கள் இருக்குமாகில் வெளிப்பயம் (சரீரபயம்) உண்டாகுமா? நான் எனது அபலைத் தன்மையில் பூரித்து, டாக்டரின் உதவியை நாட இச்சிப்பேனா? என்னிடம், வெகு சாந்தமாகத் தனிமையில், உள்ளத்து ஊறும் துயரப் பெருக்கைச் சகித்துக்கொள்ளும் வன்மை, உதித்திராதா? இதை எல்லாம் யோசித்தென்ன பயன்?

இதேமாதிரியான சோகம், துயரம், துக்கம், பீதி முதலிய பாவங்கள் புடை சூழக் கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் இமைகொட்டாமல் விழித்திருந்தேன். பிறகு சிறிது சிறிதாக என்னையறியாமலே நித்திராதேவி என்னையாட்கொண்டாள். நான் விழித்தபொழுது சூரியனது ஒளி நன்கு வீசிக்கொண்டிருந்தது.

10

ஒரு நாள் காலேஜில், எனது பால்ய சிநேகிதியும் தோழியுமான கமலினி கூறினாள்— நேற்று உன் டாக்டர் என் வீட்டிற்கு, ஆங்கிலப் புரொபஸருடன் வந்திருந்தார். அச்சமயம் வீட்டில் என்னைத் தவிர வேறு எவருமில்லை. நான் 'இங்கிலீஷ் டெஸ்ட்'டிற்கு, 'பிரிபேர்' செய்துகொண்டிருந்தேன். இவ்விருவரது 'திடீர் விஜயம்' என்னைத் தூக்கிவாரிப்போட்டுவிட்டது. புரொபஸர் டாக்டரை எனக்குப் பரிச்சயம் செய்து வைத்தார். டாக்டர் ரொம்ப ஷோக் பேர்வழியாயிருப்பார் போலிருக்கிறது. காலேஜ் பெண்கள் அனைவருடனும் பரிச்சயம் செய்துகொள்ள அவருக்கு ஆசையாயிருக்கிறதாம். என்னைப் பரிச்சயம் செய்துவைக்குமாறு வேண்டினார், நான் பதறிவிட்டேன். எல்லாம் அன்றைய நாடகத்தின் விளைவு என எண்ணுகிறேன். உனக்கு நான் முன்பே சொல்லவில்லையா, இதைப்பற்றி?

கைப்புத்தகத்தினால் அவளை அடித்துக் கூறினேன்.

“போடிபோ. இதுமாதிரி உளறினால் கொன்றுபோட்டுவிடுவேன். டாக்டரும் ஆச்சு. நீயும் ஆச்சு?”

“உண்மையாக டாக்டருக்கும் உனக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லையே? இருக்கட்டும், சொல்கிறேன்” உனக்கு. என்று நிஷ்டூரப் புன் முறுவலுடன் கூறிவிட்டுக் கிளம்பினாள் அவள்.

என்னுள்ளத்தில் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரியலாயிற்று. இத்தீயின் காரணமாகக் கமலினியிடம் அநேக விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆவலுதித்தது. அதனால் அவள் கிளம்புவதைப் பார்த்து, 'அடி பைத்தியமே, எங்கேயடி அதற்குள் கிளம்பிவிட்டாய்? ஒரு வார்த்தை கேட்டு விட்டுப் போடி.

'என்னடி ஒரு வார்த்தை?'

'நீ எப்பொழுது சாவாய்?'

'டாக்டரைக் கல்யாணம் செய்துகொண்டபின்' என்று கூறி வெட்கத்தை விட்டுச் சிரித்தாள்.

'நீ எப்படி அவரைக் கல்யாணம் செய்து கொள்ளமுடியும்? அவர்தான் காலேஜ் பெண்கள் அனைவரையும் தன் மந்திரக்கயிற்றில் கட்டி இழுக்கப்போகிறாரே!

'ஆம். அது வாஸ்தவந்தான்' என்று மறுமுறையும் அவள் உரக்கச் சிரித்தாள்.

அன்றைய காலேஜ் 'லெக்சர்' என் மனத்தில் பதியவே இல்லை. இந்த உலக மனைத்துமே கமலினியைப்போல என்னைப் பரிகாஸம் செய்துகொண்டிருந்தது.

இரண்டு இரண்டரை மாதமாகப் புரொபஸர் கிசோரீமோகன் டாக்டருடன் வருவதில்லை. இருவருக்கும் ஏதாவது தகராறு இருக்குமோ என்று எண்ணினேன். ஆனால் புரொபஸரின் உதவியைக்கொண்டு காலேஜ் பெண்கள் அனைவருடனும் பரிச்சயம் ஏற்படுத்திக்கொள்ளும் காரியத்தில் டாக்டர்

முனைந்திருக்கிறார் என்பதைக் கமலினியின் வாயிலாக அறிந்துகொண்டேன். அதனால் இவ்விருவருக்கும் தகராறு இருக்கக் காரணமில்லை என்பது ஊர்ஜிதமாயிற்று.

டாக்டரை எதிர்நோக்கி, அவர் வரும் வரையில் பொழுதைக் கழிக்கும் நோக்கத்துடன் 'புதுப்பத்திரிகை' ஒன்றைக் கையிலெடுத்துப் படிக்கலானேன். தினமும் இரண்டு மூன்று பத்திரிகைகள் என்னிடம் வரும். ஆனால் ஒன்றையும் நான் ஊன்றிப் படிப்பதில்லை. மேலெழுந்த வாரியாக 'ஹெட்லயனை'ப் படித்துத்தெரிந்து கொள்வதுடன் திருப்தி அடைந்து விடுவேன்.

எதுவாயிருந்தாலென்ன? நான் தினம்போல ஹெட்லயனை மட்டும் பார்த்தவண்ணம் பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தேன். பத்திரிகைகளில் தினசரி புதுப்புது விஷயங்கள் படிக்கக் கிடைக்கின்றன என்று ஜனங்கள் கருதுகின்றனர். இது எவ்வளவு பெரும்பிழை என்பதை வெகு குறைவான ஜனங்களே அறிவர். உலகச்சக்கரம் சில மாறுதல்களுடன் தினம்போலவே சுழலுகிறது. அச்சிறு மாறுதல்கள் புதியனவாகத்தோன்றுகின்றன குருட்டு மானிடனுக்கு. இன்று 'குறிப்பிட்ட இடத்தில் ஹிந்து—முஸ்லீம் கலகம் நடந்தது' என்று படிப்பீர்கள். இரண்டு மூன்று தினங்கள் சென்றபின் அதே சம்பவம் வேறு ஓர் இடத்தில் நடந்திருப்பதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிடும். பெருந் தலைவர் ஒருவர், 'சுதந்திரம்பெற அனைத்தையும் துறந்து தம்முயிரையே தியாகம் செய்யச் சித்தமாயிருக்கவேண்டும்' என்று இளைஞர்களுக்கு உபதேசம் செய்திருப்பார். அதேபோல அநேகந் தலைவர்கள் அநேக இடங்களில் பிரசங்கம் செய்திருப்பார்.

இன்றைய பத்திரிகையிலும் அதே சுவையற்ற செய்திகள் தாமிருந்தன. அதைக் கீழே போட்டுவிட்டு மாடியை அடைந்தேன். எங்கள் வீட்டு மாடி வெகு உயரத்தில் இருந்ததால், கங்கா—யமுனா நதிகள் சந்திக்கும் இயற்கைக் காட்சி தெளிவாகத் தெரிவதுண்டு. நான் இயற்கையின் இனிமையை அடிக்கடி பார்ப்பதுண்டு. இன்றும் அதை உற்று நோக்கலானேன். இன்பமூட்டும் அந்த இயற்கையன்னை, என் மனத்தை அமைதியுறச் செய்து, ஓர் இன்ப வேதனையை உண்டுபண்ணினாள். உள்ளத்தீ சற்றுத் தணிந்து கண்வழியே நீராவியைப் பொட்டுப் பொட்டாக உதிரச்செய்தது.

வெகுநேரம் வரை மாடியிலிருந்துவிட்டு, பிறகு கீழிறங்கித் தோட்டத்தை அடைந்து, பூந்தொட்டிகளைக் கவனிக்க ஆரம்பித்தேன். மனம் அதைக் கவனிப்பதிலும் செல்லவில்லை. அதனால் என் அறையை அடைந்து கட்டிலில் படுத்துத் தூங்க முயன்றேன். ஆனால் தூக்கம் வந்தால்தானே!

மேதாஸ்

"சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார்செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

K. S. மேதா & Co., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு :—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,

ஸெகண்ட்ராபாத்.

— 11 —

கடைசியாக டாக்டர் வந்துசேர்ந்தார். நான் எழுந்து உட்கார்ந்து தரையைக் கையால் தொட்டு வணங்கியபின் பரிகாஸம் கலந்த தொனியில் 'ஆயிரக் கணக்கான அரம்பையர் களின் கட்டில் சிக்குண்டிருந்தும், இவ்வடியாளை மறவாமல் இருந்ததற்காக, தேவரீருக்கு வணக்கம் புரிகிறேன்'

''இதென்ன கேலி செய்கிறாயே!''

'டாக்டர்' தற்காலம் தங்களிடம் வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதுபற்றி மகிழ்ச்சியடைகிறேன், இன்று எவ்வளவு பெண்களுக்கு நாடி பார்த்துவிட்டு இங்கு விஜயம் செய்திருக்கிறீர்கள்?'

''என்ன, என்ன? நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லையே''

''பேஷ் டாக்டர் பேஷ். ஒன்றுமே தெரியாதவர்போல நன்றாக நடிக்கிறீர்களே!'

'உன்மீது ஆணை. எனக்கு ஒன்றும் புரியவில்லை'

'உண்மையாகவா?'

'என்மீது ஏன் உனக்கு நம்பிக்கை ஏற்படமாட்டேனென்கிறது?'

'ஒளிக்காமல் சொல்லுங்கள். கமலினி வீட்டிற்கு நேற்றுப் போயிருந்தீர்களா இல்லையா?'

'ஆம், போயிருந்தேன். புரொபஸர் என்னைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனார். நான் கெட்ட. எண்ணத்துடன் போயிருந்தேனா அதற்கு? நீ இப்படி நினைப்பாயென்று தெரிந்தால் நான் அவள் வீட்டிற்குப் போயே இருக்க மாட்டேன்'

'நான் ஒன்றும் உங்களிடமிருந்து அறிந்து கொள்ள விரும்பவில்லை. எக்கேடு கெட்டுப் போகட்டும் அவ்விஷயங்கள். எனக்குச் சாவு கிட்டிவிட்டது போலத் தோன்றுகிறது; தூக்கம் வருகிறதில்லை. உடம்பு பூராவும் நடுங்குகிறது. ஏதாவது பேய் பிசாசு பிடித்திருக்கிறதோ, அல்லது கடுமையான வியாதியோ, தெரியவில்லை. இதற்குச் சீக்கிரம் சிகித்ஸை செய்யப்படாவிடில் நான் பிழைப்பது அரிது' என்று கூறும்பொழுது எனது கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

'பேயுமில்லை, பிசாசுமில்லை. வீணாக அலட்டிக்கொள்ளாதே. 'நர்வ் டானிக்' சாப்பிட ஆரம்பித்துவிட்டால் இந்த 'வீக்நெஸ்' மறைந்துவிடும். 'வைப்ரோனா' அல்லது 'மனோலா' உபயோகிக்கலாம், நீ. 'ந்யூரெஸ்தீனியா'விற்குச் சரியான 'டானிக்' ஒன்றிருக்கிறது. அதன் பெயரைச் சொன்னாலே நீ திடுக்கிடுவாய். அதனால்தான் துணியமாட்டேன் என்கிறது.'

'சொல்லித்தான் ஆகவேண்டும்.'

''போர்ட் ஒயின்'! இதையருந்திப் பழக்கத்திற்குக் கொண்டுவந்துவிட்டால் பலஹீனம் எல்லாம் தெறித்து ஓடிவிடும். இது நிச்சயம். ஆனால் 'ஸெண்டிமெண்டை' அடக்கிக்கொள்ள வேண்டும்.'

'மன்னிக்கணும், எனக்கு ஒரு டானிக்கும் வேண்டாம்' என்றேன்.

'நான்தான் முன்பே சொன்னேனே! நம் நாடு இம்மாதிரி வீண் 'ஸெண்டிமெண்ட்'களின் காரணமாகவே சீர் கெட்டுக்கிடக்கிறது. முற்காலத்தில் இதற்கெல்லாம் நம் நாட்டில் ஸ்வதந்திரம் உண்டு. ஆயுர்வேதத்தில் 'ஔஷதார்த்தே ஸுராம் பிபேத்' என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் தற்காலம் நமது நாகரிக சமூகத்தில் 'டெம்பரென்ஸ்' (மிதம்) என்ற வெளிவேஷம் அதிகரித்துவிட்டது. நாளைக்கு ஒரு பாட்டிலைக் காலிசெய்துவிட்டு, 'நாங்கள் மேல் நாட்டு மருந்துகளைத் தொடுவதுகூட இல்லை. ஏனென்றால் அதில் நூற்றுக்கு இருபது பங்கு 'அல்கஹால்' (சாராயம்) கலந்திருக்கிறது' என்றுகூறும் ஆசாமிகளை நேரில் பார்த்திருக்கிறேன். இவர்களெல்லாரும் வெளிவேஷம் போடுகிறார்கள். நான் ஆரோக்யத்தின் பொருட்டு இரண்டு மூன்று 'பெக்' அருந்துகிறேன் என்பதை மறைக்க விரும்பவில்லை. சில மாதர்களும்கூட ஒளிவு மறைவின்றி விருந்துகளில் குடிக்கின்றனர்' என்றுரைத்தார் டாக்டர்.

டாக்டர் சாராயம் அருந்தும் வழக்கமுள்ளவர் என்று இன்றுவரை எனக்குத் தெரியாது.

எனது நோய் என்ன என்பதைத் தங்களால் அறிய முடியவில்லை. தங்கள் மனதுள் ஒரே எண்ணம்—நான் அதப்பாதாளம்வரை நெறி தவறி விழவேண்டும் என்ற எண்ணம்தான் வேரூன்றி இருக்கிறது. பெண்களுக்கு மானஸிக பலவீனம் ஏற்படுவதைக் காணக் காண ஆண்களுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கிறது. ஆண்களிடத்தில் 'நெறிவழுவாமை' என்பது நிலைத்திருப்பதில்லை. அதனால் பெண்களிடத்துள்ள 'நெறிவழுவாமை' என்ற பெருமையைச் சகிக்கும் தன்மை அவர்களுக்கில்லை' என்றேன் நான்.

எனது இவ் வார்த்தைகளுக்கு டாக்டர் பதில் கூறாமல் சிரிக்கலானார்.

லாகூரில் ஒரு பெரும் அரசியல் மகாநாடு கூடுவதாயிருந்தது. என் தாய் தந்தை இருவரும் அதில் கலந்து கொள்வதற்கென, இன்று மாலை போவதென்று நிச்சயித்திருந்தனர். டாக்டருக்கு அது நேற்றைக்கே தெரியும். ஆகையால் ஸ்டேஷனில் வழியனுப்புவதற்குக் குறித்த சமயத்திற்கு அவர்வந்து சேர்ந்தார். டாக்டரைக் கண்டதும் என்னுள்ளம் துடித்தது. மனப்போக்கும் ஒரேயடியாக மாறியது. பாதிவிரத்யத்தைப்பற்றி மனதிலுதித்தபரிசுத்தமான துயரமும் எங்கோ மறைந்தது!

தாய் தந்தையை வழியனுப்ப நான், லீலா, டாக்டர் மூவரும் சென்ருேம். 'மெயில் வண்டி, நகர்ந்ததும் நாங்களும் திரும்பிவிட்டோம். பொழுது சாய்ந்துவிட்டது. சூரியன் அந்தி வாயில்விழும் சமயம். ஹேமந்தருதுவில் அந்தி நேரமே, துயரம் வாய்ந்ததாகக் காணப்படும். போதும்போதாக்குறைக்கு அப்பாவும் அம்மாவும் வீட்டை 'வெறிச்' சென்றுசெய்துவிட்டு மகாநாட்டிற்குப்போய்விட்டார்கள். வீடுசென்றும் எனக்குப் பேசப் பிடிக்கவில்லை. டாக்டரும் இன்று உணர்ச்சியற்றவராகக் காணப்பட்டார். ஒருகால் லீலாவும்கூட இருந்ததனுல் அப்படி யிருந்தாரோ, என்னவோ!

என்னவோ, அப்பா ஊரில் இல்லாதது தான் என்மனமின்மைக்குக் காரணம். அம்மாவில்லாமல், நான் மகிழ்ச்சியுடன் இருந்துவிடுவேன். அப்பாவின்றி என்னுல் இருக்க முடியாது. அவர்பால் எனக்கு இவ்வளவு எல்லைகடந்த அன்பு இருந்தது என்பது இன்றுதான் எனக்குத்தெரியவந்தது.

இதைத் தவிர என்னுள்ளத்துள் ராஜுவைப் பற்றிய புதுத்துயரம் வேறு குடிகொண்டிருந்தது. 'நான் ராஜுவின் வெறுப்பிற்கு ஏற்றவளா? அவ்வளவு நான் ஹீனமானவளா? என் அன்பை அவன் ஏன் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிருன்?' என்ற யோசனையில் கோபமுற்று அழவிரும்புவேன், ஒருதரம். 'நான் வெறுப்பிற்கேற்றவள்தான். 'ராஜுவின் தமக்கை' என்று சொல்லிக்கொள்ள எனக்கு வாய் கிடையாது' என்று எண்ணி, என் மனப்போக்கின் நீசத்தன்மையை நொந்து கொள்வேன் மறுதரம்.

என் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க வேண்டும்?' என்ருள் லீலா.

'என்ன வேண்டுகோள்?' என்ருர் டாக்டர்.

'நீங்கள் உங்கள்காலத்து மெடிகல் காலேஜ் மாணவர்களின் கதை கூறுவீர்களே! இன்னும் ஏதாவது ருசியான கதை ஒன்று சொல்லுங்கள், பொழுதுபோவதற்கு.' என்ருள் லீலா.

டாக்டர் கதையை ஆரம்பித்தார்-'அவருடன் கூடப்படித்த ஒரு மாணவன் 'T. B. 'ஸ்பெஷலிஸ்ட்' ஆக விரும்பினுனும். இவ்வியாதியைப் பற்றி வெகு நன்கு தெரிந்துகொள்ளவேண்டுமென்று அவன் மனத்துள் அவா உதித்தது. தலைமை ஆசிரியரிடம் வரும் இம்மாதிரிக் கேஸ்களை வெகு நுணுக்கமாகக் கவனிப்பான். இந்நோயின் கிடாணுக்களை நன்கு கண்டறிந்துகொள்ளும் பொருட்டு நோயாளியின் சிலேஷ்மம், ரத்தம் இவைகளைப் பூதக்கண்ணுடியின் மூலம் கவனித்துப் பரீக்ஷிப்பான். இதே மாதிரி ஹாஸ்டலில் இருந்த பையன்கள் ஒவ்வொருவரையும் பரீக்ஷித்து 'டி. பி. கிளாண்ட்' இருக்கிறதா இல்லையா என்பதை ஆராய்வான். இந்நோயைப்பற்றிய அநேக உண்மைகளைப் பயின்றதன் பயனுகவும்,

சந்தோஷமாக உத்ஸாகத்துடன் நாள் தோறும் வேலை செய்யும்.

இன்று நீ பூர்ண உத்ஸாகத்துடன் தினந் தோறும் சலிப்பின்றி உழைத்துவரும் வாலிபன் வாழ்க்கையை விரும்புவதே இதற்குக் காரணம்.

ஆனுல் சுமார் 25 ஆண்டுகளுக்குப்பின்பு உன்னுடைய வாழ்க்கை எவ்வகையிலிருக்கும் என்று யோசித்தாயா?

நெருக்கடியுள்ள கடுமையான உத்யோக வாழ்க்கைக்குப் பிறகு நீ அமைதியான கவலையற்ற சுக வாழ்வை வேண்டுமென ஏங்குவது இயற்கையே.

நேஷனல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ஃ ஃ ஃ

நெருப்பு, விபத்து மோட்டார், மற்றும் எல்லாவித இன்ஷ்யூரன்சுக்கும் சிறந்தது

நேஷனல் பயர் & ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

சென்னை கிளை ஆபீஸ்:

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்
362, சைனு பஜார் ரோடு,
எஸ்பிளனேடு

சப்-ஆபீஸ்கள், பங்களூர் & மதுரை

நோயாளிகளைக் கவனித்து வந்ததனாலும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் பேரிலேயே சந்தேகம்கொண்டுவிட்டான். பிறகு தன் நாடியைப் பார்த்துக்கொள்வதும், 'டெம்பரேச்சர்' எடுத்துக்கொள்வதும் அவனது தினசரி வேலையாகிவிட்டது. கிடாணுக்களுக்குப் பயந்து தண்ணீரை நன்கு வடிகட்டி அருந்துவான். ரொட்டி, வெண்ணெய், பால் இவற்றைத் தவிர வேறு ஆகாரமே உட்கொள்வதில்லை என்று நிறுத்திவிட்டான். வேண்டுமென்று தோன்றினால் ஏதாவது பழங்களைப் புசிப்பான். இம்மாதிரி இருக்கும்பொழுது தெய்வச்செயலாக ஒரு நாள் அவனுக்கு 'டெம்பரேச்சர்' அதிகமிருந்துவிட்டது. உடனே பதறிப்போய் தலைமை ஆசிரியரிடம் ஓடி, தன்னை நன்கு பரீக்ஷித்துப் பார்த்துக்கொண்டான். ஆசிரியர் உனக்கு 'யக்ஷ்மா' இல்லை என்று சொல்லியும் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. தன் சிலேஷ்மத்தைத் தானே பரீக்ஷித்துக்கொண்டான். அவனுக்கு அதில் 'கிடாணுக்கள் இருப்பது போலப்பட்டது. காலேஜிலிருந்து 'லீவு' எடுத்துக்கொண்டு வீட்டை அடைந்தான். 'கம்ப்ளீட் ரெஸ்ட்' எடுத்துக்கொண்டான். இருபத்துநான்குமணி நேரமும் நாற்காலியில் படுத்தே கிடப்பான். சரீரத்தைச் சிறிதும் அசைக்கமாட்டான். க்ஷயத்தினால் சரீரம் க்ஷீணித்து, ஆறுமாதத்திற்குள் இவ்வுலகத்தைவிட்டகன்றான் அவன்.

— 13 —

இக்கதை டாக்டர்களுக்கு வேண்டுமானால் ருசிகரமானதாயிருக்கலாம். இக்கதையைக் கேட்டு எனக்குக் குடல் நடுக்கமெடுத்தது. லீலாவின் நிலையும் இவ்விதமே தானிருக்க வேண்டும். 'இதுதான் உங்களது ருசிகரமான கதையோ? டாக்டர்களுக்கெல்லாம் 'சாவு' என்றாலே ஆனந்தமாயிருக்கும்போலும். உங்கள் நெஞ்செல்லாம் கல் நெஞ்சுதான் என்பதில் சந்தேகமில்லை. நீங்கள் தோழன் மரித்த செய்தியறிந்து மகிழ்வுற்றிருப்பீர்கள் என்று தெரிகிறது' என்று கூறி, லீலா போக எழுந்தாள்.

'லீலா, உட்காரேன். எங்கே கிளம்பிவிட்டாய்?' என்றேன்.

'நீ கொடுத்த நாவலை இன்னும் முடிக்கவில்லை. போய் அதைப் படிக்கப்போகிறேன்' என்று கூறிச் சென்றுவிட்டாள் லீலா.

வெளியே சிறிது வெளிச்சம் இருந்தது. ஆனால் அறையினுள்ளே இருட்டிவிட்டது. நானும் டாக்டரும் அவ்வறையில் தனிமையில் இருந்தோம். ஏதோ உள்ளக் கிளர்ச்சிகள் காரணமாக என் மனம் நிலையிலில்லை. மாலைப்பொழுதின் இந்நேரத்தில்தான் ஏதாவது மோகன மாயசக்தி இருக்கிறதோ, அல்லது எனக்குத்தான் மூளை விகாரமடைகிறதோ, தெரியவில்லை. என்னுள்ளத்தில் எப்பொழுதுமே ஏற்பட்டிராததொரு சஞ்சலம் உதித்தது. பகலில் பட்ட துயரத்திற்கும் இந்தச் சஞ்சலத்திற்கும் யாதொருவிதமான சம்பந்தமும் கிடையாது. எனதுள்ளத்தில் சுகம்—துக்கம், பிறப்பு—இறப்பு இவை பற்றிய சொல்லவொண்ணாத ஓர் அறிவு எழுந்தது. இம்மாயை நிரம்பிய ஸ்வல்ப அந்தகாரத்தில், காதல் நிரம்பிய ஸௌந்தரிய நகரத்திற்கு, டாக்டருடன் சென்று, அச்சமின்றி ஆனந்த மனுபவிப்பது போலவும், எனது நெறி தவறிய வாழ்க்கை அப்பொழுதுதான் அர்த்த புஷ்டியோடு கூடியதாக ஆனது போலவும் கனவு காணலானேன். 'ஆனந்த மனுபவிக்க நினைப்பாயாகில் இதுவே நல்ல தருணம். இத்தருணத்தை நழுவவிட்டு விடுவாயாகில் வேறு இம்மாதிரி நல்ல தருணம் வாய்ப்பதரிது. பயம், சந்தேகம் முதலிய தொல்லைகளிலிருந்து விடுபட்டு ஆனந்தம் அனுபவிக்க இதுவே நல்ல தருணம். என்று எங்கிருந்தோ அசரீரி சொல்வதுபோலிருந்தது.

என் சரீரமே 'படபட' வென்று நடுங்கிக்கொண்டிருந்தது. விளக்கு 'ஸ்விட்சை'ப் போடக்கூடத் துணிவு ஏற்படவில்லை. அறையின் இருட்டைத் துளைத்துக்கொண்டு, மாலையின் தெளிவற்ற—மங்கலான ஒளிக்கிரணங்கள், எங்களிருவரின் முகத்திலும் ஏதோ மாய விளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தன. நாங்கள் மௌனமாக நின்றோம். அகஸ்மாத்தாக டாக்டர் தம் கால்களால் என் கால்களை வருடினார். என் உடலில் ஓர் 'எலெக்ட்ரிக் ஷாக்' அடித்தது போன்றிருந்தது. எனது ரத்தத்தில் ஒருவித வெறி உண்டாயிற்று. நான் என்னைச் சமாளித்துக்கொள்ள முயன்றேன். க்ஷண நேரத்தில் என் மூளை வழியே, ஆயிரக்கணக்கான சிந்தனை அலைகள் மிதந்து சென்றன.

நான் எனது வருங்கால உல்லாஸ வாழ்க்கையின் நினைவில் தோட்டத்தில் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தேன். இன்றைய மனோநிலைக்கும், அன்றைய சம்பவத்திற்கும் என்ன தொடர்பு என்று சரியாகக் கூறமுடியாது. இந்த நினைவு எழுந்ததும் என் கண்களில் நீர் சுரந்தன. அத்தெளிவற்ற ஒளியிலும் டாக்டர் என் கண்களில் கண்ணீர்த்திவலைகள் ததும்பியிருப்பதைக் கண்டுகொண்டார்போலும். என் கையைப்பிடித்து 'லஜ்ஜா' என்றார்.

பூரிப்படைந்த காரணத்தினால் என் நெஞ்சு அடைத்துக்கொண்டுவிட்டது, பேசமுடியாமல் 'பேசினால் என் பலவீனம் வெளிவந்துவிடும்' என்ற எண்ணத்தினால் பேசாமல் வாளாவிருந்தேன்.

நான் என் கட்டில் மீது அமர்ந்திருந்தேன். டாக்டர்நான் பேசாமலிருப்பதைக் கண்டோ, அல்லது வேறு ஏதாவது காரணத்தினாலோ, நாற்காலியிலிருந்து எழுந்து கட்டிலில் என் பக்கத்தில் உட்கார்ந்து, என்னை அணைத்துக் கொண்டு, மெதுவான குரலில் ஏன் பேசாமல் இருக்கிறாய்?' என்று வினவினார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவரது மடியில் முகத்தை மூடிக்கொண்டு விசித்து விசித்து அழலானேன். சிறிது நேரம் கழித்து விசிப்பு நின்ற பின்னரும், பழைய நிலையிலேயே, அவரது மடியில் முகத்தைப் புதைத்துப் படுத்துக் கிடந்தேன். மோக வலையில் சிக்கிக்கொண்டிருந்த என்னிடம், உடலை அசைக்கும் சக்தியே இல்லை.

திடீரென வெளியிலிருந்து, அதே அறிமுகமுள்ள குரல், வாயு மண்டலத்தை அம்பு போலத்துளைத்துக்கொண்டு, 'அக்கா' என்றழைத்தது.

இச்சொற்கள் என்னுள்ளத்துள் புகுமுன்னரே, ராஜு வாசற்படியில் வந்து நின்றுவிட்டான். நான் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தேன். அதற்குள் ஒரு பார்வை பார்த்துவிட்டு, ராஜு உடனே திரும்பிச் சென்றுவிட்டான்.

ஒரு கிரேக்கக் கதையில், 'கார்கன் முகத்தைக் காண்பவர்கள் கலங்கி விடுவர்' என்று படித்திருக்கிறேன். ராஜுவின் கண்களில் இருட்டின் காரணமாகத் தெளிவாகப் பட்டிருக்க மாட்டேனாயினும் நான் கல்லாகச் சமைந்து, உயிரற்றவள்போலாகிவிட்டேன். இடியுண்டவள்போலச் சிறிது நேரம் அறிவு இழந்து உட்கார்ந்திருந்தேன். அறிவு நிலைக்கு வந்ததும் வெறி மயக்கம் சூழ்ந்துகொண்டது. தலையைப் பிய்த்துக்கொண்டு உரக்கக் கதற வேண்டும் என்று தோன்றிற்று. சிறிது நேரத்திற்கு முன்பு டாக்டரின் ஸ்பரிசத்தினால் புளகமுற்ற எனக்கு, இப்பொழுது அவரதுமேல்வீசி, என்மேல் படும் காற்றைக் கண்டால்கூட, ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. என் உள்ளம் வெருண்டது. டாக்டர் கட்டிலிலேயேதான் அமர்ந்திருந்தார். நான் குரலில் கோபத்தை வரவழைத்துக்கொண்டு, 'டாக்டர், சந்தோஷமாய்ச் சென்று வாருங்கள். வேண்டிய அளவு ஆழமாகக் குழி பறித்து என்னைத் தள்ளிவிட்டீர்கள். இனி நீங்கள் போகலாம்' என்றேன். இந்த இருட்டிலும் என் கண்களில் கோபப் பொறி தெளிவாகத் தென்பட்டதுபோலும். சிறிது பீதியுற்று 'ஏன்?' என்று வினவினர் டாக்டர்.

அவருக்கு இச் சம்பவம் வெகு சாதாரணமாகப்பட்டது. அந்தோ! ஆண்களின் அறியாமையை என்னவென்று சொல்ல? நான் வெகு ஆத்திரத்துடன் 'போதும் போதும். இங்கிருந்து இப்பொழுதே என் அறையை விட்டு வெளியேறுங்கள்' என்று கூறிய வண்ணம் 'ஸ்விட்சை' அமுக்கினேன். அறையில் வெளிச்சம் உண்டாய்விட்டது.

கோபமும், அவமானமும் அடைந்து, தம் தொப்பியையும் கைத்தடியையும் எடுத்துக்கொண்டு, சிவந்த கண்களுடன் என்னை உற்று நோக்கிவிட்டு, நேரே வெளியேறிவிட்டார். அவரது கண்களில், அவமானப்படுத்தப்பட்ட காதலின் பழிவாங்கும் நோக்கம், வெகு தெளிவாகத் தென்பட்டது. அச் சமயம் இவற்றை எல்லாம் கவனிக்கும் ஆற்றல் என்னிடமில்லை.

இரவு உணவு உண்ணும் அபிலாஷையே என்னுள்ளத்தில் உதிக்கவில்லை. இருந்தாலும் சாப்பிடாமல் இருப்போமாகில் வேலைக்காரர்களின் மனதில் சம்சயமுதிக்கும். பிறர் வேண்டுவதையும் பிடிவாதமாகச் சாப்பிடச் சொல்வதையும் பொறுக்கவேண்டி வரும் என்ற எண்ணத்தினால் எனது அறைக்கே உணவைக் கொண்டுவருமாறு உத்தரவிட்டுவிட்டேன். உணவருந்திப் படுக்கை விரித்துக் கொண்டிருந்தேன். லீலா, கதவைத்தட்டி 'அக்கா, கதவைத்திற' என்றழைத்தாள்.

நான் தினமும் லீலாவை என்னறையில் படுக்குமாறு சொல்வதுண்டு. ஆனால், அவள் இன்று எனது ஏகாந்த சிந்தனையைக் கலைக்கவந்தது, எனக்குச்சிறிதும் பிடிக்கவில்லை. லீலா தினம் போலவே, கவலையற்றவளாகவும், மகிழ்ச்சியுடனும், அச்சமின்றியும் இருந்தாள். 'அக்கா, இன்றைக்கென்ன இவ்வளவு சீக்கிரம் படுக்கை விரித்துவிட்டாய்?' என்றாள்.

'இன்றைக்கென்னவோ தூக்கம் கண்ணைச் சுழற்றுகிறது' என்று வாட்டமாகப் பதில் இறுத்தேன்.

லீலா, சிரித்துப்பேசிப் பொழுதைப் போக்க வந்திருந்தாள். எனது இப்பதிலைச் செவியுற்றதும் அவளது முகம் சுருங்கிவிட்டது. வருத்தத்துடன், தன் கட்டிலில்போய்ப் படுத்துக் கொண்டாள்.

'நாளைமுதல், ராஜுவிற்கு என் முகத்தை எப்படிக் காட்டுவது? டாக்டருடன் நான் தனிமையில் உட்கார்ந்திருந்ததை ராஜு நேருக்கு நேர் கண்டுவிட்டான். அவனை இனி எந்த விதத்திலும் சாவதானப்படுத்துவது என்பது சாத்தியமில்லை.' ராஜுவின் இதயத்தில் ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தைத் தீர்த்து வைக்க எப்படி முடியும்? இன்று வரை சரீர சம்பந்தமான பாபம், கடவுள் புண்ணியத்தில் நான் செய்யவில்லை. இருந்தாலும், இன்றைய எனது நிலையைப் பார்த்த ராஜுவிற்கு என்மீது நம்பிக்கை உதிக்குமா, எவ்வளவு தெளிவாகக் கூறினும்? அட பகவானே, இனி ஒரு வழியுமில்லையே!' என்று ஏங்கினேன். அந்த ஏக்கத்தில் என்னை அறியாமலே, விசித்தழுது விட்டேன்.

எனது விசிப்பைச் செவியுற்ற லீலா, பதட்டமுற்று 'என்ன அக்கா, செய்கிறது?' என்று கேட்டாள்.

'ஒன்றுமில்லை அம்மா. கவலைப்படாமல் தூங்கு' என்று பதிலளித்தேன் நான்.

அவள் அதிகப் பதட்டமுற்றிருந்ததனால் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். நான் அவ

ளுடன் ஏதாவது பேசமாட்டேனா என்று சிறிதுநேரம் எதிர்பார்த்தாள். ஆனால் நான் மௌனமாயிருப்பதைக் கண்டு படுத்துக் கொண்டுவிட்டாள்.

இரண்டடிக்கும் வரையில் 'சர்ச்'சின் மணிச் சப்தத்தைக் கேட்ட வண்ணம் விழித்திருந்தேன். இரண்டு மணிக்கப்புறம் என் கண்கள் மூடின. கண் மூடினதுதான் தாமதம், அர்த்தமற்ற, தெளிவில்லாத பயங்கரத் துர்ஸ்வப்னங்கள் என் மூளையை முற்றுகையிட்டன. அத்தெளிவற்ற கனவுகளைக் கண்டுகொண்டிருந்தபோதிலும் எனது வாய் ஏது ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருந்தது. தூக்கம் வந்துவிட்டது. இதே மாதிரியான கலவரத்தில் இரவைக்கழித்தேன். பொழுது புலர்வதற்கு முன்பாக நல்ல அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்தேன். எழுந்திருக்கும்பொழுது மணி ஒன்பது அடித்துவிட்டது.

— 15 —

வெளி உலகத்துத் தோன்றும் வெளிச்சத்திற்கும் இருட்டிற்கும் உள்ளுலகத்துடன் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. சென்ற இரவின் இருட்டில், எனது நிலை சிக்கறுக்க முடியாததாகவும், பயங்கரமானதாகவும் தோன்றியது. ஆனால் இன்று காலையொளியில் எனக்கு நன்னம்பிக்கையும் அமைதியும் கிட்டினது. 'நேற்றைய இரவு சம்பவம், அச்சமயம் எவ்வளவோ பயங்கரமாகத் தோன்றியபொழுதிலும், உண்மையில் அதற்காக அதிகக் கவலை கொள்ளவேண்டிய அவசியமில்லை. ராஜுவின் உள்ளத்தில், இச்சம்பவம் புண்ணை உண்டாக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாள் ஆக ஆக இவ்விஷயத்தை அவன் மறந்துவிடுவான். மறந்து பரிவுடன் 'அக்கா' என்றழைத்துக்கொண்டு தானாக வந்துவிடுவான்'. என்று மனத்தைத் தேற்றலானேன்.

காலையுணவும் என்னறையிலேயே அருந்தினேன். லீலாவும் ராஜுவுடன் தான் சாப்பிட்டாள்போலும். உணவருந்தியதும் லீலா பள்ளிக்குச் சென்றுவிட்டாள். உடல் நலிவின் காரணமாக நான் வீட்டிலேயே தங்கிவிட்டேன். ஒரு புஸ்தகத்தை எடுத்துப் படிக்கலானேன். இரண்டு பக்கங்கள் படிக்குமுன்னரே கண்கள் மூட ஆரம்பித்துவிட்டன. புத்தகத்தை மூடி வைத்துவிட்டுத் தூங்க ஆரம்பித்தேன். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் தூங்கியிருப்பேன். கண் விழித்ததும் சோம்பல் தீரவில்லை. எனது எலும்பையெல்லாம் நொறுக்கிப்போட்டாற்போல ஓர் உணர்ச்சி, சோம்பல், பலவீனம், ஜடத்துவம் இவை காரணமாக எழுந்திருக்கவே தோன்றவில்லை. அதனால் படுத்தபடியே கிடந்தேன். மறுபடியும் ஒரு முறை தூக்கம் வந்துவிட்டது.

நான் கண் விழித்தபொழுது, பொழுது சாய ஆரம்பித்துவிட்டது. நேற்று இரவு உண்டான திகில், சிறிது சிறிதாக எழ ஆரம்பித்தது. மலேரியா ஜ்வரம் விட்டு விட்டுக் குறிப்பிட்ட சமயத்தில் அடிக்க ஆரம்பித்துவிடுமே, அதேபோல, இருட்டு அதிகரிக்க அதிகரிக்க என் மனத்துப் பீதியும் அதிகரித்தது. நேற்று மாலை நடந்த சம்பவத்தைச் சாதாரணமானது என்று சொல்வதற்கில்லை. ராஜுவிற்கும் எனக்குமிடையே ஏற்பட்டிருக்கும் பிளவை, வாழ்வு பூராவும் இனி மறைத்துவிடுவது என்பது இயலாத காரியம். ராஜு எனது முகத்தை இனி ஏறெடுத்துக்கூட பார்க்கமாட்டான், எவ்வளவு வேண்டினாலும் அவன் செவி சாய்க்க மாட்டான். இச்சம்பவத்தினால் என் வாழ்வு களங்கமுற்றுக், கரைபட்டு, வீணாய்ப் பாழ்பட்டுவிட்டது என்பதில் சந்தேகமில்லை' என்ற நினைப்பு எழுந்தது.

இம்மாதிரி நிலையில், பொதுவாகத் தற்கொலை செய்துகொள்ளும் நோக்கம், பெண்களிடத்து உதித்து விடுகிறது. ஆனால் எனது உள்ளத்தில் மரிக்கும் நோக்கம் ஏனோ, எழவேயில்லை. எனது வருங்கால வாழ்க்கை ஆனந்தமற்றது, என்பதைச் சிந்திக்கும்பொழுது எனக்குத் துயரமாக இருந்தது.

'டாக்டர் இன்று வரவே மாட்டார்' என்பதை நான் திட்டமாய் அறிவேன். இருந்தாலும் எனது இருட்டு இதயத்தின் ஒரு மூலையில் சிறு நம்பிக்கை ஒளியொன்று மினுமினுத்துக்கொண்டிருந்தது. அவரை எதிர்பார்ப்பதிலேயே நன்கு இருட்டிவிட்டது. உணவருந்தும் நேரமும் நெருங்கியது. அவர் வருவதாயில்லை. பெரும் ஏமாற்றமடைந்தேன். அவர் வந்தால், உண்மையில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுமா என்பது சந்தேகந்தான்' ஆனால் இன்னும் அதிகமாகச் சங்கோசமடையத்தான் இடமுண்டு. இருந்தாலும் அவர் வராமல் வைத்தது, எனக்குப் பெரும் ஏமாற்றத்தைத்தான் அளித்தது.

இரவு பூராவும் பழைய விதமே தூங்கி வழிந்தேன். குறைத்தூக்கத்தில் அதே பயங்கரக்கனவுகளைக் கண்டேன்.

மறுநாள் சூரிய ஒளியில், முன்போலவே நம்பிக்கை ஒளி பிறந்தது, அடுத்த படியாக, அதே இரவுப் பயங்கரக்கனவுகள் தோன்றின. இதே போன்று நான்கு தினங்கள் மறைந்துவிட்டன. ராஜுவின் மனத்துள் ஒருவிதமாறுதலும் ஏற்படவில்லை. டாக்டரும் வரவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

அழைத்து வருவது? சரி, பார்க்கலாம் என்று வேலையில் ஆழ்ந்தாள்.

புதன்கிழமை காலை பலபலவென்று விடிந்தது. அதிகாலை எழுந்து, தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டாள். வேலைமேல் புத்தி செல்லவில்லை. காரை எடுத்துக் கொண்டு விமான நிலையம் சென்றாள். விமானம் வர ஒரு மணி நேரம் ஆகுமென்றறிந்தாள். அவளுக்குத் தன் நேசி தைரியாமேல் நினைவு சென்றது. அப்பொழுது தைர்யாவின் குடும்பமே ஒரு விசித்திரமான குடும்பம் என்பது நினைவு வந்தது. அப்பொழுது தைர்யா எட்டு வயதுச் சிறுமி. அவள் சகோதரன் சாண்டிஸ்னேடன் இருவரும் பெற்றோர்களுடன் மேல் நாடு செல்லும்போது அவர்கள் சென்ற கப்பல் மூழ்கி விட்டது. பாவம்! அவள் பெற்றோர்கள் கடலுக்கு இரையாகிவிட்டார்கள். அந்தக் கடலில் மூழ்கியவர்கள்போக மீதமுள்ளவர்கள் தப்பித்துக்கொண்டனர். அப்படித் தப்பித்துக் கொண்டவர்களில் தைர்யாவும் சாண்டிஸ்னேடனும் கப்பித்தானிடம் சிக்கினர். அவன் அவர்களிருவரையும் இங்கிலாந்தில் ஒரு பிரபு இடம் ஒப்படைத்தான். 'ஸ்னேடன்' என்ற அந்தப் பிரபு இந்திய நாட்டிலிருந்து இந்தியப் பழக்க வழக்கங்களை அறிந்தவராதலால் அவர்களிருவரையும் ஏற்றார்.

சாண்டிக்குப் பதினைந்து வயது. அவனை 'ஆக்ஸ்போர்டில்' சேர்க்கச் சென்றார் அவன் தந்தை. அவர் சர்க்கார் பேங்கில் மானேஜர். நல்ல நிலைமையில் இருந்தார். கப்பல் மூழ்கியதை அறிந்ததும் அவரது சுற்றத்தார்கள் அவர் சொத்துக்களை எடுத்துக்கொண்டனர். அவன் ஸ்னேடன் பிரபுவிடம் சேர்ந்ததும் தன் உற்றார் உறவினருக்குக் கடிதம் எழுத நினைத்தான். ஆனால் தன் அனாதரவான நிலைமையை எழுத மனம் ஒவ்வவில்லை. கடவுள் விட்டவழி என்றிருந்து விட்டான். அவன் மேல் நாட்டிலேயே படித்து முடிந்து ஸ்னேடன் பிரபுவின் செல்வாக்கினால் 'லாங்காஷைர்' பஞ்சாலையில் வேலை ஏற்றான். அவ்விடமே ஓர் உயர்குல மாது அவன் இல்லக்கிழத்தியுமானாள். தைர்யா ஸ்னேடன் எம், ஏ; பாஸ் செய்து இந்திய தேசத்தில் வேலை ஏற்றாள். இப்படி நினைத்துக்கொண்டிருக்கும்போது விமானம் வந்து

Madras Stockists:- M/s. RAJAN DRUG STORES
155, Nyniappa Naick Street, MADRAS.

விட்டது. 'உர்...ர்' என்ற விமான ஓசை. அவள் உள்ளத்துள்ளும் ஒரு ஜும்காரம். சிறு நடுக்கம். 'சாண்டிஸ்னோடன்' குதித்துவிட்டு வந்திறங்குவாரோ? குரூரமான முகமாயிருக்குமோ? எது எப்படி இருந்தாலும், "என் கண்களைவிட அண்ணாவின் கண்கள்தான் அதிக அழகு" என்று தைர்யா சொன்னது அவளுக்கு ஓர் ஆறுதலாயிருந்தது.

'ஸ்னோடன்' தன் சொந்தத்தில் அமைத்துக் கொண்டுவந்த விமானம் அது. விமானம் வந்து நின்றது. ஆசையுடன் ஆவல் ததும்பும் விழிகளைச் சுழற்றிக்கொண்டிறங்கினான் முப்பத்தைந்து வயதுள்ள ஆடவன்; ஆஜானுபாகு; அடர்ந்து சுருண்ட கிராப் பறந்து நின்றது. ஏழுவயதுச் சிறுவன் தீராஸ்னோடன் மெள்ள ஜன்னலருகிலிருந்து எட்டிப் பார்த்தான். "பப்பா!" என்றான். வித்யா தைர்யாவினிடமிருந்து பெற்ற புகைப்படத்தால் அவனை நன்கறிந்திருந்தாள். ஆனால் அவளுக்கு அவனை அணுகிக் கேட்க அச்சம். அவன் மின்னும் கண்கள் அவளை அதிரச் செய்தன. அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். வேலை செய்யும் சில கூலிகள், விமான நிலைய உத்தியோகஸ்தர்களைத் தவிர வேறு யாரும் காணவில்லை. ஆனால் மெல்லிய புடவையின்மேல் உல்லன் ஸ்வெட்டர். அழகிய ஸில்க் மப்ளர் தலையில். மெல்லிய போர்வை உடம்பை வளைத்துக்கொண்டோட மருண்ட பார்வையுடன் நிற்கும் வித்யாவைப் பார்த்தான். அவள் சாதாரண கிராம்யப் பெண் என்று நினைத்து, "கலோதயா கலாசாலை எங்கிருக்கிறது? அதன் தலைவி எங்கிருக்கிறாள்? சற்றுச் சொல்கிறீர்களா?" என்றான். அந்த உத்தியோகஸ்தரும் அவ்வூருக்குப் புதியவர். ஒரு கண்ணைச் சற்றுமூடி இடதுகைக் கட்டை விரலின் நகத்தைக்கடித்தபடி "நானோ இவ்வூருக்குப் புதியவன். சற்று இருங்கள்" என்று வெளியில் வந்தார். அங்கு வித்யா, ஸ்னோடன் கேட்பதைக் கேட்டபடியே நின்றிருந்தாள். அவளருகில் வந்து, "ஏனம்மா, உங்களுக்குத் தெரியுமா? கலோதயா கலாசாலைத் தலைவி எங்கிருக்கிறாள் என்று?" என்று கேட்டார்.

"இங்கு வந்திருப்பவர் அவர் சகோதரர் தானா?" என்றாள். ஸ்னோடன் வியப்புடன் அவளைப் பார்த்துத் தலையாட்டினான்.

"அப்படியானால் புறப்படலாமே!" என்று ஸ்னோடனுக்குச் சொல்லிவிட்டு, நிலைய அதிகாரியிடம் "சாமான்களை எல்லாம் இந்த விலாசம் பதித்த சீட்டைக் காண்பிக்கும் ஆளிடம் அனுப்பி வையுங்கள். நான் ஆளை அனுப்புகிறேன்" என்று தன் விலாசம் பதித்த சீட்டை அளித்துவிட்டுக் காருக்குச் சென்றாள். ஸ்னோடன் சில முக்கியமான சாமான்களை எடுத்துக்கொண்டு கார் ஏறினான். குழந்தை தீரா ஸ்னோடனை அருகில் வைத்துக்கொண்டு அவள் காரை ஸ்டார்ட் செய்தாள். அவளால் பேசமுடியவில்லை. அக் கண்களின் தீக்ஷண்யம் அவளை வெற்றி கொள்ளுகிறது. என்ன செய்வாள்? அவனோ எனில் 'இந்த அழகு மங்கையார்? நம் தைரியத்தின்......சே......சே ....என்ன கீழ்த்தரமான நினைவு. அப்படியிருக்க முடியாது. தைரியம் ஏன் வரவில்லை? அவளுக்கேதாகிலும் உடம்பு குணமில்லையோ? இப்படிச் சிந்தித்தபடியே. "தாங்கள் யார்? தைரியம் ஏன் வரவில்லை?" என்று கேட்டான்.

அவள் காரைப் 'புல் ஸ்பீடில்' விட்டபடியே "மிஸ் தைர்யம் ஸ்னோடன் ஜல்லந்தர் மஹிளா கலாசாலையில் வேலை ஏற்கச் சென்றார். நேற்று வேலையை ஏற்றுக்கொண்டிருப்பார். உங்கள் கேபிள்கிடைத்தது. நீங்கள் எத்தனையோ ஆண்டுகளுக்கப்பால் இந்திய தேசம் வருவதாய்த் தெரிகிறது. தாங்கள் என் இல்லத்தில் தங்கி, சற்றுஓய்வு எடுத்துக்கொண்டு பிறகு ஜல்லந்தர் செல்லலாம்."

"அப்படியா? என் சகோதரி இல்லையா? தாங்கள் யாரென்றறியலாமோ?" என்றான். அவன் புருஷத்வனி எத்தனை கம்பீரமாய்த்தானிருந்தது. அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் சொல்வதின்னதென்று அறியாமல் பச்சைக்குழந்தைபோல் "நான் மிஸ் வித்யாகுமாரி" என்றாள்.

"என்ன? என் தைரியத்தின் ஆருயிர் நெசியா? அவள் எழுதியிருக்கிறாள் தங்களைப்பற்றி. ஆனால் இவ்வளவு சீக்கிரம் சந்திப்பேனென்று கனவிலும் நினைக்கவில்லை......" என்று சொல்லும்போதே வீட்டு வாயிலில் கார் வந்து நின்றது. அவள் டக்கென்றிறங்கினாள். "மாத்ரு!" என்று சிறிய குரல் கொடுத்தாள். "ஜீ" என்றோடிவந்தான் ஆள்காரன். அவள் கண்களைச் சுற்றினாள். அவன் சாமான்களை உள்ளே கொண்டுபோய் வைத்தான். "நீ சாப்பிட்டுவிட்டு முதலில் விமான நிலையம் சென்று இவர் சாமானை எடுத்துவா! நான் கலாசாலைக்குச் சென்றுவிடுவேன். இக்குழந்தைப் பையனை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்" என்று தன் வேலை மேல் உள் சென்றாள்.

— 4 —

மேஜைமேல் ஆங்கிலமுறையில் மேல் நாட்டார் வழக்கப்படி காலையாகாரத்திற்கு வேண்டியவைகளெல்லாம் சித்தம் செய்து வைத்துக் காத்திருந்தாள். ஸ்னோடன் தன் மைந்தனுடன் காலைக்கடனை முடித்துக்கொண்டு வந்தான்; மேஜைக்கருகில் நிற்கும் வித்யாவைப் பார்த்தான், காலையில் அவள் கிராம்யப் பெண் போல் தென்பட்டவள் இப்பொழுது அழகான உடையுடன் சௌந்தர்யவதியாய் நிற்பதைப் பார்த்ததும் கண்களால் தின்று விடுபவன்போல் அவன் பெரிய கண்களை விரியத் திறந்து பார்த்தான். வித்யா தன்னைத்தடுத்து மறுக்கும் அவன் ஜ்வலிப்புள்ளகண்களைப்பார்க்கச் சக்தியற்றவளானாள். அவள் உடல் சிலிர்த்து ஆடியது. அதற்குள் குழந்தை ஸ்னோடன்

எச். எம். வி.யில்

ஸ்ரீமதி என். ஸி.

வஸந்த கோகிலத்தின்

புதிய வெளியீடு

N. 18239

{ தந்தை தாய்
ஷண்முகப்ரியா

எல்லா "எச். எம். வி."
கிராமபோன் வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

முன் வெளியிட்ட
அரிய ரிகார்டுகள்

N. 18206

{ ஞானகுருபர
பல்லவி & ராகமாலிகை

N. 18207

{ இந்த வரம்
-கரஹரப்ரியா
உதயசுந்தரி விருத்தம்

N. 18217

{ குழலோசை
ஆசைகொண்டேன்

N. 18219

{ ஆனந்த நடனம்
2 பாகங்கள் காம்போதி

N. 18229

{ ஆர்வத்தியால்
விருத்தம் 2 பாகங்கள்

சிறந்த சங்கீதம்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

சீரிய ஒலிப்பதிவு

HIS MASTER'S VOICE

ஊசிகளின்
புதிய விலைகள்

"எச்.எம்.வி."	ஹைபிடெலிடி 10 ஊசிகளுள்ள பாக்கெட்	1-க்கு ரூ. 1/8
,,	எஃகு ஊசிகள் 200 உள்ள டப்பி	1-க்கு ரூ. 1/8
"ட்வின்"	,, ,, ,,	1-க்கு ரூ. -/14

குதித்துக்கொண்டு வந்தான். அவள் அன்பாய் அக் குழந்தையை அழைத்தாள். அச்சிறுவன் அவளிடம் அணுகாமல் தந்தையருகில் போய் நின்றான். அவள் மௌனமாய்ச் சற்றுநேரம் நின்றவள் ''உட்காருங்கள்'' என்று சிற்றுண்டித் தட்டை அவர்களருகில் நகர்த்தினாள். அப்பையன் அழகிய தன் கொஞ்சும் மொழிகளால் "பப்பா! நாம் இங்கே அத்தையைப் பார்ப்போம் என்றாயே! அத்தையைக் காணோமே!'' என்றான். அவள் அவனைப் பார்த்து "ஸ்னோடன்!'' என்றாள். அதற்குமேல் அவள் பேசவந்தது வாயைவிட்டு வெளிவரவில்லை. ஏன்? ஏனோ அவளே அறிவாள்; அவனை அன்பாய்ப் பார்த்தாள். "நான் தீரன்'' என்றான் குழந்தை. அவன் நல்ல வெளுப்பு. ஆனால் இந்தியர்களின் கரிய கூந்தல். தந்தையை அறிவித்துக்கொண்டிருக்கும் அந்தக் கூர்மையான ஜ்வலிக்கும் கண்கள். அவள் உள்ளம் முழுவதும் அவன் கண்களின்பால் சென்று லயித்தது. அவனை அணைத்து ஒரு முத்தமிட்டாள். அவள் உடம்பு புல்லரித்தது. ஆவல் நிரம்பிக் கொந்தளிக்கும் அவள் உள்ளத்தில் ஒரு சாந்தி. இனிமை கலந்த துன்ப உணர்ச்சியொன்று ஒரு க்ஷணத்தில் எழுந்து மறைந்தது.

'சாண்டி ஸ்னோடன்' எதிரில் நிற்கும் நவயுவதியை மிருகராஜனைப்போன்ற கம்பீரத்துடன் கண்களால் தின்றுவிடுபவன்போல் ஆசைகொண்டமட்டும் பார்த்துக்கொண்டிருந்தான். இருவரின் மௌன அலைகளை மறுபடியும் "பப்பா'' என்ற குரல் கலைத்தது. மூவரும் மௌனமாய்ச் சிற்றுண்டியருந்தத் தலைப்பட்டனர். அவனுக்குமாத்திரம் இந்திய சௌந்தர்ய தேவியின் மேலிருந்த கவர்ச்சி அதிகமாய் வாயை அடைத்துவிட்டது. எதிர்பாராமல் தான் நினைத்த கடவுள் சர்வ மங்களுயைத் தன்முன் நிற்பதுபோல் தோன்றியது அவனுக்கு. ஆம், அவள் அகன்ற நெற்றி. அழகிய மயக்கும் சுடர் விழிகள். அக்கண்களின் தன்மையை எடுத்துச் சொல்ல நடுநிலைமையில் நிற்கும் செதுக்கி எடுத்த முக்கு. அதன் ஆழ்ந்த அடித்தளத்தில் உணர்ச்சிப்பெருக்கும் துள்ளலும் கொண்ட குமிழ் அதரங்கள். குழிகள் சுழியிடும் கன்னங்கள். பளிங்குபோன்ற நிர்மலமான முகத்தில் குழந்தையின் அமாயக நேர்மை மிதக்கும் புன்னகை. இதைக்கண்டதும் அவன் வைரம்கொண்ட உள்ளம் இறகு கட்டிக்கொண்டு வர்ணிக்க முடியாமல் குதிப்பதையறிந்தான், தன் காதலிக்காக. தன் மைந்தனையும் தன்னையும் விட்டுச் சென்ற 'ரொஸோரியா'வைத் தவிர்த்து வேற்றுவரை நினைத்துமறியாத தன் நெஞ்சம் குதிக்கும் குதிப்பைக் கண்டு......தனக்குத் தானே......மறந்து......விட்ட......அனுபவம்.........வெளியிட......முடியாத.........அனுபவம் துள்ளியது. ஆவல்......வட்டமிட்டது. ஆசை குதித்து......கும்மாளமிட்டது.

''தங்களுக்கு இந்த ஆகாரம் பிடிக்கவில்லையா?'' என்றாள். அவன் யோசனையிலிருந்து அடியுண்டவன்போல் விடுபட்டான். அவளைத் தன் ஜ்வலிக்கும் கண்களை அகலத்திறந்து பார்த்தான். காட்டுத் தீயின் ஜ்வலிப்பைப் பெற்று, உணர்ச்சிப் பெருக்கின் கொதிப்பைக் கக்கும் அக்கண்களில் மங்கையரை மறைத்து நிற்கும் மாயப்பார்வையை அகற்றி, இன்ப வலைவீசி இழுக்கும் தூண்டில் அவள் ஹிருதயமீனைப் பிடிக்கவந்தது. அவள் தலை கவிழ்ந்தாள். மெள்ளக் கவிழ்ந்த தலையைக் நிமிர்ந்தாள். அப்பொழுதும் அவன் அப்படியே அழியாச் சித்திரப்பதுமைபோல் நின்றிருந்தான். அவள் மனம் தற்பெருமையால் சற்றே மலர்ந்தது. அதன் நிழற்குறிப்புக் கன்னத்தில் சிவந்து மின்னியது. இவ்வித எண்ணத்திற்கே இடம் கொடாத வித்யாவுக்கும் மனதில் இவ்வித எண்ணம் தோன்றுவது.........அந்த எண்ணம்.........அவளுள்ளத்தில் நியாயமோ நியாயமில்லையோ...........அதைத் தடுக்க அவளால் முடியுமோ? முடியாதென்பதையறிந்தாள். அவள் பார்வையில் பயமென்ற காவலாளி மருண்டு மருண்டு நின்றான். மறுபடியும் உள்ளத்திலெடுக்கும் சிறு நடுக்கத்தையடக்கிக்கொண்டு "போதாயிடுத்தே! ஏதாகிலும் கொஞ்சம் எடுத்துக்கொள்ளலாமே!'' என்றாள். அது சொல்வதற்குள் அவள் எத்தனை எண்ணக் கோட்டைகளைத் தகர்த்தாள் தெரியுமா? அவன் தன்னிலை பெற்றான். ''ஆம், தீரா வா!'' என்று ஏதோ கொரிக்கத்தொடங்கினான். அவள் காபியைக் கலந்து அவனுக்களித்தாள். அவன் அதைப் பெறும்போது அவள் உள்ளத்தையே பெறுவதைப்போல் பயபக்தியுடன் அருமையாய்ப் பெற்றான். அவள் எதையளித்தாளோ நாம் அறியோம். அவள் மடமடவென்று தன்னறைக்குள் சென்றுவிட்டாள். அவள் பார்த்த அன்பின் அகன்ற வழியில் சென்ற நாட்களின் செடி கொடிகள் வெட்டி வீழ்த்தப்பட்டன. ஆனால் காதலும், இளமையும், உணர்ச்சியும் இன்பமும் சேர்ந்து நான் முந்தி நீ முந்தி என்று சச்சரவிடத்தொடங்கின.

5

அறைக்குள் ஓடியவள் மேஜைக்குமேல் மாட்டியிருக்கும் புகைப்படத்தை உற்றுப் பார்த்தாள். அவள் கரடுமுரடான வாழ்க்கைப்பாதையில் என்றாகிலும் சோர்வு ஏற்பட்டால் அவள் அந்தப் படத்தைத்தான் பார்ப்பாள். அச்சமயம் அவள் மனதின் அடித்தளத்தின் ஆழத்தில் மறைந்து கிடக்கும் ஒரு பொற்கதிர் பளிச்சென்று மின்னும். அப்படியே அதைப் பார்த்துச் சாந்தி பெற்றாள்.

வேலையாள் சாமான்களுடன் வந்துவிட்டான். சிறுவன், தீரன் ஒரு பந்தை எடுத்துக்கொண்டு தோட்டத்தில் நுழைந்தான். சாண்டிஸ்னோடன் வெராந்தாவில் சாய்வு நாற்காலி

மிஸ் வித்யா குமாரி

எம். எஸ். கமலா

"மிஸ் வித்யாகுமாரிக்கு சார்ஜ் ஹாண்டோவர் செய்துவிட்டு, உடனே புறப்பட்டு ஜலந்தர் கன்யாசிரமத்தின் தலைவிப்பதவி ஏற்கவும்."

"தாம்ஸன்"

ஸர்வகலாசாலை அதிகாரி என்ற அவசர உத்தரவைப் பார்த்ததும் கலோதயா கலாசாலைத் தலைவி 'மிஸ். தைர்யா ஸ்னேடன்' பரபரப்புடன் கவலையிலாழ்ந்தாள். அன்று மிஸ். வித்யாகுமாரி எம். ஏ. கலாசாலைக்கு வரவில்லை. அன்று விடுமுறை பெற்று அவ்வருடம் சர்வகலாசாலையார் பாடபுஸ்தகமாய் வைக்கப்போகும் தன் புஸ்தகப் பிரதியின் 'ப்ரூபை' திருத்திக்கொண்டிருந்தாள்.

"வித்யா! வித்யா!" என்றழைத்துக்கொண்டே நுழைந்தாள் முப்பது வயதுள்ள தைர்யா.

"ஓ... தாங்களா? வாருங்கள்... வாருங்கள்"

"என்ன செய்கிறாய்? என்னைக் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ள அவசர உத்தரவு வந்துவிட்டது. நாளை புறப்படவேண்டும்..." என்று சொல்லியபடியே அவளருகில் அமர்ந்தாள்.

"அட அவஸ்தையே! ஒரு விஷயத்தைப்பார்க்கப்போனால் நம் தாய்மார்கள் பாக்கியசாலிகள்."

"அது சுத்தத் தவறு. அவர்களுக்கு மாத்திரம் இப்பிடுங்கல் இருக்கவில்லையா? நம்மைவிட இன்னும் அதிகமாயிருந்தது. குழந்தைகளைக் கவனித்துக்கொண்டும் வீட்டுப் பொறுப்பு முழுதும் ஏற்றுக்கொண்டும் கணவன் கௌரவத்தை ரட்சிப்பதற்காக அதற்கேற்றபடி தங்களைத் தயார்செய்துகொண்டும், சுற்றிவந்தார்கள். நம்மால் அவ்வளவையும் திறம்படச் செய்ய முடியுமா? ஒருகாலும் முடியாது, என்னவோ படித்தோம். உத்தியோகம் செய்கிறோம். முடிந்தால் பண்ணிச் சாப்பிடுகிறோம், இல்லாவிடில் வாங்கிச்சாப்பிடுகிறோம். நம் வயதில் அவர்கள் கொண்டு கொடுத்து சம்பந்தம்கூட செய்துவிட்டார்கள் அல்லவா?" என்றாள்.

வித்யாவின் முகம் சுண்டிவிட்டது. அவள் மனம் எங்கோ சென்ற நாட்களைத் தேடியலைந்தது. தன் குழப்பத்தை அடக்கிக்கொண்டு, மெல்ல "அதென்னவோ எனக்குத் தெரியாது" என்றாள்.

"நீதானே சொன்னாய்! சரி, எழுந்திரு. என் வீட்டிற்குப் போய்விட்டு, அப்படியே கடைத்தெருமட்டும் போய் வரலாம்." என்றாள். தைரியா. இருவரும் வெகு ஒய்யாரமாய்ப் புறப்பட்டனர்.

'மிஸ் தைர்யா ஸ்னேடன் ஆக்ஸ்போர்ட் எம். ஏ., சுமார் முப்பது வயதிருக்கும் மாநிறம். மேல் நாட்டிலேயே சிறிய வயதிலிருந்து இருந்து வழக்கமாதலால் அவளுக்கு இந்தியப் பழக்கங்களின்மேல் பற்றுதலே இல்லை. புடவை ஒன்று கட்டுவாள்; மீதி எல்லா விஷயங்களிலும் மேல் நாட்டாரையே பின்பற்றுவாள். யாருடனும் நெருங்கிப்பழகமாட்டாள். கலோதயா கலாசாலைக்கு மிஸ். வித்யாகுமாரி வேலை ஏற்க வந்ததும் அவளிடம் மாத்திரம் அலாதி அன்பு அவளுக்குச் சுரந்துவிட்டது. வித்யாவுக்கும் தைர்யாவுக்கும் உயிர் ஒன்று உடலிரண்டு. கலாசாலையில் அவர்கள் தம்தம் வேலையைப் பார்த்துக்கொள்வார்கள். வீட்டிற்கு வந்துவிட்டால் இருவரும் ஒருள்ளம் படைத்தவர்கள். வீடும் அருகிலேயே இருந்தது.

— 2 —

அன்று தைர்யா புறப்பட்டுவிட்டாள். தேக்கச்சேரி, மாலைகள், புகைப்படம்—எல்லாம சரிவர நடந்தது. ஸ்டேஷனில் தைர்யாவை அனுப்ப அவள் அன்பிற்குள்ளான மாணவிகள் கலாசாலை ஆசிரியர்கள் யாவரும் வந்திருந்தனர். தைர்யாவும் வித்யாவும் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். "அப்படியானால் 'பூஜா ஹாலிடேஸ்'களுக்கு வந்துவிடு. இல்லாவிடில் எழுது. சொல்ல மறந்து போனேனே. எனக்கு வரும் கடிதங்களைப் பார்த்து முக்கியமாயிருந்தால் அனுப்பு" என்னும்போதே, ரயில் தான் புறப்படப்போவதை அறிவித்துக்கொண்டு சுருதி கூட்டியது. 'கார்ட்' நீ அனாவசியமாய் அலறாதே. நல்லதனமாய்ப் போய்ச்சேர். என்று பச்சைக் கொடியை ஆட்டினார். அது பஞ்சாய்ப் பறக்க ஆரம்பித்தது. பட்டுப்பூச்சிபோல் நிற்கும் பெண்களின் கடிகாரக்கைகளும் கங்கணக் கைகளும். கலகலவென்றுமேலெழும்பி, கையிலிருந்த கைக்குட்டைகள் காற்றினால் படபடவென்றாடின. பறவைக்கூட்டத்தில் ராஜாளிபோல் இத்தனை பெண்களின் மலர்க்கரங்களின் குலுங்கலுக்கு எதிர்ப்புறமிருந்து கம்பீரக்கை ஒன்றுதான் அசைந்தது. ரயில் மறைந்தது. வித்யா சோர்ந்து வீட்டிற்கு வந்தாள். அவள் கலாசாலையில் வேலை ஏற்றதிலிருந்து யாரிடமும் மனதைச் செலுத்தியதில்லை. தைர்யாவிடம் மாத்திரம் அவளை அறியாத பற்று உண்டு. அப்படித் தைர்யா

அழகா? இல்லை. நல்ல கறுப்பு. சற்றுப்பருமனாய்க் குட்டையாயிருப்பாள்; அகன்ற தட்டுப்போன்ற வட்டமானமுகம்; க்ஷணத்தில் கோபம் கொள்வாள்; படித்தவள் என்ற கர்வம் எவ்வளவு வேண்டுமோ அதற்கு மேலேயே ஐந்துபங்கு உண்டு. அவளிடம் யாரும் நெருங்கிப் பழகமாட்டார்கள். அப்படி இருந்தும் பொறுமைக்கும் அழகிற்கும் இருப்பிடமான வித்யா அவளை அளவு கடந்து நேசித்தாள். அவளை, அவள்பால் இழுத்தது தைர்யாவின் அஞ்சா நெஞ்சம் படைத்த தைர்யக் கண்களேதான். ஆம், அக் கண்களில் என்ன் இருக்கிறது? அக் கண்களுக்கிருக்கும் கவர்ச்சியின் சக்தி அவளுக்கல்லவோ தெரியும்.

தைர்யா கிறிஸ்தவப் பெண்; இன்னும் மணமாகவில்லை. அப்படி அவளுக்கொரு எண்ணமிருப்பதாய்த் தெரியவில்லை. வித்யா மணமானவளா? இல்லையா? என்பது ஒருவருக்கும் சரியாய்த் தெரியாது. அவளை மணப்பதற்காக எத்தனையோ பெரிய மனிதர்கள் வட்டமிட்டார்கள். அவள் தைர்யாவுடன் சுற்றுவதைப் பார்த்து எல்லோரும் அவளை அணுகப் பயந்தனர். தைர்யாவால் சற்றுச் சந்தோஷமாய்ச் சுற்றிவந்த வித்யாவிற்குத் தைர்யா சென்றதும் மிகமிகத் துக்கமாயிருந்தது.

வீட்டிற்கு வந்தவள் கட்டிலில் சாய்ந்து கண்ணை மூடிக்கொண்டாள். அவள் சிந்தனை எங்கோ சென்றது. அன்று அவள் தாயிடமிருந்து வந்த கடிதம் "வித்யா! இந்தச்சித்திரையில் கட்டாயம் 'விஜி'க்குக் கல்யாணம் செய்ய வேண்டும். குறைந்த பக்ஷம் ஆயிரம் ரூபாய் வேண்டும். முக்காலும் 'பிந்துமாதவன்' பிள்ளைக்குத்தான் நிச்சயிப்பதாயிருக்கிறேன். இவள் கல்யாணமாகிவிட்டால் இன்னும் நாலு வருஷத்துக்கு விசாரமில்லை. 'ஸந்த்யா' இன்னும் அப்படியே இருக்கிறாள். நீ சம்பாதித்தும் உனக்குச் சுகமில்லை. தினமும் ரெண்டுபடி வெண்கலப்பானைதான் வடிக்கிறேன். எலையில் ஒரு கரண்டி சாதம் வைக்க குடுத்து வைக்கல்லை. நீ சம்பாரிச்சு அனுப்பறதை கரச்சுண்டு ஒக்காந்திருக்கேன். 'விஜி' சமத்தாதான் படிக்கறா. ஆனால் என் உயிருள்ளமட்டும்..............வித்யா! நம் வம்சப் பெயரைக் கெடுக்க நான் தயாராயில்லை. எனக்குப்பின் எப்படியோ இருங்கள். நான் பார்க்கவா போறேன்?' அவ இருக்கும்போதே அப்படியாச்சு' என்ற கெட்டபேர் எனக்குவேண்டாம். உன் விஷயம் உங்கப்பாவால் நடந்தது. அதற்கு நான் பொறுப்பாளியல்ல. நீயாவது சம்பாதிக்கக் கண்டுதானே சந்த்யாவின் குடும்பம் நடக்கிறது. சுதர்சனன் இன்னும் ஜெயிலில்தான் இருக்கிறான். உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்.

உன் தாய் ''ராஜசுந்தரி''

அவள்கண்கள் நீரைக் கக்கியது. அவள் மனம் நிலை கொள்ளவில்லை. எழுந்து விளக்கைப் போட்டு மேஜைக்குமேல் மாட்டியிருக்கும் படத்தைப் பார்த்தாள். அப்படத்தில் ஜ்வலிக்கும் கண்களையுடைய ஒரு கம்பீர ஆடவனின் முகம் வெகு அழகாய் ஒருபுறமாய்ச் சாய்ந்து இவளைப் பார்த்தது.

— 3 —

ஸ்ரீமதி வித்யாகுமாரி எம். ஏ., கலோதயா கலாசாலையின் ஆங்கில ஆசிரியை. மாதம் 800 ரூபாய் சம்பளம். அவள் இல்லத்தில் ஒரு வேலையாள் மாத்திரம் இருக்கிறான். ஏதோ தூரத்து உறவு ஊமைப் பெண் ஒருத்தி அவள் வீட்டு வேலையைக் கவனித்துக்கொள்கிறாள். வித்யா கலாசாலை செல்லும் நேரம் தவிர மீதி நேரங்களில் குடும்ப வேலைகள் முழுவதும் செய்வாள். ஒரு சிறிய 'ஆஸ்டின்' கார் உண்டு. அதை அவளே ஓட்டிக்கொண்டு கலாசாலை செல்வாள். வேலையாள் எப்பொழுதும் வீட்டுடனிருந்து வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்தைக் கவனித்துக்கொண்டு வீட்டைக் காத்திருக்கவேண்டும். வித்யா சிக்கன வாழ்க்கை நடத்துபவள்.

வித்யாவின் சகோதரன் சுதர்சனன் சுதந்திர தாஹி. நாம் ஆயுளில் பாதியைத் துக்கத்தில் கழிப்பதைப்போல், வருடத்தில் 360 நாளும் சிறையில் கடத்துவான். தந்தை தயானந்தர் குடும்பத் தொல்லைகளால் மனமுடைந்து மாண்டார். 'வித்யா' வித்யாஸக்தையாய் (கல்விமேல் ஆர்வமுள்ளவளாய்) இருந்ததால் வெகு சீக்கிரம் படித்து, 'எம். ஏ.' பட்டம் பெற்று வேலை ஏற்றாள். தந்தை இறந்துவிட்டார். அவர்கள் பூர்வீக கிராமத்தில் சிறு வீடு ஒன்றுதான் மீதமிருந்தது. அச்சமயம் 'சந்த்யா' நான்கு குழந்தைகளுடன், அவள் கணவன் குடி, கூத்தி முதலிய துர்நடத்தைகளால் சொத்தை இழந்து உயிரையுமிழந்தானாதலால் அனாதரவான நிலையில் தாய் வீட்டைந்தாள். வித்யாவின் தாய், ராஜசுந்தரி, சம்சாரியான தன் பெண்ணுடன் கிராமத்தில் வித்யா அனுப்பும் ரூபாயுடன் காலத்தைக் கடத்துகிறாள் சந்த்யாவின் பெண் 'விஜி'க்குப் பதினைந்து வயதாகிறது. அதற்குள் விவாஹம் என்று சிந்தித்துக்கொண்டிருக்கும்போது ஒரு 'கேபிள்' (கம்பியில்லாத் தந்தி) வந்தது.

''தைர்யா!

நான் மாஸ்டர் திரா ஸ்னோடனுடன் ஏடன் வந்து விட்டேன். புதன் கிழமை மாலை 'டம்டம் ஏரோட்ரோமில்' வந்திறங்குகிறேன், வந்து சந்திப்பாய்.

சீரியோ, உன் அன்புள்ள சகோதரன்
சாண்டி ஸ்னோடன்.

அந்தக்கேபிளைப் பார்த்ததும் வித்யா திகைத்தாள். அட கிரகசாரமே! இப்போதுதானே ரயிலேற்றி விட்டுவந்தேன். யார் போய் அவரை

யிலமர்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான். அவள் உடையுடுத்து, வெகு கவர்ச்சியாய் அலங்கரித்துக்கொண்டு, வெளியில் வந்தவள் அவனைப்பார்த்து "நான் கலாசாலைக்குப் போய் ஒருமணி நேரத்தில் வந்துவிடுகிறேன்" என்று சொல்லிச் சென்றாள்.

மறுபடியும் அவன் மனதில் யோசனை மேகங்கள் புரண்டோடத் தொடங்கின. இந்திய தேசத்தைவிட்டு இருபதாண்டுகளாகின்றன. தாய்ப் பாஷையைக் கேட்டும், தாய்நாட்டு உணவருந்தியும்............அந்தோ! தாய் தந்தையருடன் மேல்நாடு செல்லும்போது எத்தனைவித இந்திய தின்பண்டங்கள் தன் தாய் செய்து எடுத்துவந்தாள். இன்று இவள் தன்னை எப்படி உபசரிக்கப்போகிறாளோ? தனக்குத் தாய்நாட்டின்மேல் எத்தனை பற்றோ, அத்தனை பற்று மேல்நாட்டின்பேல் தைர்யாவுக்கு. அவள் தன்னைப்பற்றி இவளிடம் என்ன சொல்லியிருக்கிறாளே? நானாய் ஒன்றும் சொல்லிக்கொள்ள முடியவில்லை. இவள் கல்யாணமானவளா? இல்லையா? அல்லது விடோவா? ஒன்றும் புரியவில்லையே! ஆனால் மிஸ் 'வித்யாகுமாரி' என்கிறாளே! இவளுக்குக் கல்யாணமாயிருந்தால் கணவனுடனல்லவா இருப்பாள்......இப்படி, பல......பல சிந்தனையிலாழ்ந்தபோது. "நேரமாய்விட்டதா? இதோ ஒரு நொடியில் இலை போடுகிறேன்." என்று மடமடவென்று உள்ளே சென்றாள்.

அன்று அவள் அன்பான உபசரிப்பு அவனை எங்கோ அழைத்துச் சென்றது. இந்த உலக மகாயுத்தம் வந்து இங்கிலாந்தைவிட்டு வெளியேறியதும் நன்மைக்குத்தான் என்று நினைத்தான். இரவு விளக்கு வைப்பதற்கு முன் அயர்ந்து தூங்கிவிட்டான்; ஆனால் அவள் படுக்கை கொள்ளாமல் புரண்டுகொண்டிருந்தாள். இதென்ன அதிசயம்? அவர் யாரோ? தான் யாரோ? ஏன் பாழாய்ப்போன இந்தக் கொந்தளிப்பு. கடவுளே! ஏன் என்னைச் சோதிக்கிறாய்?' என்று கண்ணீர் வடித்தபடி புரண்டாள்.

மறுநாள் மாலை அவன் தன் சகோதரியைப் பார்க்க ஜல்லந்தர் செல்லப்போகிறான். அன்று அவனை வெகு அன்பாய் உபசரித்தாள். அவன் தன் மனதை அவளிடம் வெளியிடத் துள்ளினான். ஆனால் சமயத்தை எதிர்பார்த்தான். பகல் பன்னிரண்டு மணி வரை வீட்டிலிருந்தாள். அவள் கையாலேயே எல்லாவித உபசரிப்பும். அவனுக்கே ஆச்சரியமளித்தது. 'என்ன விசித்திரம்; ஒரு பெரிய வேலையிலிருக்கும் எம். ஏ. பட்டதாரி; ஏழை ஸ்திரீயைப்போல் வீட்டு வேலையைத் தானே செய்துகொள்வதா?' என்று ஆச்சரியப்பட்டான். அன்று அவள் தன்னுடன் குழந்தை தீரனை அழைத்துக்கொண்டு கலாசாலைக்குச் சென்றாள். அவள் விடுமுறையைப் பெறவும் முடியாத நிலை. வேலை ஏற்றபுதிது. இரண்டு மணி நேரம் கலாசாலை வேலையைச் செய்தாள். இவ்விடம் ஸ்னோடனுக்குப் பொழுதுபோகவில்லை, அவ்வீட்டை முழுதும் பார்க்கத் தொடங்கினான். அவள் சயன அறையில் அவள் பட்டமளிப்பு விழாப்படமொன்று. கட்டிலிற்கருகிலிருக்கும் ஒரு சிறு திறந்த பீரோவினுள் சில அற்புதப் பொருள்கள். சலவைக்கல் 'தாஜ்மஹால்'. சிலோன் புத்த விக்ரஹம். பர்மா மணிகளால் செய்யப்பட்ட பர்மீய சுந்தரிகள். திருவனந்தபுர தசாவதார தந்த விக்ரகங்கள். ஜப்பானியர்கள் கைத்திறனைக் காண்பிக்கும் காட்டு எருமைக் கொம்பினால் செய்யப்பட்ட இரண்டு யானைகள் தும்பிக்கையைத் தூக்கிக்கொண்டு நிற்கின்றன. அத்துதிக்கைகளுக்கிடையில் வெள்ளிப்பூண் போட்ட சிறிய கல்யாணப் புகைப்படமொன்று, அதன் கீழ் "வித்யுல்லதா, சாண்டில்யமுகர்ஜீ" விவாஹம் 5—5—19........ என்றும். அதன் கீழ் 9—9—19......மூழ்கி மறைந்த "ஸ்வீட்ஹார்ட்" கப்பல் என்ற பத்திரிகைப்படமொன்று யானைகளின் கால்களுக்கிடையில் வைக்கப்பட்டிருந்தது. அவன் தன் கைகளை எடுத்துத் தன் ஹிருதயத்தைப் பிடித்துக்கொண்டான். புகைப்படத்தை எடுத்தான் நன்கு உற்று உற்றுப் பார்த்தான். அவன் கைகள் நடுங்கின. வியர்த்து உடல் நனைந்துவிட்டது. மெள்ளத் தன்னைச் சமாளித்துக்கொண்டு அப்படியே சற்றுநேரம் தன்னை

இழந்த சக்தி

மூல சக்தியை இழந்து தாம்பத்ய வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லையா? அப்படியானால்—

ஜாய் கெமிகல் ஒர்க்ஸ்

தயாரிக்கும்

ரேஜுவெண்டா வை

இன்றே உபயோகியுங்கள்

3 மணி நேரத்தில் நல்ல பலன் அளிக்கும் புத்துயிர், ஊக்கம், வலிமை வரும். ஸ்திரீகளின் போக வெறுப்பை நீக்கும்.

பாட்டில் ஒன்றுக்கு	ரூ. 2—8—0
டஜன் பாட்டில்கள்	ரூ, 27—0—0

வினியோகிப்பவர்:—

டாக்டர் R. மோஹலநோவிஸ்,
போஸ்ட் பாக்ஸ் நெ. 10013, கல்கத்தா.

குறிப்பு:—நம்பத்தகுந்த ஹோமியோபதி, பயோ கெமிக் மருந்துகள் டிராம் ஒன்றுக்கு ரூ. 0—3—6 வீதம் ஷை விலாசத்தில் கிடைக்கும்,

மறந்துநின்றான். எடுத்த படத்தை அது இருந்த இடத்தில் வைத்தான். அவ்விடம் விட்டகலக் கால்கள் அசையமறுத்தன. மெள்ளத்தன் சாமான்களிருக்கும் அறைக்குச் சென்று ஒவ்வொரு பெட்டியாய்த் திறந்து எதையோ தேடினான். அவனுக்குக் கிடைக்கவில்லை. அவன் தேடும் பொருள் கிடைக்காமல் போகவே அதன்மேல் இன்னும் ஆர்வம் அதிகமாய்விட்டது. அதை எவ்விடம் வைத்தோம் என்று நினைத்து நினைத்துப் பார்த்தான். நினைவு வரவில்லை. "மாத்ரு!" என்றழைத்தான். அவன் வந்ததும் நன்றாய் ஆணிபோட்டு அறைந்திருந்த பெட்டிகளை எல்லாம் பிரிக்கச்சொல்லிக் கொச்சை கொச்சையாய்ச் சொன்னான். அவனும் அதன் படி செய்தான். அவன் அவசர அவசரமாய் ஆவலுடன் தேடத்தொடங்கினான். அவ்வளவு ஆவலுடன் தேடும் அந்த அதிசயப் பொருள் யாதோ, யாரறிவார்? எல்லாப் பெட்டிகளையும் திறந்து தாறுமாறாய் இழுத்து, கீழும் மேலும் புரட்டிப் பார்த்தான். சில விலைபெற்ற பொருள்...கள்......கீழே கிடந்தன. அவைகள் மேல் அவன் புத்திசெல்லவில்லை. ஆனால் அந்த அருமையான பொருள்...........? அவன் கண்களில் நீர்கூடத் தளும்பிவிட்டது. தன் கைப் பெட்டியைத் திறந்தான். அதன்மேல் சிரித்துக்கொண்டே மேல் நாட்டு நாகரிகத்துடன் கையிலோர் குழந்தையுடன் 'மிஸஸ் ரொஸோரியாஸ்னேடன்' என்று எழுதப்பட்ட புகைப்படமிருந்தது. அதைக்கூட அவன் லக்ஷியம் செய்யாமல் எடுத்துக் கீழே வைத்தான். உடனே என்ன தோன்றியதோ, கீழே வைத்த அந்தப் படத்தைக் கையிலெடுத்துப் பார்த்தான். மறுபடியும் அதைக் கீழே வைத்து விட்டுத் தான் தேடும் பொருளின்மேல் நாட்டம் கொண்டான். தன்னுள் தானே 'எல்லாவற்றையும் நானே பேக் செய்தேன். அதை நானேதான் எடுத்து வைத்தேன். நன்றாய் நினைவு இருக்கிறது. எங்கும் வைக்கவில்லை. எங்கு மாயமாய் மறைந்து விடும்' என்று விரல்களை மடக்கிக்கொண்டு தன் நெற்றியில் தட்டிக் கொண்டான். சட்டென்று நினைவு வந்தது. கைப் பெட்டியிலிருக்கும் ஒரு சிறிய மரப்பெட்டியை எடுத்தான். ஆவலுடன் அதைத் திறந்தான். அவன் முகத்தில் இத்தனை நேரமிருந்த பரபரப்பு அடங்கி அளவற்ற ஆனந்தம் பொங்கியது. அவன் ஜ்வலிக்கும் கண்கள் தம் ஆனந்த ஜ்வாலையை நாற்புறமும் வீசின. கீழேவைத்த புகைப் படத்தை எடுத்துக்கொண்டான். மற்றவைகள் எல்லாம் அப்படியே கிடந்தன. அவள் சயன அறைக்குள் ஓடினான். மரப்பெட்டியிலிருந்து ஒரு சிறிய டயரியை எடுத்தான். டயரியைத் திறந்தான். அன்றைய தேதியைக் குறிப்பிட்டு, "என் மனைவியைச் சந்தித்த ஸ தினம். உலகமகாயுத்தம் எனக்கு நன்மையை ஊட்டியது. சாண்டில்யமுகர்ஜீ" என்றெழுதினான். அந்த டயரியைப் புகைப்படத்தின் கீழ் வைத்தான். தங்க இதழ்களால் செய்யப்பட்ட அந்த மெல்லிய டயரியில் பச்சை மையால அழகுபெற எழுதியிருந்த அந்த எழுத்துக்கள் மரகதமணிகள் போன்றிருந்தன. சுவரில் மாட்டியிருந்த அவள் படத்தைக் கழற்றினான். மார்பில் அழுத்திக்கொண்டு அவள் கட்டிலில் சாய்ந்தான். அவன் ஹ்ருதயம் படபடத்தது. அவன் கண்களிலிருந்த கம்பீர ஜ்வலிப்பு அப்படத்தைப் பார்த்ததும் தணிந்தது.

கடைத்தெருவில் 'தீரனுக்கு' வேண்டிய விளையாட்டுப் பொருள்களை வாங்கிக்கொண்டு வேகமாய் வீட்டிற்கு வந்தாள். சாமான்கள் தாறுமாறாய் விழுந்திருப்பதைப் பார்த்து இன்னும் மூட்டை கட்டியாக வில்லையோ என்று நினைத்தவளாய் "மாத்ரு! சற்று இவைகளை ஒழுங்காய் எடுத்துக் கட்டக்கூடாதா!" என்று சொல்லியபடியே தன் அறைக்குள் நுழைந்தாள். அவள் கட்டிலில் படுத்திருக்கும் அவனைக்கண்டதும் அவள் உள்ளத்திலெழும்பியது ஆசாஜோதி. அப்படியே அதிர்ந்து நின்றாள். அதற்குள் 'தீரஸ்னேடன்' பப்பா!" என்றழைத்துக்கொண்டு ஓடோடிவந்தான். தந்தை பேசாமலிருக்கவே அவன் கையிலிருக்கும் புகைப்படத்தைப் பிடுங்கினான். அவன் கைகள் கீழே தொங்கின. வித்யா வீரிட்டாள்.

ஏழுவயதில் தன்னை மணந்து, மணந்த நான்காம் மாதமே 'ஸ்வீட் ஹார்ட்' கப்பலில் மேல்நாடு சென்ற தன் கணவன், குடும்பம் முழுவதும் மூழ்கிவிட்டதென்று நினைத்திருந்த தன் கணவன், அதிலிருந்து தப்பிப் பிழைத்து 'ஸ்னேடன்' பிரபுவால் ஆதரிக்கப்பட்டு, 'சாண்டில்ய முகர்ஜீ' என்ற பேரைத் துறந்து 'சாண்டி ஸ்னேடன் என்று ஞானஸ்னானம் பெற்று, அவர் பணம் பாக்கியம் எல்லாம் பெற்று, அங்கேயே நிலைத்துவிட்ட தன் கணவன், உலக மகாயுத்தச்சாக்கினால் தாய் நாடு வந்து, தன்னில்லத்திலேயே தன் கட்டிலில் மாண்டு கிடப்பதைப் பார்த்ததும் மனம் விண்டுவிடும்போலாகிவிட்டது.

மிஸ் வித்யாகுமாரி 'தீரநாத்மூகர்ஜியை' வெகு அன்பாய் வளர்க்கிறாள். அன்றும் இன்றும் என்றும் 'மிஸ் வித்யா குமாரிதான்' வித்யுல்லதை.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.